


விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c

தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 228 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 27,திங்கட்கிழமை 11.07.2016


# கொழும்புக்கு நாளை வருகிறார் பிஸ்வால்

## அரசு, கூட்டமைப்புடன் முக்கிய பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 11

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வால், மூன்று நாள் பயணமாக நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு வருகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை நாளை மறுதினம் புதன்கிழமை பிஸ்வால் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

நிசாவின் இலங்கைப் பயணத்தில் அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளர் மன் பிரீட் சிங்கும் இணைந்துகொள்வார்.

'அரசியல் தலைவர்கள், மூத்த அரச அதிகாரிகள், சிவில் சமூகத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து பிஸ்வால் முக்கிய பேச்சு நடத்தவுள்ளார். ஜனநாயக ஆட்சி, நல்லிணக்கம் மற்றும் இருதரப்புப் பொருளாதார ஒத்துழைப்புக் குறித்து இவர்கள் கலந்துரையாடுவார்கள்' என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

> பொறுப்புக் கூறல் விடயத்தில், வெளிநாட்டு நீதிபதிகளை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது தொடர்பிலும், கூட்டமைப்பு பிஸ்வாலிடம் எடுத்துக் கூறும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் மெத்தனப்போக்கு காட்டப்படுவது தொடர்பில் கூட்டமைப்பு பிஸ்வாலுக்குச் சுட்டிக்காட்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொறுப்புக் கூறல் விடயத்தில், வெளிநாட்டு நீதிபதிகளை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது தொடர்பிலும், கூட்டமைப்பு பிஸ்வாலிடம் எடுத்துக் கூறும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில், வெளிநாட்டு நீதி பக்.23

# பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் இடைநிறுத்தம்

கிளிநொச்சி, ஜூலை 11

இராணுவ வசம் உள்ள தமது காணிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் ஆரம்பித்த சுழற்சி முறைப் போராட்டத்தை பரவிப்பாஞ்சான் மக்கள் தற்காலிகமாகக் கைவிட்டனர். தமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்க 15 நாள்கள் அவகாசம் வழங்கியுள்ளனர். தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் அவர்கள் அறிவித் தனர்.

(விரிவு பக்கம் 7)

# வடக்குக் கல்வி நியமனங்களில் தேவையற்ற அரசியல் தலையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியமனங்களில் அரசியல்வாதிகளின் தேவையற்ற தலையீடுகளும், பிரதேசவாதங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளது.

அரசியல் அதிகாரங்கள் தேவையற்ற விதமாகக் கல்வியில் குழப்பங்களை உருவாக்க முயலுமாயின், அது வடக்கு மாகாணக் கல்வியில் மீளமுடியாத பின்னடைவை உருவாக்கிவிடும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் எச்சரித்தார்.

(விரிவு பக்கம் 8)

# வடக்கில் நாளை மீனவர் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 11

வடக்குக் கடற்பரப்பில் இந்திய, இலங்கை இழுவைமடி மீன்பிடிப் படகுகளின் தொழிலை நிறுத்தக் கோரி நாளை செவ்வாய்க்கிழமை போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் உள்ள நான்கு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களும் இணைந்து போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

(விரிவு பக்கம் 8)

# வவுனியா பொருளாதார வலய இடத்தெரிவில் இறுதி முடிவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 11

வவுனியா பொருளாதார வலயம் நிறுவப்படுவது தொடர்பில் நேற்றைய தினமும் முடிவெடுக்கப்படவில்லை. இன்னும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள் முடிவு எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

"பணத்தை திரும்பிச் செல்ல விடமுடியாது. பொருளாதார வலயத்தை விரைவில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று முதலமைச்சரிடம் வலியுறுத்தினேன். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அவரும் குறிப்பிட்டார்" என்று மாவை தெரிவித்தார்.

பொருளாதார வலயம் அமைக்க அடையாளப்படுத்தப்பட்ட தாண்டிக்குளம், ஓமந்தை மாணிக்கர்வளவு, ஓமந்தை வேப்பங்குளம் காணிகளை மாவை.சேனாதிராசா நேற்று முன்தினம் பார்வையிட்டார். அதன்பின் நேற்று ஞாயிற்றுக் கிழமை வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினார்.

சுமார் 45 நிமிடங்கள் வரையில் நீடித்த இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்ததாவது:

பொருளாதார வலயம் நிறுவும் விடயத்தில் ஏற்கனவே காலதாமதமாகி விட்டது. இன்னும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள் முடிவு எடுக்கவேண்டும். பொருளாதார வலயம் அமைப்பதற்கு முதலமைச்சர் அடையாளப்படுத்திய காணிகளையும் அதன் சாதக பாதகத்தையும் அவருக்குத் தெரியப்படுத்தினேன்.

அதில் வேப்பங் பக்.23

முச்சந்தி முரளி



பல எலி கூடினால் புற்று எடுக்காது பாருங்கோ...

# மாணிக்கர்வளவுக் காணியை மீளப்பெற 3 மாதங்களாகும்

## வடக்கு காணி ஆணையாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஓமந்தை-மாணிக்கர்வளவுக் காணியைப் பொருளாதார வலயம் அமைப்பதற்காக தனியாரிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்வதாயின் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களாவது செல்லும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு அறிக்கையிட்டார் மாகாணக் காணி ஆணையாளர்.

வவுனியா பொருளாதார வலயத்தை நிறுவுவதற்கான காணியை அடையாளப்படுத்துவதில் சர்ச்சை நீடித்து வருகின்றது. ஓமந்தை மாணிக்கர்வளவு மற்றும் வேப்பங்குளம் காணிகளின் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தருமாறு, வடக்குகாணிஆணையாளரிடம் முதலமைச்சர் கேட்டார்.

இரு காணிகளும் ஆராயப்பட்டு அறிக்கைவழங்கப்பட்டது. மாணிக்கர்வளவுக் காணிதனியாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைச் சாதாரண நடைமுறையின் கீழ் பொருளாதார வலயம் அமைக்கப் பெற்றுக்கொள்வதாயின் ஆகக் குறைந்தது 3 மாத காலமாவது செல்லும்.

காணி உரிமையாளர் வழக்குக் பக்.23

# நீதியரசர் சிறிபவன் ஒரு தமிழர் அவரை ஏன் தமிழர்கள் நம்பமுடியாது

## போர்க்குற்ற உள்நாட்டு விசாரணைக்கு அவர் தகுதியான நீதிபதிகளை நியமிப்பாராம்

கொழும்பு, ஜூலை 11

தமிழ் இனத்தைச்சேர்ந்ததலைமை நீதியரசர் சிறிபவனை, சிங்கள அரசியல்வாதியான நான் நம்புகின்றேன். ஏன் தமிழ் மக்கள் அவரைநம்பமுடியாது? தலைமை நீதியரசரே தகுதியான நீதிபதிகளை போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறைக்கு நியமிப்பார்.

இவ்வாறு தெரிவித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்த சட்டத்தின் மூலம் நீதிச் சேவை ஆணைக்குழுவானது சுயாதீனமாக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் தலைவரான தற்போதைய தலைமை நீதியரசர் ஊடாக சர்வதேச ஆலோசனைகளைப் பெற்று விசாரணைப் பொறிமுறைக்கு உள்நாட்டு நீதிபதிகளை நியமிக்க முடியும். இவ்வாறு செய்வதன் மூலமே இனவாதிகளின் வாயை மூடி நீதியை நிலைநாட்ட முடியும்.

தலைமை நீதியரசர் தகுதியான நீதிபதிகளை இந்த விசாரணைப் பொறிமுறைக்கு நியமிப்பார். மாறாக வெளிநாட்டு நீதிபதிகளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக் கோருமாயின் இந்த விடயம் இனவாதிகளின் கைகளுக்குள் பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் பெரும்பான்மை இனத்தவரின் குடியேற்றங்களால் முல்லை. மக்கள் அச்சம்





முல்லைத்தீவு, ஜூலை 11
முல்லைத்தீவில் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மற்றும் இராணுவ மயமாக்கலின் மற்றுமோர் பிரதேசமாக ஏ-9 வீதியை அண்டிய பகுதிகளும் மாற்றமடையப் போகின்றன.
இவ்வாறு அச்சமும், கவலையும் வெளியிடுகின்றனர் முல்லைத்தீவு மக்கள்.
"முல்லைத்தீவு மாவட்டத்தின் தென்முனையூடாக பெரும்பான்மையினக் குடியேற்றம், பெரும்பான்மையினத்தவர்களின் பண்ணை என ஆக்கிரமிக்கப்பட்டன. மாவட்டத்தின் மணலாறு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பெரும்பான்மையின குடும்பங்கள் குடியேறியுள்ளன.
தமிழ் மீனவர்களின் சொந்த இடங்களான கொக்குதொடுவாய், நாயாறு கரையோரப் பகுதிகளும் பெரும்பான்மையின மீனவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வாடிகள் அமைக்கப்பட்டன. மகாவலி வலயம் என்ற போர்வையிலும் பல ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்பான்மையின மக்கள் குடியேற்றபட்டனர்.
இதேபோன்று மாவட்டத்தின் வனப் பிரதேசங்களில் இராணுவ முகாம்கள், புதிது புதிதாக முளைக்கும் விகாரைகள் எனவும் பெரும்பான்மையினரின் ஆக்கிரமிப்பு தொடர்ந்த வண்ணமுள்ளன.
ஏ-9 வீதியில் கிழக்குத் திசையில் கொக்காவில் முதல் முறிகண்டி வரையில் உள்ள சுமார் 6 கிலோ மீற்றர் நீளமான இடப்பரப்பில் உள்ள காட்டுப் பிரதேசத்தையும், முறிகண்டி சிவநகர் கிராமத்தில் மக்கள் குடியிருப்பையும் இணைத்து 2 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை இராணுவத்தினர் ஆக்கிரமித்து முகாமிட்டுள்ளனர் . அவ்வாறு முகாமமைக்கப்பட்ட பகுதியை அண்டியுள்ள மேலும் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகக் காணப்படுவதால் அந்த இடங்களில் எந்தவிதமான அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை.
இராணுவத்தினரின் முகாம் அமைந்துள்ள வனப் பகுதிகளுக்கு ஏ-9 வீதியில் இருந்து செல்லும் குறுக்கு வீதிகள் அனைத்தும் மணல் வீதிகளாக காணப்படுகின்றபோதும், முகாமைச் சூழ தார்ப்படுக்கை வீதிகள் அமைக்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த இராணுவ முகாம் விரிவாக்கப்படுவதுடன் , முகாம்களை அண்டிய பகுதிகளில் பெரும்பான்மையினக்குடியேற்றத்துக்கானமுனைப்புக்களும் இடம்பெற்று வருகின்றன. இதனால் ஏ-9 வீதியை அண்டிய பகுதிகளும் சிங்களமயப்படுத்தலுக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சுகின்றோம்" என்று முல்லைத்தீவு மக்கள் தெரிவித்தனர்.
இந்தத் தொடர் இராணுவ வலயத்தினுள் பல தமிழ் மக்களின் வாழ்விடங்கள், வாழ்வாதார நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. காட்டைச் சூழ காவலரண்கள், முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு யாரும் உட்புகாதவாறு ஆக்கிரமிக்கப்பட்டன. இதன் அருகில் அம்பகாமம் பகுதியில் 6 ஆயிரத்து 500 ஏக்கரும், கிளிநொச்சி இரணைமடுப்பகுதியில் 2 ஆயிரம் ஏக்கரும் இராணுவ ஆக்கிரமிப்பு வலயங்களா கவே காணப்படுகின்றன. (வ-21,101)

## காங்கேசன்துறை சிமெந்து ஆலை காணியில் 2 ஏக்கர் பொலிஸாருக்கு

### யாழ். மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமான 2 ஏக்கர் காணி, பொலிஸ் நிலையம்அமைப்பதற்குவழங்கப்படும் என யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ். மாவட்ட சிவில் நிலை தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது யாழ். மாவட்டச் செயலாளர் தெரிவித்ததாவது:
காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு இடம் வழங்குமாறு 2004ஆம் ஆண்டிலிருந்து மாவட்டச் செயலகத்திடம் பொலிஸார் கேட்கின்றனர். இதற்கு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு அண்மையாக 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. எனினும் அந்தப் பகுதியில் பெரியளவி லான குழி காணப்படுகின்றது. அதனை மூடுவதற்கு 50 லட்சம் ரூபா நிதி தேவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
எனவே பொலிஸார் கோரிய காலத்தில் இருந்து எமது பொறுப்பில் எந்த அரச காணியும் இருக்கவில்லை. தற்போதுதான் சிமெந்துத் தொழிற்சாலைக்கு அண்மித்த பகுதி எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் இருந்து சீரான இடத்தில் 2 ஏக்கர் நிலம் வழங்கப்படும் - என்றார். (வ-101)

## நெடுந்தீவுக் கடலில் மூழ்கியது இந்திய மீனவர்கள் படகு

யாழ்ப்பாணம், ஜூலை 11
நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 4 மணியளவில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர் படகு கடலில் மூழ்கியது. அதில் பயணித்த மீனவர்கள் நால்வர் இராமேஸ்வரத்திலிருந்து வந்து வேறொரு படகில் கரை சேர்ந்தனர் எனத் தெரிக்கப்பட்டது.
படகை இலங்கைக் கடற்படையினர் கடலில் தேடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தியத் தமிழகம் - மண்டபம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் படகே கடும் காற்றின் காரணமாக கடலில் மூழ்கியதாக இலங்கை கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது.
படகில் பயணித்த 4 மீனவர்களும் கடலில் குதித்து நீந்தினர். மீன்பிடியில் ஈடுபட்ட மற்றுமோர் படகு அவர்களை மீட்டது. அவர்கள் பாதுகாப்பாக இந்தியக் கரையை அடைந்தனர் என்று தெரி விக்கப்பட்டது.
மூழ்கிய இந்தியப் படகு நேற்று இரவு வரை மீட்கப்படவில்லை என கடற்படையினர் தெரிவித்தனர். (வ-101)

## பொலிஸ் அலுவலர் விபத்தில் படுகாயம்

வீதியைக்கடக்கமுற்பட்டபொலிஸ் உத்தியோகத்தரை எதிரே வந்த கப் ரக வாகனம் மோதியது. விபத்துக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
பண்டத்தரிப்பு சிறுவிளானில் நேற்றுமதியம் இந்த விபத்து இடம்பெற்றது. இளவாலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே படுகாயமடைந்தார். சம்பவத்துடன் தொடர்புடைய வாகன சாரதியைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-107)

## அடுத்த வாரம் ஆரம்பமாகிறது கிளி. தொழில்நுட்பக் கல்லூரி

### திங்களன்று திறந்து வைப்பார் மைத்திரி

கிளிநொச்சி, ஜூலை 11
கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியை எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைப்பார். எதிர்வரும் 20ஆம் திகதி கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன.
நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய வகையில் கிளிநொச்சி தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட்டது. கிளிநொச்சி அறிவியல் நகரில் ஏ 9 வீதியிலிருந்து 400 மீற்றர் தொலைவில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் ஜேர்மன் அரசின் நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்பட்டது.
திறப்பு விழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராயுமுகமாக நேற்றைய தினம் திறன் விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.
கிளிநொச்சி தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியின் மூலம், வடக்கு கிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள் மட்டுமன்றி, முழு இலங்கையிலுமுள்ள இளைஞர்களுக்கு உயர் மட்டக் கல்வியை பெற்றுக் கொடுப்பதே நோக்கம்.
எதிர்வரும் 20ஆம் திகதி இதன் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும். முதற்கட்டமாக 400 மாணவர்கள் இணைக்கப்படுவர். இதில் 65 சதவீதமானவர்கள் வடக்கு கிழக்கிலிருந்தே தெரிவாவார்கள். இரத்மலானையில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியைப் போன்று, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். பயிற்சி முடித்தவர்கள் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். வெளி மாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளும் வழங்கப்படும் - என்றார் அமைச்சர் மகிந்த சமரசிங்க. (வ-101)

## வடக்கு மாகாண போக்குவரத்து சட்டத்தில் குறைபாடுகளில்லை

### அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



வவுனியா, ஜூலை 11
போக்குவரத்து தொடர்பாக நடைமுறைக்கு வர இருக்கும் நியதிச் சட்டத்தில் ஓட்டைகள் இல்லை. தற்செயலாகத் தவறுதலாக ஒரு ஓட்டையூடாக எவரேனும் உள்நுழைந்தால், அவர் அதிலிருந்து வெளியில் வர முடியாது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன்.
வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் 18ஆவது பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவிலும் மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் கலந்துகொண்டார்.
போக்குவரத்துத் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு மிக விரைவாகச் சட்டம் தன் கடமையைச் செய்யும். பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் நடவடிக்கையில் உரிமையாளர்கள் கூடிய [illegible] அசமந்த போக்கினாலேயே கூடுதலான விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதனால் பயணிகளுக்கு அசௌகரியங்களும் ஏற்படுகின்றன. போட்டித்தன்மையில் ஒரு வழித்தடத்தில் ஒரே நேரத்தில் பஸ்களை இயக்குவதால் யாருக்கும் எந்த நன்மையும் இல்லை - என்றார் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன்.
இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், தர்மபால, செந்தில்நாதன் மயூரன் மற்றும் வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளத்தின் தலைவர் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினை அரசியலாகிவிட்டது

## இராமேஸ்வரம் மீனவர் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 11

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை அரசியல் மயப்படுத்தப்பட்டுவிட்டது. இந்த விவகாரத்தில் தீர்வுகாண முடியாத நிலை இதனாலேயே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இராமேஸ்வரம் மீனவர்கள் அமைப்பின் தலைவர் எஸ்.எமிராட் தெரிவித்தார்.

"இலங்கை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாத வருடத்தின் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளுடன் சேர்த்து 75 நாள்கள் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்க வேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கைக்கடற்பரப்பில்மாத்திரமேதொழிலில் ஈடுபடுகின்றனர். இலங்கை மீனவர்கள் குஜராத், ஆந்திர கடல் பிரதேசங்களில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

நூற்றாண்டிற்கும் மேலாக இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்பரப்பிலும் இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பரப்பிலும் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். கச்சதீவின் உரிமம் இலங்கைக்கு வழங்கப்பட்ட பின்னரும் இரு நாட்டு மீனவர்களிடையேயும் எந்தவித பிரச்சினையும் காணப்படவில்லை" என்றார் எமிராட்.

(வ-5)

# போதைப்பொருள் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜுலை 11

மல்லாகம் நீதிவான் மன்றத்தினால் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைக்குட்படுத்தப்பட்ட தவறாளர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெறுகிறது.

'சுய கண்களால் போதையற்ற உலகைக் காண்போம்' எனும் தொனிப்பொருளில் மதுபோதை மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீங்குகள் குறித்து இவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்துரைகள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில், சிறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு மல்லாகம் நீதிவான் மன்றினால் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைக்குட்படுத்தப்பட்ட சுமார் 100 தவறாளர்கள் பங்குபெறுகின்றனர். இவர்களில் அநேகமானவர்கள் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் பொது இடத்தில் அநாகரிகமாக நடந்துகொண்டமைக்காகவே தண்டனை பெற்றவர்கள்.

(வ)

# கொடிகாமம் பொலிஸாரிடம் சிக்கினர் இரண்டு திருடர்கள்

தென்மராட்சி, ஜுலை 11



தென்மராட்சிப் பிரதேச ஆலயங்கள் மற்றும் வீடுகளில் திருடப்பட்ட ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் இருவரைக் கொடிகாமம் பொலிஸார் நேற்றுமாலை கைது செய்தனர்.


பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து கச்சாய் மற்றும் சங்கத்தானை ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில் மின் மோட்டர்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள், ஆலய விக்கிரகங்கள்; மின்பிறப்பாக்கி, குத்து விளக்குகள் ஆலய சாமரைகள் உட்பட பல பெறுமதியான பொருள்களைக் கைப்பற்றியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி போன்ற இடங்களிலேயே திருடப்பட்ட பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் மின்பிறப்பாக்கி விடத்தற்பளை சம்பாவெளி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமானது என ஆலய நிர்வாகிகளால் உறுதிப்படுத்தப்பட்டது.

(வ-9)

## சேவை நலன் பாராட்டு

**திரு. கி.சிறீபாலசுந்தரம்**
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (வ.மா)




விவசாயத் திணைக்களத்தில்
32 வருடங்களாக மகத்தான சேவையாற்றி
இன்று 60ஆவது அகவையைப் பூர்த்தி
செய்து யாழ் மாவட்ட விவசாயப்
பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து
ஓய்வு பெறும்
**பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (வ.மா)**
**திரு.கி.சிறீபாலசுந்தரம்**
அவர்களை
ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ
வாழ்த்துகின்றோம்.

**விவசாயத் திணைக்கள ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**யாழ் மாவட்டம்.**

# INVITATION FOR BID (IFB- 01)

## Deputy Director of Irrigation, Kilinochchi Range

1. The Deputy Director of Irrigation, Kilinochchi Range invites sealed bids from eligible and qualified bidders for civil works as described in the table below.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the CIDA registration and qualification requirements listed below.Additional details are provided in the Bidding Documents.

4. Interested eligible bidders may obtain further information from My Office and inspect the Bidding Documents at the address given below during office hours.

   - Office of the Deputy Director of Irrigation, Kilinochchi Range,

     Wilson Road,

     Kilinochchi.

     T.P :- 0212283969,0212285867,0212285822

5. A complete set of Bidding Documents in English language should be purchased by interested bidders on the submission of a written application to the Deputy Director of Irrigation, Kilinochchi Range, In the above address from 18.07.2016 to 29.07.2016 from 09:00 hrs to 15:00 hrs, upon payment of a non refundable fee of Rs.2,000.00 for each set. The method of payment will be by cash.

6. Bids shall be delivered to the Chairman of the Regional Procurement Committee, Office of the Deputy Director of Irrigation, Kilinochchi Range, Wilson Road Kilinochchi on or before 13:00 hrs on 01.08.2016. Late Bids will be rejected. Bids will be opened immediately after the closing in the presence of the bidder's representatives who choose to attend.

7. Bids shall be valid as indicated in the form of bid. ( section -4)

8. All bids shall be accompanied by a bid security issued by a reputed bank,approved by Central Bank of Srilanka in the form of Bid Security included in Section – 9. The amount and validity of the bidding document shall be as per details given in section -5.

9. Pre-bid meeting will be held at Office of the Deputy Director of Irrigation, Kilinochchi Range, Wilson Road, Kilinochchi commencing at 10.00 a.m. on 25.07.2016

10. **The Table referred to above is:**

| No | Contract No & Title of contract | PC | Proposed contract Price (Mn.) | Bid Security Amount (Rs) | Construction Period | Required CIDA Grade |
|---|---|---|---|---|---|---|
| | **Jaffna District** | | | | | |
| 1 | PSDG/KOC/JAF/2016/01 Improvements to Paralai Kulam Road | RPC | 2.50 | 40,000 | 03 months | Irrigation & Drainage Canals C8 or above |
| 2 | PSDG/KOC/JAF/2016/02 Reconstruction of Vilvalai Chediyapulam Pathi Agriculture Road (Concrete Road & Culverts) in Mathagal | RPC | 3.00 | 50,000 | 03 months | Irrigation & Drainage Canals C8 or above |
| 3 | PSDG/KOC/JAF/2016/03 Reconstruction of Koddaikadu Agriculture Road (Concrete Road) in Neervely | RPC | 2.50 | 40,000 | 03 months | Irrigation & Drainage Canals C8 or above |
| 4 | PSDG/KOC/JAF/2016/04 Reconstruction of Retaining Wall of Azlankulai Agriculture Road in Sandilipay | RPC | 2.50 | 40,000 | 03 months | Irrigation & Drainage Canals C8 or above |
| | **Kilinochchi District** | | | | | |
| 5 | PSDG/KOC/KOC/2016/05 Improvements to Kannagipuram Road | RPC | 1.00 | 15,000 | 03 Months | Irrigation & Drainage Canals C9 or above |
| 6 | PSDG/KOC/KOC/2016/06 Improvements to Sampukulam Kalmadu Mopoligaipanni Road | RPC | 1.00 | 15,000 | 03 Months | Irrigation & Drainage Canals C9 or above |
| 7 | PSDG/KOC/KOC/2016/07 Improvements to Moddaiyan Kula Road | RPC | 1.00 | 15,000 | 03 Months | Irrigation & Drainage Canals C9 or above |

RPC – Regional Procurement Committee

**Eng.N.Suthakaran,**
Deputy Director of Irrigation,
Kilinochchi Range,
Wilson Road,
Kilinochchi.
0212283969

**Date:** 11.07.2016

(c.24177) (13.18.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த கொழும்புத்துறை துண்டி ஐயனார் வீதி தார் இட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளது. ஐயனார் கோயிலுக்கு அருகில் செல்லும் இந்த வீதி, கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் இருந்தது. பயணிகள் பலரும் கடும் இடையூறுகளை எதிர்கொண்டனர். தற்போது யாழ். மாநகராட்சி மன்றம் அந்த வீதியைப் புனரமைத்துள்ளது. (ந-17)


**விற்பனையாளர் உடன் தேவை**

யாழ்.நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண்,பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர்

ஆண் 40 - 60, பெண் 18 - 30

யாழ்.நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.

077 293 5095, 077 915 7883

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவி

செல்வி துளசிகா கேதீஸ்வரன்

அவர்கள் துணுக்காய் கல்வி வலயத்தில் முதன் முறையாக மாகாணமட்ட ஆங்கில தினப்போட்டி 2016 இல் தரம் 06 ஆங்கில கவிதை (Recitation) நிகழ்வில் 2 ஆம் இடம் பெற்றதையும் அவரை பயிற்றுவித்த ஆசிரியை செல்வி செள. சங்கீத்தா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/ பாண்டியன்குளம் ம.வி
நட்டாங்கண்டல்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி 17.06.2016 அன்று கொழும்பு D.S சேனநாயக்க கல்லூரியில் கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடமிருந்து SLPS - III இற்கான நியமனக் கடிதத்தினைப் பெற்று பதவியுயர்வு பெற்ற

திரு பத்மநாதன் பிரதாபன்
SLPS - III,B.A,Sp.Trd(Pri),PGDE

அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பதவி உயர்வுகளைப் பெற்று நற்பணியாற்றிட மனமார வாழ்த்துகின்றோம்.



பாராட்டி வாழ்த்துவோர்:
நலன்புரிகழகம்
யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

திரு.பெருமாள் பாலகிருஷ்ணன்
(மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை)




அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை அதிபர் சேவை தரம் III இற்குப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல பட்டங்களும் பதவி உயர்வுகளும் பெற வேண்டுமென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர்கள்
மு/விசுவநாதர் ஆரம்பபாடசாலை,விசுவமடு.

**சேவை நயப்புப் பாராட்டு**

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி



திரு. இராஜதுரை கணேசலிங்கம்
(விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர்)

எங்கள் கல்லூரியில் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளராக பத்து ஆண்டுகள் பணிபுரிந்து அகவை அறுபதில் [08.07.2016] அன்று ஓய்வு பெற்றுச் செல்லும் அவர்களை இறையாசி பெற்று நீடூழி காலம் நலத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
சேவையாளர் சங்கம்


# நல்லூர்த் திருவிழாவுக்கு வருவோர் ஆபரணங்களில் அக்கறை கொள்க

## யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 11
நல்லூர்த் திருவிழாவுக்கு உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருவோர் தங்க நகைகள், பணம் என்பவற்றின் பாதுகாப்பில் அக்கறையாக இருக்க வேண்டும் என யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் அறிவுறுத்தினார். சட்டத்தைப் பாதுகாத்து மக்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியது பொலிஸாரின் கடமை. மக்கள் சட்டத்தை மீறிய செயற்பாடுகளுக்கு வாய்ப்பளிக்காது தவிர்க்கவேண்டும். முன்னெச்சரிக்கையாகச் செயற்படும்சந்தர்ப்பங்களில்அசம்பாவிதங்களைத்தவிர்த்துக்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.(ந-101)

# லொறியில் கடத்தப்பட்ட முதிரைக் குற்றிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
வன்னியில் இருந்து வட்டுக்கோட்டைக்கு கடத்தப்பட்ட 23 முதிரைக் குற்றிகள் மானிப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அவற்றை ஏற்றிவந்த லொறி பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டது. அதன் சாரதி கைது செய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது. மரக் குற்றிகள் கடத்தப்படுகின்றன என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. பொலிஸார் நவாலிப் பகுதியில் சிவில் உடையில் காத்திருந்தனர். சந்தேகத்துக்கு இடமாக வந்த லொறியை மறித்துச் சோதனையிட்டனர். அதனுள் முதிரைக் குற்றிகள் கண்டு பிடிக்கப்பட்டன. பொலிஸார் வீதியில் உள்ளனரா என்று லொறிச் சாரதிக்குத் தகவல் வழங்கி வந்தனர் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் மோட்டார் சைக்கிளைக் கை விட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4,107)


**மணமகள் தேவை**

1981 கௌரவ குடும்பம் மூலம் கிரகபாவம் 75 லக்கினத்தில் செவ்வாய் சூரியன், கட்டடக் கலைஞர் கல்வி கற்று சொந்தமாக கட்டட ஒப்பந்த வேலைகள் செய்யும் சைவ போசன மணமகனுக்கு மணமகள் தேவை

077 940 1092

**நாஹா மருத்துவ நிலையம்**

*அதிக வலியுடன் கூடிய கை, கால் விறைப்பு, வாய் பேசமுடியாது அவதியுறும் பாரிசவாதம், ஆஸ்மா, தீராத மர்ம புண்கள்.
*கண்டறியமுடியாத வேதனை தரும் நோய். நாடி சாத்திரத்தில் அறிதல்.

077 321 2740
வங்கி முன்லேன்,சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெயதிவீடு), மானிப்பாய்.

**உணவகத்திற்கு கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை**

* CAPTAINS / STEWARDS
* STORE KEEPER
* FEMALE CLEANING HELPER
* BILLING CLERK (MALE / FEMALE)
* KITCHEN HELPER

நேர்முகபரீட்சைக்கு சான்றிதழ்களுடன்

11.07.2016 / 12.07.2016

ஆகிய தினங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நேரில் வரவும்.

SHANMUGAS
53/3, Ramakrishna Road,
Wellawatte, Colombo - 06
Tel: 0112 361 384


## தொழிற் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையால் யாழ்ப்பாண தொழிற் பயிற்சி நிலையத்தில் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 சான்றிதழுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார். தகவல்தொடர்பாடல்தொழில் நுட்பவியலாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி படவடிவமைப்பாளர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்கை நெறிகளைப் பயில விரும்புவோர் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னர் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் முதலாவது மாடியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பதிவு செய்ய முடியும் என்று உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ந-ரி)


**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருள் நிரப்புநர் தேவை.
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
11.07.2016 & 12.07.2016 பிற்பகல் 4.00 மணிக்கு அலுவலகத்திற்கு சமூகமளிக்கவும்.

Rajanumayal (pvt) Ltd
Clock Tower Road, Jaffna.
(யாழ் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம்)

**ஆடி மாத சிறப்பு சலுகை...!**

Printers — hp brother SAMSUNG

Inkjet printer
HP 1112 Printer - 3,600/=
HP 1010 Printer - 3,800/=
Canon pixma ip 2870S - 3,900/=
HP 2135 (Print/ Copy/ Scan) Printer - 9,500/=
HP 4675 (Print/ Copy/ Scan) Printer - 19,600/=
Canon 2570S (Print/ Copy/ Scan) Printer - 7,500/=
Brother DCP - T300 (Print/ Copy/ Scan) Printer - 34,500/=

Laser printer
HP 1102 Printer - 17,200/=
HL 1210w Wireless Printer - 13,000/=
HP 201dw Wireless Printer - 39,000/=
HP M402dn Printer - 49,000/=

Laser 3 in 1printer
HP M125A Printer - 26,500/=
Samsung Xpress M2070 (Print/Copy/ Scan) - 22,500/=

Color Laserjet Printer
HP CP1025 Printer - 41,000/=

Projector & Projector Screen — SONY
- Tripod Screen
- Wall mount Screen
- Electronic Projector Screen
Sony VPL DX111 - 68,000/= (all size are available)

CCTV Security Camera — KKBRO TOUCH YOUR LIFE
Wireless IP Camera Kit - 58,000/=
4CH / 8CH/ 16CH / 32CH/ NVR'S Available
2 வருட உத்தரவாதம்
AHD DVR 10,000/= இருந்து
AHD Camera 3,800/= இருந்து
Wireless IP Camera 9,500/=

HomeTheatre Speakers — MiPAQ
2.1 → 3,800/= இருந்து
4.1 → 6,000/= இருந்து
5.1 → 7,000/= இருந்து
Karooke - 17,000/= இருந்து
USB FM Bluetooth micro SD
Condition apply

MICRO PC SYSTEMS
No - 218, Hospital Road , Jaffna.
Jaffna : 218, Hospital Road, Jaffna 021 222 5893
Nelliyadi : Pointpetro Road, Nelliyadi 021 222 2929
Kilinochchi : 85A, Old Kachcheri Opposite A9 Road , Kilinochchi 021 228 5593
Vavuniya : 66 b, 2nd Cross Street 021 222 1969
E-mail - jaffna@micropcsystems.com / Web : www.micropcsystems.com
071 035 6065 / 077 396 3280 / 021 222 5893


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# புத்தூர் கிழக்கு, வாதரவத்தை வீரவாணி

## திருவருள்மிகு ஐயனார் ஜெய் ஸ்ரீ மஹா ருத்ரகாளி அம்பாள் திருக்கோயில்

## நூதன ஆலய நூதன பிரதிஷ்டா அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்பிதழ்

**கர்மாரம்பம்**
**11.07.2016**
**எண்ணெய்க் காப்பு**
**11.07.2016**

**மஹா கும்பாபிஷேகம் 14.07.2016**
**காலை 8.30 முதல் 10.15. வரை**

**மஹா சங்காபிஷேகம்**
**28.07.2016**

### ஜெய் மஹா ருத்ர காளி அம்பாளின் மெய்யடியார்களே!

சீரும் சிறப்பும் வாய்ந்த ஒன்பது கண்டங்களுள் மிகச் சிறந்த பூமியாக பாரத கண்டத்தைச் சார்ந்ததும், சுவர்ண பூமி, புண்ணிய பூமி என தட்சண கைலாய மான்மீயத்திலும், சிவபூமி எனத் திருமூலராலும், திருஞான சம்பந்தராலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடல்பெற்ற சிவத்தலங்களை தன்னகத்தே கொண்டதும் இந்துமா சமுத்திரத்தின் முத்தாக விளங்குகின்ற இவ் இலங்கா புரியின் வடபால் அமைந்த யாழ்ப்பாணம் வலிகாமம் புத்தூர் பூர்வதிக் பகுதியில் இயற்கை வளமும் செந்நெல் வகைகள் கொண்ட வயல்ப்பகுதியில் பெருவளங்களோடும் பெருஞ்சோலையின் மத்தியில் பஞ்ச சிம்மாசனத்தில் கொலுவிருந்து தன்னை நாடி வருகின்ற மெய்யடியார்களுக்கு வேண்டும் வரங்களை நல்குகின்ற தடைகளைத் தகர்த்தெறியும் ஜெய்ஸ்ரீ மஹாருத்ர காளி அம்பாளிற்கு நெறிமுறை நின்று அறநெறி காக்கும் சிவாச்சாரியப் பெருமக்களைக்கொண்டு வேதிக மஹா யாகசாலையில் சாக்தசமய அதிபதியான அம்பாளை பஞ்சகுண்டங்களில் ஆசீர்வதித்து ஆகுதிநல்கி, ஸ்ரீமங்கல மிகு துர்முகி வருஷம் ஆனித்திங்கள் 30 ஆம் நாள் (14.07.2016) குருவாரத்தில் (வியாழக்கிழமை) தசமி திதியும், சுவாதி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும், சுக்கிர ஓரையும் கூடிய காலை 8.30 முதல் 10.15 வரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்த வேளையில் **இலங்கையின் முதலாவது அதி உயரமான (6'2") ஜெய்ஸ்ரீ மஹாருத்ர காளியம்பாளிற்கு** மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

### கும்பாபிஷேக குருமார்கள்

சர்வபோதகாசிரியர்
"தேசமான்ய", "சோதிடர்"
சிவஸ்ரீ
**ம.ச. வேதாரண்யக் குருக்கள்**
(முடிக்கொற்றை சித்திவிநாயகர் தேவஸ்தானம்)

பிரதிஷ்டா பிரதமகுரு
"தேசமான்ய",
"கும்பாபிஷேக பொன்விழா வேதாகம வாருதி"
**சிவஸ்ரீ இரத்தின பாலகிருஷ்ணக் குருக்கள்**
(உ.வ. கொம்மந்தறை மனோன்மணி அம்பாள் திருக்கோயில்)

சர்வ சாதகாசிரியரும், ஆலய பிரதம குருவும்
"தேவிசாதகப் பிரியன்"
**சிவஸ்ரீ இரத்தின பால.நரேந்திரக் குருக்கள்**
(இரத்தினாசனம், வடமராட்சி)

### மங்கல வாத்தியம்

| | |
|---|---|
| "நாதஸ்வர இளவரசன்" பஞ்சமூர்த்தி குமரன் குழுவினர் | "நாதஸ்வர சக்கரவர்த்தி" P.S. பாலமுருகன் குழுவினர் |
| "லயஞான தவிலரசு" N.R.S. சுதாகரன் குழுவினர் | "இன்குழல் வேந்தன்" N.R.K. இரத்தினகுமார் (மாக்கையா) |
| "தவில்வித்துவான்" K.R. புண்ணியமூர்த்தி | "தவில்வித்துவான்" தெ.உ.தயசங்கர் |

**இசைப்பிரியனின் இசையில், வீரமணிதாசன் மற்றும் தென்னிந்திய கலைஞர்களின் படைப்பில்**
**"திருவருள்மிகு ஜெய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் பக்திப்பாமாலை"**
**இறுவெட்டு வெளியீடும் இடம்பெறும்**

* மகா அபிஷேகத்தின் போது 108 பால்க்குட பவனியும் இடம்பெறும்
* மண்டலாபிஷேக பூர்த்தி 28.07.2016 அன்று 1008 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட நாதஸ்வரக் கச்சேரியும், அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகளாக
    * M. சிதம்பரநாதனின் மாணவர்களாகிய தில்லைச்செல்வன், வினுஜன், செல்வக்குமார், நிதுசாரன் என்போரின் மிருதங்கக் கச்சேரியும்
    * தி.வரதன், தி.பிரியந்தினி ஆகியோரின் தெய்வீக இசை கானங்களும்
    * நாதஸ்வர இளவரசன் பஞ்சமூர்த்தி குமரனின் நாத இசைச்சங்கமமும்
    * தவில்வித்துவான் விபூர்ணனின் தாளவாத்திய சங்கமமும் இடம்பெறும்.

**" கும்பாபிஷேக தின நிகழ்வுகள் யாவும் ஓம் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும்"**

அடியார்கள் கும்பாபிஷேகத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர், பூமாலை, பூ, பத்திரம், அபிஷேகப் பழவகைகள், கரும்பு போன்றவற்றை உரிய நேரத்தில் கொடுத்து அன்னையின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

**வீரவாணி,**
**புத்தூர் கிழக்கு.**

**அன்னையின் இறைபணியில் உள்ள,**
**திரு.பாலசுப்பிரமணியம் ஜெயவதனன்** (அராலி)

(சி. 24203)
(13.18)

"ஜெய்ஸ்ரீ மகாருத்ர காளியை சரண்புகுந்தால் அதிகவரம் பெற்றிடலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத் தெரிவு

அச்சுவேலி, ஜூலை 11

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் தலைவராக பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பியும், உபதலைவராக செல்வி எஸ்.லீலாவதியும், செயலாளராக மருத்துவர் க.கி.சிவபாலசிங்கமும், உபசெயலாளராக மருத்துவர் எஸ்.கந்தசாமியும், பொருளாளராக எஸ்.செந்தில்நாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

11 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.(ற-11)

### விண்ணக வாழ்வின் முதலாவது ஆண்டு நிறைவு



அமரர்
**வெஸ்லி குலராஜன் சுந்தரம்**

மண்ணில்
05.05.1955

விண்ணில்
11.07.2015

தொலைபேசியிலேயே விரைந்து
காரியம் சாதிக்கும் ராஜா
தொலைதூரம் போவதற்கும்
விரைந்தது ஏனோ?

மனோன்
நவாலி தெற்கு.

நித்திய வாழ்வில் கர்த்தருடன்
களித்திருக்க பிரார்த்திக்கும்
பொன்னையா குடும்பம்.

### அரனடியின் தாளுறங்கி அடைவீர் சாந்தி
### 5ஆம் ஆண்டின் அன்பார் நினைவலைகள்



அமரர் திருவாட்டி மகேஸ்வரி
**இராஜேந்திரம்**
(சம்பந்தர் மிஸ்)

தோற்றம்
29.07.1925

மறைவு
22.06.2011

மாறாத காதலொடு முருகன் தாளை மறவாது காலைதோறும் தொழுதே வந்தீர்
பேறாக செங்குந்தா பெரிதும் ஓங்க பெரும்பணிசெய் சம்பந்தர் மிஸ்ஸாயொளிர்ந்தீர்
வீறோடு எமையுலகில் விளங்கவைத்தே விண்புகுந்தோரைக்காண்டு விரைந்த போதும்
ஆறாத மனதினொடஞ் சலிகள் செய்தோம் அரனடியின் கீழுறங்கி அடைவீர் சாந்தி
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.30,நெல்சன்பிளேஸ்,
கொழும்பு -06

(அ 24165) (11.17.18)

கலாநிதி இ.செந்தில்நிதி.
நாயன்மார்கட்டு

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1936 . 01 . 30

மறைவு
2013 . 07 . 15

**அமரர் முருகேசு ஐயாத்துரை**

திதி: ஸப்தமி

எவ்வுயிரையும் தன்னுயிர்
போல நினைத்து அன்பு
மழை பொழிந்தீரே – தம் அன்பில் நனைந்திட
எமக்கு நீண்ட காலம்
கொடுப்பனவு இல்லை – அதுவே
இவ்வுலகின் நியதியுமாகும்

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## கட்டுவன் ஞானோதயாவைக் கற்றலுக்கு விடுவியுங்கள்

### மாவட்ட செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

கட்டுவன் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள ஞானோதயா வித்தியாலயத்தை விடுவித்து மீள்குடியமரும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் "தற்காலிக வீட்டுத் திட்டங்கள் வழங்கும் போது மக்கள் மீள்குடியமரத் தயாராக உள்ளனர். மாணவர்கள் கல்விக்காக நீண்ட தூரம் செல்ல வேண் டிய நிலை காணப்படுகின்றது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட 210 ஏக்கர் நிலத்தின் இறுதி எல்லையாக கட்டுவன் சந்தி உள்ளது. சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் ஞனோதயா வித்தியாலயம் உள்ளது. பாடசாலை விடுவிக்கப்படுமாயின் மீள்குடியருரும் மக்களுக்கு அது பெரும் உதவியாக இருக்கும். மாணவர்களின் நன்மை கருதி இந்தப் பாடசாலையை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று கோரப்பட்டுள்ளது. (ற-10)

### 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தவராசா தர்ஷிகா**


தோற்றம்
28.06.1994

மறைவு
26.06.2012

எமதருமை செல்வமே எமை விட்டு நீ பிரிந்து
ஆண்டுகள் நான்கு ஆனதம்மா ஆறவில்லை துயரம்
நீ பொழிந்த செல்லங்கள் நாம் கொண்ட சந்தோசம்
எல்லாமே உன் மறைவால் கனவாய்ப் போனதம்மா

குடும்பத்தினர்,
சி. தவராசா (ரைக்கர் தம்பியன்)
புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

### ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21.03.1939

மறைவு
23.06.2015

அமரர்
**செல்லையா அன்னராசா**



தோற்றம்
02.06.1946

மறைவு
01.05.2015

அமரர்
**அன்னராசா பரமேஸ்வரி**

எம்மை வாழ வைத்து வழிகாட்டிய தெய்வங்களே!
இமைப்பொழுதும் உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்!

வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு

குடும்பத்தினர்.

(அ 28241(12.18))

### மரண அறிவித்தல்

**செல்லையா துரைராஜா**
**(Eeswararaj Textile Owner)**



தோற்றம்
02 . 03 . 1940

மறைவு
08 . 07 . 2016

சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் கண்டிவீதி, சிவபதி இல்லத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா துரைராஜா (ஈஸ்வரராஜ்) 08.07.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்லத்தம்பி - அம்மாக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகடாச்சன்(America). நந்தினி(America). சிவமோகன் (America) ஆகியோரின் அன்புத் தந்தையும்குமுதினி. சுதன், கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்யா. சுமிதா, ஹரிஷான், மயூரி, அஷ்வின், பூஜா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்ற செல்வராஜா. காலஞ்சென்ற யோகராஜா மற்றும் பாக்கியலீலா. காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சித்திராதேவி. காலஞ்சென்ற நவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சந்திரமணி. அம்பிகாதேவி, காலஞ்சென்ற நவரட்ணம், காலஞ்சென்ற சின்னத்துரை. சிவகுமாரன், காலஞ்சென்ற துரைராஜா, காலஞ்சென்ற கமலாதேவி. சிவராஜா. நாகேஸ்வரி, திலகரட்ணம், சிரியாவதி, மயில்வாகனம், ரேவதி. முருகரத்தினம், மல்லிகாதேவி. சிவயோகச் செல்வன், மங்களம் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.07.2016 காலை 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனத்துக்காக Highland Hills Funeral Home, 12492 WoodbineAve, Gormley, ON LOH 1Go, Canada இற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சிவா : 1 630 740 7479
நந்தினி : 1 618 580 0861
மோகன் : 1 646 675 3220
மங்களம் : 416 281 8885 (Home)
416 844 7876(Mobile)

### மலையகத்தில் சீரற்ற காலநிலை

கொழும்பு, ஜூலை 11

மலையகத்தில் தொடர்ச்சியாக காற்றுடன்கூடிய காலநிலை நிலவுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக இரவு நேரங்களில் அதிகூடிய காற்றுடன் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா, ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவ, நானுஓயா, அக்கரப்பத்தனை, டயகம, தலவாக்கலை, லிந்துலை போன்ற பகுதியில் பனிமூட்டம் காணப்படுகின்றது. வாகனங்களில் முன் விளக்குகளை ஒளிர விடும்படி சாரதிகளுக்குப் போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

நானுஓயா பொலிஸ் பகுதிக்குட்பட்ட எடின்புரோ தோட்டத்தில், நேற்று அதிகாலை வீசிய பலத்த காற்றால் மின் கம்பம் முறிந்து விழுந்து மின்சாரம் தடைப்பட்டது.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம நகரத்திலிருந்துபோடைஸ் வழியாக ஹற்றன் செல்லும் பிரதான பாதையில் வெடிப்புகள் காணப்படுகின்றன. சாரதிகள் அவதானத்துடன் செயற்படுமாறு அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய அதிகாரி கேட்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுழற்சிமுறைத் தொடர் போராட்டம் பரவிப்பாஞ்சான் மக்கள் இடைநிறுத்தம்

## காணிகளை விடுவித்துத் தருவதற்கு 15 நாள்கள் காலக் கெடு விதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 11

தமது சொந்தக் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறைப் போராட்டத்தை பரவிப் பாஞ்சான் மக்கள் தற்காலிகமாகக் கைவிட்டனர்.

தமது பிரச்சினைக்குப் 15 நாள்களுக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் தாம் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அவர்கள் கூறினர்.


பரவிப்பாஞ்சானில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் இராணுவம் முகாமிட்டுள்ளது. அந்தக் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று காணி உரிமையாளர்கள் சுழற்சிமுறைக் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோரும் அதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

மக்கள் போராட்டம் நடத்திய இடத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்ற இராணுவ அதிகாரி காணி விடுவிப்புக் கோரிக்கை மேலிடத்துக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது. அதனால் போராட்டத்தைக் கைவிடுங்கள் என்று கேட்டார். மாவட்ட செயலாளர் உறுதி வழங்கினால் மட்டுமே போராட்டத்தைக் கைவிடுவோம் என்று அங்கிருந்த மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.சத்தியசீலன் போராட்டம் நடத்தியவர்களைச் சந்தித்தார். இது தொடர்பாக கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் மாவட்டச்செயலாளர் கலந்துரையாடுகின்றார் என்று தெரிவித்தார். சாதகமான முடிவு கிடைக்கும் என்று நம்புகின்றோம் என்றார்.

உறுதியான முடிவை வழங்கினால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் என்று மக்கள் தெரிவித்தனர்.

காணி விடுவிப்பு விடயத்தில் மாவட்ட அதிகாரிகளுக்கு உள்ள சிக்கல் நிலமை குறித்து மேலதிக மாவட்டச் செயலாளர் மக்களுக்கு விளக்கினார். நாளைமறுதினம் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் கிளிநொச்சி வருவார். அவருடன் பேசுங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.



மாவட்டச் செயலருக்கு மனு ஒன்றைக் கையளிப்பது என்றும் 15 நாளைக்குள் தமது காணிகளை விடுவிக்க கால அவகாசம் வழங்குவது என்றும் தீர்மானித்த மக்கள் தமது போராட்டத்தை இடைநிறுத்தினர். 15 நாள்களுக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் போராட்டத்தை ஆரம்பிப்போம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை நேற்றுமுன்தினம் இரவு சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் காணிகளைப் பெற்றுத் தருவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று கூறினார். (ற-21)

## திருநெல்வேலி சந்தைக்குள் புகைக்கத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 11

திருநெல்வேலிச் சந்தை வளாகத்தில் புகைப்பிடிப்பது, வெற்றிலை உமிழ்வது போன்ற செயற்பாடுகளை நல்லூர் பிரதேச சபை தடை செய்துள்ளது.

இது தொடர்பாக அறிவுறுத்தல் துண்டுப் பிரசுரங்களைப் பிரதேச சபை சந்தை வளாகத்தில் ஒட்டியுள்ளது.

மக்கள் அதிகளவில் கூடும் இந்தச் சந்தை வளாகத்தில் புகைப்பிடிப்பதாலும் வெற்றிலையைக் கண்ட கண்ட இடங்களில் உமிழ்வதாலும் சந்தைக்கு வரும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

சுகாதார சீர்கேடும் ஏற்பட்டுள்ளது. அதையடுத்தே நல்லூர்ப் பிரதேச சபை தடை விதித்துள்ளது. (ந-17)

## வலி. கிழக்கு பிரதேச சபை உப அலுவலகத்துக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வலி. கிழக்குப் பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகம் விரைவில் கோப்பாய் சந்திக்கு அருகில் உள்ள சபையின் சந்தைக் கட்டடத்துக்கு இடம் மாற்றப்படவுள்ளது.

கோப்பாய்ச் சந்திக்கு அருகில் உள்ள சபையின் சந்தைக் கட்டடத் தொகுதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கோப்பாய் உப அலுவலகத்தை அங்கே இட மாற்றி வைக்க சபை நிர்வாகம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தற்போது சபையின் கோப்பாய் உபஅலுவலகம் பருத்தித்துறை வீதியில் மாதா கோயிலுக்கு அருகில் தனியார் கட்டடம் ஒன்றில் செயற்படுகின்றது. (ந-17)

## போதைப்பொருளுடன் இலங்கை வாசி கைது

கொழும்பு, ஜூலை 11.

போதைப் பொருள் வைத்திருந்தார் என்றக் குற்றச்சாட்டில் இலங்கை இளைஞர் ஒருவர் குவைத் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

குவைத் நாட்டு சுங்கப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் போதைப் பொருள் அடங்கிய 3 பொலித்தீன் பைகள் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## செந்தமிழில் குடமுழுக்குச் செய்து இணுவிலில் நேற்றுப் புதிய ஆலயம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

இணுவில் தெற்கில் புதிதாக அமைத்த ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை செந்தமிழில் திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டது.

ஐந்து தளக் கோபுரத்துடன் அமைக்கப்பட்ட ஆலயத்தில், சுவிஸ் ஞானலிங்கேஸ்வரர் ஆலய பிரதம பூசகரும் இணுவிலைச் சேர்ந்தவருமான திருநெறிய சிவருசி தர்மலிங்கம் சசிக்குமார் தலைமையிலான 108 பூசகர்கள் செந்தமிழ் திருக்குடமுழுக்கு விழாவை நடத்தினர்.



திருக்குடமுழுக்கு விழாவிற்கு முன்னதாக நேற்றுக் காலை 7.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதேஸ்வரர் ஆலயத்தில் இருந்து இணுவில் ஞானலிங்கேஸ்வரம் வரை பாத யாத்திரை இடம்பெற்றது. சைவநெறிக்கூடம், சிவஞானசித்தர்பீடம் என்பவற்றுடன் இணைந்து சைவ மகா சபை ஏற்பாடு செய்த இந்தப் பாத யாத்திரையில் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் இருந்து வருகைதந்த பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலயத்திற்கு நேர் முன்னிலையில் நடப்பட்ட கம்பங்களில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பயன்படுத்திய தனித் தனிக் கொடிகள், சைவநெறிக் கூடத்தின் கொடி, மற்றும் நந்திக்கொடி என்பன ஏற்றப்பட்டன. இதன் பின்னரே கலசங்களுக்கு கும்பநீர் ஊற்றப்பட்டது.

செந்தமிழ் திருக்குடமுழுக்கு விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார், யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன் மற்றும் பௌத்த பிக்குகள், சுவிஸ் நாட்டின் முன்னாள் அமைச்சர் ஒருவர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (வ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோதும் மூவரே நெடுந்தீவில் கடமையேற்றனர்

### வடக்கு கல்வி அமைச்சர் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 11

நெடுந்தீவுப் பாடசாலைகளில் நிலவும் விஞ்ஞான ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்க 8 பட்டதாரிகளை நியமித்தோம். அவர்களில் 3 பேர் மட்டுமே கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

"வடக்கில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை முழுமையாக நிவர்த்தி செய்வதற்காக மேலும் ஆயிரம்பட்டதாரிகளை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வடக்கில் தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேர் உள்ளனர். அவர்களையும் விரைவில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது - என்றார்.

(ற-101)

# சூழலுக்கு ஏற்ற வகையில் மாறி எம்மைத் தயார்செய்யவேண்டும்

### வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 11

போர் நடைபெற்ற காலகட்டத்தில் எமக்கு நெருக்கடிகள் பலமாக இருந்தன. அவை நேரடியாக இருந்தன. அவற்றை எதிர்கொண்டோம். இப்போது பல்வேறு நெருக்கடிகளும் மறைமுகமாக வருகின்றன. அவற்றை எதிர்கொள்ள முடியாது தவிக்கின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் சாதனையீட்டிய மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நேற்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடந்தது. லடார் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஆளுநரின் செயலாளர் கலந்துகொண்டார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

அன்றைய கால கட்டத்தில் சூழலுக்கு ஏற்ப மாறினோம். அது இன்று இல்லை. போர் நடந்த காலகட்டத்தில் பங்கருக்குள் குப்பி விளக்கின் மங்கலான வெளிச்சத்தில்கற்றுசிறப்பானகல்வி நிலையைப் பெற்றோம். இன்று பிரகாசமான மின் விளக்குகளின் ஒளியில் கல்வியைப் பெற முடியாது தவிக்கின்றோம். இன்று நாம் சந்திக்கும் பிரச்சினைகள் எம்மை மாய வலைக்குள் வைத்திருக்கும் வகையில் காணப்படுகின்றன. அதை நன்றாக விளங்கிக் கொண்டால் மட்டுமே எம்மைத் தயார்படுத்த முடியும்.



முன்னர் பாடசாலைகளில் ஒரு வகுப்பு நடக்கும்போது குண் டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும். அந்த நிலை அடித்ததால் உருவானதல்ல. கட்டுப்படுத்தும் பண்புகளால் வந்தவை. அந்தப் பண்புகள் எம்மை வழிப்படுத்தின. பாடசாலை மாணவ முதல்வர்களால்கூட ஒரு வகுப்பில் சிறந்த சூழலைக் கொண்டுவர முடிந்தது. அதே சூழலை மீண்டும் கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றது. கல்வியைப் பொறுத்தவரையில் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதே மிக மிக முக்கியமானது. ஆசிரியர்களை வேண்டிய இடங்களுக்கு அனுப்புவதில் கல்வி அமைச்சுக்குப் பெரும் நெருக்கடி உண்டு. தற்போது நியமனம் பெறுவோர் தமது விருப்புக்குரிய இடங்களைக் கொடுக்கின்றனர். தேவைக்குரிய தெரிவை வழங்குவதில்லை என்பது குறையாகவே உள்ளது - என்றார்.

(ற-101)

## புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
## பதவி வெற்றிடம்

**எமது சங்கத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. பதவி :-களஞ்சியமேற்பார்வையாளர் (207/13)
சம்பளஅளவுத்திட்டம் :- 14230-120x10-130x10-16730
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் 14ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 15ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர்(சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு (02) குறையாத அனுபவம்.

2. பதவி :- களஞ்சியமுகாமையாளர் (208/14)
சம்பளஅளவுத்திட்டம் :- 13875-115 x10-125x10-16275
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02)வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 16ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் நான்கு (04)வருடங்களுக்கு குறையாதஅனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர்(சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழிஉட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தி

3.பதவி :-களஞ்சியமுகாமையாளர் (208/15)
சம்பளஅளவுத்திட்டம் :- 13515-110 x10-120x110-15815
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் 16ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02)வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர்17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர்(சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. பதவி :-விற்பனை உதவியாளர் (308/17)
சம்பளஅளவுத்திட்டம் :- 12800-100 x10-110x10-14900
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் கனிஷ்டதரச்சான்றிதழ்

அல்லது

08ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக (03) மூன்றுவருடங்களுக்கு குறையாத அனுபவம்.

5. பதவி :-தொழிலாளி (318/17)
சம்பளஅளவுத்திட்டம் :- 12800-100 x10-110x10-14900
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. 05ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழும், நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**பொதுவானது**

*வயது எல்லை 18-45 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வயது எல்லை இல்லை. சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
*விண்ணப்பதாரி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
*சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சங்கத் தலைமை அலுவலகத்தில் ரூபா 20.00 செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்துடன் பிறப்புச்சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், தொழிற்தகைமைச் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **25.07.2016** ஆம் திகதிக்கு முன்னதாக **தலைவர், புதுக்குடியிருப்பு, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், குழந்தை யேசு கோயில் வீதி, மந்துவில், புதுக்குடியிருப்பு.** என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு.**
**021 206 1696**

(4/24158)
(11,17,18)

## இழுவை மீன்பிடிக்கு எதிராக நாளை வடக்கில் போராட்டம்

### முல்லை. கடற்றொழிலாளர்களுக்கு அழைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 11

இலங்கையின் வட பகுதி கடல்களில் இந்திய, இலங்கை இழுவைமடி மீன்பிடிப் படகுகளின் தொழிலை நிறுத்தக் கோரி நாளை செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளது. வட மாகாணத்தில் உள்ள நான்கு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களும் இணைந்து போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. போராட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் அழைப்பு விடுத்தார்.

வடக்கின் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்களுக்கான சந்திப்பு வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடந்தது. இது குறித்து முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா தெரிவித்ததாவது:

இலங்கைக் கடல் எல்லையில் மீன்பிடிக்க அனுமதிகோரும் இந்தியாவின் கோரிக்கையை நிராகரிக்கவேண்டும் என்று அதில் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதனை வலியுறுத்திப் போராட்டம் நடத்துவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வடபகுதி மீனவர்கள் அனைவரும் இணைந்து வடமாகாண சபை முன்பாக நாளை போராட்டம் நடத்தவுள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் அனைவரும் தொழிலுக்குச் செல்லாமல் இந்தப் போராட்டத்தில் தவறாது கலந்துகொள்ளவேண்டும்.

போராட்டத்தில் கலந்துகொள்ளும் மீனவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் முல்லைத்தீவு மாவட்ட சமாசத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பஸ் முல்லைத்தீவில் இருந்து காலை ஏழு மணிக்கு புறப்படும் - என்றார். (ற-21,ரி7,102)

# வடக்குக் கல்வி நியமனத்தில் தேவையற்ற அரசியல் தலையீடுகள்

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாண கல்வி அமைச்சால் வழங்கப்படும் நியமனங்களில் அரசியல்வாதிகளின் தேவையற்ற தலையீடுகளும், பிரதேசவாதங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

கிளிநொச்சி - சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் அதிபராக நியமிக்கப்பட்டவர் கல்வியமைச்சின் செயலாளருடைய கடிதத்தின்படி கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த 7ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்கவிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மூலமாகக் குறித்த அதிபருக்கு அலைபேசி மூலமாக ஓர் இடைநிறுத்த அறிவித்தல் வழங்கப்பட்டது. இது அநீதி. கண்டனத்துக்குரியது.

இத்தகைய செயற்பாடுகள் வடமாகாண கல்வி அமைச்சின் முறைகேடுகளின் மற்றுமொரு பரிமாணமாகவே பார்க்கப்படும். இந்த முறையற்ற நடவடிக்கைகளால் சமூகத்தில் பகையும் மோதலும் அணி பிரிதல்களும் உண்டாகக் கூடிய பொறுப்பற்ற செயற்பாடுகளில் வடமாகாண கல்வியமைச்சு ஈடுபட எத்தனித்துள்ளது என்று பார்க்கவேண்டியுள்ளது.

அரசியல் அதிகாரங்கள் தேவையற்ற விதமாக கல்வியில் குழப்பங்களை உருவாக்க முயலுமாயின், அது வடமாகாண கல்வியில் இனியும் மீளமுடியாத பின்னடைவை உருவாக்கிவிடும். இந்த விடயத்தில் வடமாகாண முதலமைச்சர் தலையிட்டு பாதிக்கப்பட்ட அதிபருக்கு நீதியான தீர்வை வழங்கவேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோபல் பரிசு பெற்ற குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் 155ஆவது பிறந்த தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக கூவர் அரங்கில் நடத்தப்பட்டன. இந்தியத் தூதரகமும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடமும் இணைந்து இதை ஏற்பாடு செய்தன. இந்தியத் துணைத்தூதுவர் ஆர்.நடராஜன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. சாந்நிகேதன் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுவாப்பன் டாற்றா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ்.பல்கலைக் கழக சமூகத்தினர், வடக்கு மாகாண சபையினர் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ு-21,101)

## வீதிகளின் விவரங்கள் வர்த்தமானியில்

யாழ்ப்பாணம், ஜூலை 1ழ

உள்ளூராட்சி சபைகளால் மும்மொழிகளில் தயாரிக்கப்பட்ட சபை வீதிகளின் விவரம் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது.

வடமாகாணத்தில் 34 உள்ளூராட்சி சபைகளும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தயார் செய்த சபை வீதிகளின் விவரங்களே பிரசுரிக்கப்படுகின்றன.

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குமுன்னர்சகலவீதிகளின் விவரம் தெகுக்கப்பட்டு (ஆரம்பம், முடிவு, நீளம், அகலம், சாய்வு, ஜரிஸ்) வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்து மக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். அந்த விவரங்கள் மீளத் தொகுக்க வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் க . வி . வி க் னே ஸ் வ ர ன் கோரிக்கை விடுத்திருந்தார்.

பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டவை உப அலுவலகம் மற்றும் சனசமூக நிலைய ரீதியாக மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு தவற விடப்பட்ட வீதிகள், புதிய வீதிகள் , பெயர் அற்ற வீதிகள் போன்ற விவரங்கள் தொகுக்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட பின்னர் இறுதியாக வர்த்தமானியில் (2 ஆவது தடவை) பிரசுரிக்கும் போதே அவை முழுமைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ு-50)

## பழுதடைந்த றம்புட்டான் விற்றால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

பாவனைக்கு உதவாத றம்புட்டான் பழங்களை விற்பனை செய்வோருக்கு எதிராக நீதிமன்றினூடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்தனர்.

தற்போது றம்புட்டான் பழங்களின் பருவகாலம் ஆரம்பமாகியுள்ளது. யாழ். நகரில் உள்ள பழக்கடைகளிலும் மற்றும் வீதியோரங்களிலும் றம்புட்டான் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றது.

அவற்றை விற்பனை செய்வோர் நல்ல பழங்களுடன் சேர்த்து அழுகிய பழங்களையும் விற்பனை செய்கின்றனர் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு விற்பனை செய்வோர் திடீர் பரிசோதனையில்சிக்கிக்கொண்டால் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநகர சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (ு-17)

# மக்களின் காணிகளை சுவீகரித்து இராணுவம் தங்கத் தேவையில்லை

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 11

கிளிநொச்சியில் எங்கு பார்த்தாலும் இராணுவ முகாம்களையும், இராணுவச் செயற்பாடுகளையுமே காண முடிகின்றது. இந்தளவு இராணுவத்தினர் மக்களின் இருப்பிடங்களைக் கையகப்படுத்தி, முகாம் அமைத்துத் தங்க வேண்டிய தேவை இல்லை. எமது மக்கள் இதை விரும்பவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை.



இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்றுமுன்தினம் முதல் சுழற்சிமுறைத் தொடர் போராட்டதை முன்னெடுக்கின்றனர். அங்கு கருத்துத் தெரிவித்த போதே வடக்கு மாகாண சபை உறுப்பினர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த மண்ணில் நடந்த போராட்டத்தின் விளைவாக இடம் பெயர்ந்து சென்ற நாம் செட்டிக்குளம் முகாம்களில் அடைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டோம்.

இப்போது நல்லாட்சி உள்ளது என்று கூறப்படுகின்ற போதும் பரவிப்பாஞ்சான் மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

தமது சொந்தக் காணிகளுக்கு, வீடுகளுக்கு எப்போது செல்வோம் என்ற இந்த மக்களின் ஏக்கத்தை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனபுரிந்துகொள்ள வேண்டும்.

பரவிப்பாஞ்சான் மக்களின் காணி விடயத்தில் ஜனாதிபதி கூடிய கவனம் எடுத்து அவர்களின் காணிகளை இராணுவத்தின் வசம் இருந்து மீட்டுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார். (ு-21,426)

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

அளவெட்டி, ஜூலை 11

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்துக்கும் முற்போக்கு முன்பள்ளிக்கும் 2லட்சத்து 40 ஆயிரம் ரூபா அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டு இலட்சம் ரூபா நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவாலும், 40 ஆயிரம் ரூபா வட மாகாணசபையின் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானத்தாலும் வழங்கப்பட்டன என்று நிலையத்தினர் தெரிவித்தனர். (ு-36)

# சுகாதார சேவையில் பணிப்புறக்கணிப்பது பாவச் செயல்

### யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

சுகாதார சேவையில் இணைந்த ஒரு ஊழியர் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுவது பாவச் செயல். இனிவரும் காலங்களில் அதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி.

ஒரு மருத்துவருக்கும் ஒரு பொறுப்புத் தாதிக்கும் இடையிலான முரண்பாடு முற்றி மருத்துவ சங்கமும் தாதியர் சங்கமும் ஏட்டிக்குப் போட்டியாகப் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர். பொதுமக்களே பாதிக்கப்பட்டனர். தாதியர் நேற்றுமுன்தினமும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டபோது மருத்துவ தரப்பால் அதற்கு எதிராக யாழ்.மேல்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. போராட்டத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. போராட்டத்துக்கான நியாயமான காரணங்களைக் கூறுவதற்குத் தாதியருக்கு யாழ்.மேல்நீதிமன்று சந்தர்ப்பம் வழங்கியது.

வைத்தியசாலைப் பணிப்பாளர் இவை தொடர்பில் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மருத்துவர் ஒருவரிடம் இருந்து முறைப்பாடு கிடைத்தது. சத்திர சிகிச்சைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைக்குச் சிகிச்சையளிக்கச் சென்ற மருத்துவரை பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர் ஏசினார் என்று அந்த முறைப்பாடு இருந்தது. தான் கடுமையான மன உழைச்சலுக்கு உள்ளாகினார் என்றும், தொடர்ந்து கடமை புரிவது கடினமாக இருந்தது என்றும் மருத்துவர் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். இதனை நேரடியாக அவதானித்த வைத்திய நிபுணர்கள் 5 பேர் இது ஒரு மோசமான செயல் என அறியத் தந்தனர்.

ஆரம்ப விசாரணை நடைபெற்று பொறுப்புத் தாதியர் குற்றவாளி என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பொறுப்புத் தாதிய உத்தியோகத்தருக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டது. இன்னோர் இடத்தில் கடமை புரியுமாறும் நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதைச் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பும் நன்கு அறிவார்கள்.

குறிப்பிட்ட பொறுப்புத் தாதி முன்னரும் பல சர்ச்சைக்குரிய விடயங்களைச் செய்தமைக்கான குறிப்புக்கள் உள்ளன. கடந்த மார்ச் மாதம் பணிப்பாளரால் எச்சரிக்கை வழங்கப்பட்டிருந்தது.

அரச ஊழியர் ஒருவர் தாபன விதிக் கோவை வழிகாட்டிக்கு அமைவாக எந்த ஒரு குற்றத்தையும் செய்ய முடியாது. குற்றம் இழைப்பவர்கள் அதற்குரிய விளைவுகளை ஏற்று தொடர்ந்து அவ்வாறான தவறுகளுக்கு இடங் கொடாது திருந்திக் கொள்ளுதல் வேண்டும். பலரையும் தூண்டி பணிப்புறக்கணிப்பில் இறங்குவது அரச ஊழியர் ஒருவர் தாபன ஒழுக்கவிதிக்கோவைகளை மீறும் செயலாகும். நீதிக்குப் புறம்பாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுதல் நோயாளருக்கு சிகிச்சை அளிப்பதில் இடர்களை ஏற்படுத்தும். அதுதவிரவும் தாதியர் சேவைக்கு களங்கத்தையும் ஏற்படுத்தும்.

விசாரணைக் குழுவின் முடிவை உரிய தாதியருக்கும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய ஊழியர்களுக்கும் தெளிவாகக் கூறியிருந்தேன். ஒருசிலர் தாதியர்கள் மத்தியில் பிழையான எண்ணங்களை உருவாக்கும் நோக்கில் கதைகளைக் கூறி மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

வைத்தியசேவையில் தாதியர்களின் பங்கு மிகமுக்கியமானது. கடந்த சில தினங்களாக சத்திரசிகிச்சைக் கூடத்தில் தாதியர்கள் தங்களது ஒத்துழைப்பை உரியமுறையில் வழங்காததால் பல சத்திரசிகிச்சைகள் பிற்போடப்பட்டன என பல பொதுமக்கள் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சத்திரசிகிச்சைக் கூடத்தின் சில குறைபாடுகள் தற்போது படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. ஒரு சிலரின் தனிப்பட்ட சலுகைகளுக்கும் தேவைகளுக்குமாக நிர்வாக நடவடிக்கைகளைக் கைவிட முடியாது.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடைமுறைகளைப் பின் பற்றுவதுடன் தங்களுக்குத் திருப்தி இல்லையாயின் மேன் முறையீடு செய்ய முடியும். .– என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ு-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியைச் சீரமைக்கும் சந்திரிகா முயற்சிக்கு எதிர்ப்பு

## ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளதாம் கட்சியின் மூத்த உறுப்பினர் குழு

கொழும்பு, ஜூலை 11
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சீரமைக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எடுக்கும் முயற்சிகளை நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் குழு கோரிக்கை விடுக்கவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் சந்திப்புக்களில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டுள்ளார். சுதந்திரக் கட்சியின் செயலாளர் உள்ளிட்ட மூத்த தலைவர்களுடன் அண்மையில் கலந்துரையாடியிருந்தார். அதில் பல்வேறு முடிவுகள் எட்டப்பட்டன என்று தகவல்கள் வெளியாகின. அவற்றை சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

சந்திரிகாவின் இந்த நடவடிக்கைகளுக்கு சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் குழு எதிர்ப்பு வெளியிட்டது. ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் முறையிடவும் தீர்மானித்துள்ளது. (ந-5)

> சுதந்திரக் கட்சியின் செயலாளர் உள்ளிட்ட மூத்த தலைவர்களுடன் அண்மையில் கலந்துரையாடியிருந்தார். அதில் பல்வேறு முடிவுகள் எட்டப்பட்டன என்று தகவல்கள் வெளியாகின. அவற்றை சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பாக். விமானங்கள் கொள்வனவு விரைவில் முடிவு எடுக்கப்படும்

கொழும்பு, ஜூலை 11
விமானப்படைக்கு பாகிஸ்தானில் இருந்து பத்து ஜேஎவ்-17 போர் விமானங்கள் கொள்வனவு செய்யும் முடிவு விரைவில் எடுக்கப்படவுள்ளது.

அரச தரப்பைச் சுட்டிக்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

கொள்வனவு உடன்பாடு குறித்த பேரங்களைக் கையாள்வதற்காக பிரிகேடியர் முகமட் பசீர் என்ற இராணுவ அதிகாரியை பாகிஸ்தான் அரசு கொழும்பில் தங்க வைத்துள்ளது.

விமானக் கொள்வனவு உடன்பாட்டில் நிதி ஏற்பாடுகள் விடயமும் உள்ளடங்கியுள்ளது. உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதும் 2017 ஆம் ஆண்டு ஜே.எவ்-17 போர் விமானங்கள் விமானப் படைக்கு விநியோகிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, இந்த உடன்பாடு கையெழுத்திடப் படுவதாக இருந்தது.

தலா 35 மில்லியன் டொலர் பெறுமதியான 10 ஜே.எவ்-17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் உடன்பாட்டை பாகிஸ்தான் கடன் திட்டத்தின் கீழ் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தியாவின் எதிர்ப்பு மற்றும் அழுத்தங்கள் காரணமாக திட்டத்தை அரசு இடைநிறுத்தியிருந்தது. (ந-5)

# நிழல் அமைச்சரவையை நியமித்தவரே வெளியேறியமை வெட்கக்கேடானது

## அமைச்சர் சஜித் கிண்டல்

கொழும்பு, ஜூன் 11
நிழல் அமைச்சரவையை நியமித்தவரே அமைச்சரவையில் இருந்தும், பிரதமர் பதவியில் இருந்தும் 24 மணி நேரத்துக்குள் விலகியுள்ளார். இது வெட்கக்கேடானது.

இவ்வாறு தெரிவித்தார் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் கலந்துகொண்டார். அதில் உரையாற்றியபோதுஅவர் தெரிவித்ததாவது:

"24 மணித்தியாலங்கள் இன்னும் கடக்கவில்லை. அதற்குள் விலகியுள்ளார். தனக்கு ஏதும் தெரியாது என்று நிழல் அமைச்சரவையின் தலைவரின் சகோதரர் கூறுகின்றார். நிழல் அமைச்சரவை 24 மணித்தியாலங்களுக்குள் ஒரு மாயையாக மாறியுள்ளது. நாளை அது ஆவியாக மாறிவிடும். ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற ஆனியக்காரர்கள் மக்களைக் குழப்புவதற்காக மேற்கொள்ளும் இந்த முயற்சி நாளை மறுநாள் மக்கள் கருத்துக்களின் ஊடாகவே தோற்கடிக்கப்படும்"- என்றார். (ந-5)

# பிரதமரின் சிங்கப்பூர் பயணத்தில் உடன்படிக்கை

கொழும்பு, ஜூலை 11
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கப்பூர் பயணத்தில் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதி பிரதமர் சிங்கப்பூர் செல்கின்றார். அந்த நாட்டுமுக்கிய தலைவர்களுடன் அவர் பேசவுள்ளார். மெகா பொலிஸ் திட்டம், அரச சேவைப் பயிற்சி தொடர்பான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இந்தப் பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் இணைந்துள்ளனர். (ந-5)

# நிழல் அமைச்சரவை அமைப்பது பேராசை என மக்கள் கருதலாம்

## எதிர்க்கட்சி எம்.பி. விதுர சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 11
நிழல் அமைச்சரவை மூலம் அதிகாரத்துக்கு நாம் பேராசை கொள்கின்றோம் என்று மக்கள் நினைக்கக்கூடும்.

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கரம நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிழல் அமைச்சரவையில் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படப் போவதில்லை. எம்மிடம் குறைபாடுகள் இருந்தமையாலேயே மக்கள் எம்மை தோல்வி அடையச் செய்தார்கள். தொடர்ந்தும் நாம் அந்த குறைபாடுகளுடன் செயற்பட்டால் மக்களுக்கு எம் மீது நம்பிக்கை இல்லாத தன்மை ஏற்படும் - என்று அவர் தெரிவித்தார். (ந-5)

# 3 பிரமுகர்களுக்கு எதிராக விரைவில் குற்றப் பத்திரிகை

கொழும்பு, ஜூலை 11
முக்கிய அரசியல் பிரமுகர்கள் மூவருக்கு எதிராக இந்த வாரம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

சட்டமா திணைக்கள அதிகாரிகளைச் சுட்டிக்காட்டி சிங்கள மொழி ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டது.

கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் முடிவுக்கு வந்துள்ளது என்றும் அதன் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது.

இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு எதிராகவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-5)

# எங்கள் முன்பாக தமிழர்களை சுட்டுக் கொன்றது இராணுவம்

## குமாரபுரம் படுகொலை வழக்கில் பெண் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 11
தனது கண் எதிரிலேயே தமிழர்களை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர் என்று திருகோணமலை குமாரபுரம் தமிழர்கள் படுகொலை வழக்கு விசாரணையில் பெண் ஒருவர் சாட்சியமளித்தார்.

அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் ஜூரிகள் குழு இருவாரங்களாக குமாரபுரம் படுகொலை வழக்கு விசாரணை நடைபெறுகின்றது. பெண்கள் உட்பட 40பேர் சாட்சியம் அளித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள், உறவுகளை இழந்தவர்கள் மற்றும் நேரில் கண்டவர்கள் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே இதுவரை சாட்சியம் அளித்தனர். 49 வயதான யேசுதாசன் லட்சுமி சாட்சியமளிக்கையில்,

தான் உட்பட பலரும் கடையொன்றுக்குள் புகுந்திருந்த வேளை, எதிரிகளில் ஒருவரான இராணுவச் சிப்பாய் ஒருவர், தான் உட்பட பலர் தப்புவதற்கு உதவினார் என்று கூறி அவரை அடையாளம் காட்டினார்.

தனது கிராமத்தில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் தன் முன்னாலே கடையொன்றுக்குள் வைத்து இராணுவ துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி இரவு இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 26 தமிழர்கள் இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 39 பேர் காயமடைந்தனர். படுகொலை வழக்கில் தெகியத்த இராணுவ முகாமில் சேவையிலிருந்த 8 இராணுவச் சிப்பாய்கள் எதிரிகளாக அடையாளம் காணப்பட்டு மூதூர் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 1996 ஆம் ஆண்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றது.

> படுகொலை வழக்கில் தெகியத்த இராணுவ முகாமில் சேவையிலிருந்த 8 இராணுவச் சிப்பாய்கள் எதிரிகளாக அடையாளம் காணப்பட்டு மூதூர் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 1996 ஆம் ஆண்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றது.

பின்னர் திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது. போர்ச் சூழ்நிலையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றது என்று காரணம் காட்டி எதிரிகள் வழக்கை அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். மேன் முறையீட்டு நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இந்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதற்போது விசாரணை நடைபெற்று வருகின்றன.

எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள எட்டு இராணுவச் சிப்பாய்களில் இருவர் உயிரிழந்தனர். அனுராதபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கு விசாரணை ஏனைய ஆறு பேருக்கு எதிராகவே நடைபெறுகின்றது.

ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த 6 இராணுவ சிப்பாய்களும் வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணை ஜூரிகள் முன்னிலையில் இன்று திங்கட்கிழமை மீண்டும் தொடரவுள்ளது. (ந-5)



# கோப் குழுவில் நியமிக்கப்பட்டதை அறியவில்லை

– சுஜீவ

கொழும்பு, ஜூலை 11
என்னை கோப் குழுவில் நியமித்தது நான் அறியவில்லை. பின்னர் தான் அது தொடர்பில் எனக்குத் தெரியும் என்று தெரிவித்தார் அமைச்சர் சுஜீவ சேனசிங்க.

கடுவலையில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

என்னுடைய திறமையைக் கருத்திற்கொண்டு கட்சித் தலைமை என்னை கோப் குழுவில் நியமித்தது. நான் நியாயத்துக்காவே போராடுகின்றேன். நான் ஜனாதிபதி சொல்வதையும் கேட்கப்போவதில்லை. பிரதமர் சொல்வதையும் கேட்கப் போவதில்லை. ஊடகங்கள் கூறுவதையும் செவி மடுப்பதில்லை.- என்றார். (ந-5)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# 45 ஆயிரம் ஆசிரியர்களுக்கு தவறான பதவி உயர்வுகள்

## அகில இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 11
45 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் தவறாக வழங்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யல்வெல பஞ்ஞாசேகர தெரிவித்தார்.
ஆசிரியர் சேவை தரம் இரண்டில் இருந்து முதலாவது தரத்துக்குப் பதவி உயர்வு வழங்க ஒருவரின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டது.
சிலருடைய பதவிக்காலம் 5 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தவறான முறையில் வழங்கப்பட்ட இந்தப் பதவி உயர்வுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் – என்று அவர் தெரிவித்தார். (ற-5)

# இலங்கையின் சுயாதீனத் தன்மை பாதிக்கப்படாதவாறு ஒத்துழைப்பு

## உறுதியளித்தார் சீன வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஜூலை 11
இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத் தன்மையைப் பாதிக்காத வகையில் அனைத்துவிதமான ஒத்துழைப்புக்களையும் சீனா தொடர்ந்து வழங்கும்.
இவ்வாறு சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் உறுதியளித்தார்.
உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார்.
இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு மற்றும் வரலாற்று தொடர்புகளை பாதுகாக்கும் வகையில் அனைத்து செயற்பாடுகளையும் சீனா தொடர்ந்து முன்னெடுக்கும்.
இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் தொடர்ந்தும் சீனா ஒத்துழைப்புடன் செயற்படும் என்று அவர் தெரிவித்தார்.
இலங்கையின் பாதுகாப்பு மற்றும் நீர்வளம் என்பவற்றில் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஏற்கனவே சீன அரசால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்வதற்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ள நிலையில் பிரதமருடனான சந்திப்பின் போது இந்த விடயம் குறித்தும் இரு தரப்பு பேச்சு முன்னெடுக்கப்பட்டது.
இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால தொடர்புகளைத் தொடர்ந்தும் மேம்படுத்த இவ்வாறான கலந்துரையாடல்கள் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ற-5)

# சமையல் எண்ணெய் வகைகளுக்கு தர நிர்ணயம் செய்வதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 11
உணவு சமைப்பதற்காக பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தை நடைமுறைப்படுத்த நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.
அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அதிகார சபையின் தலைவர் ஹசித்த திலகரத்ன கூறினார்.
சந்தையில் காணப்படும் எண்ணெய் வகைகளின் தரம் குறித்து பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்தது என்று அவர் தெரிவித்தார்.
உணவு சமைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பாம் எண்ணெயின் தரம் தொடர்பில் கடந்த சில நாள்களாகப் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியிருந்தன.
மனித நுகர்வுக்கு உதவாத பாம் எண்ணெய் கொண்டுவரப்பட்ட 24 கொள்கலன்கள் சுங்கப் பிரிவால் கைப்பற்றப்பட்டதை அடுத்தே பிரச்சினைகள் ஏற்பட்டன.
சுத்திகரிக்கப்படாத பாம் எண்ணெயில் 5 வீதத்துக்கும் குறைவான கொழுப்பும், சுத்திகரிக்கப்பட்ட பாம் எண்ணெயில் 0.1 வீதமாக கொழுப்பும் காணப்பட வேண்டும் என சுங்கப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.
கைப்பற்றப்பட்ட எண்ணெயில் 14 முதல் 20 வீத கொழுப்பு அடங்கியுள்ளமை பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.
தரமற்ற உணவு சமைப்பதற்காக பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் – என்று அவர் தெரிவித்தார். (ற-5)

# 800 மெற்றிக் தொன் கழிவு சலாவவில் அகற்றப்பட்டது

கொழும்பு, ஜூலை 11
கொஸ்கம – சலாவ இராணுவ முகாம் வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் இருந்து 800 மெற்றிக் தொன் கழிவுகள் இதுவரை அகற்றப்பட்டன.
இவ்வாறு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்தது.
சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட திடீர் வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் தேங்கிய குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. மேல் மாகாண சபை 22 லட்சத்துக்கும் அதிகமான நிதியை அதற்காக ஒதுக்கியது.
இந்த வேலைத் திட்டம் சீதாவக பிரதேச சபையின் தலைமையில் இடம்பெற்றது.
இதற்காக ஹோமாகம மற்றும் தொம்பே ஆகிய பிரதேச சபைகளின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது என்று உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
எட்டு நாள்களுக்குள் கழிவுகளை முழுமையாக அகற்றி விட முடியும் என அமைச்சு கூறியுள்ளது. (ற-5)

# கைகலப்பை விலக்கச் சென்ற பெண் கொலை

கொழும்பு, ஜூலை 11
இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பை விலக்கச் சென்ற பெண் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மலையகம், நோட்டன் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த (வயது - 42) என்ற பெண்ணே உயிழந்தார்.
கைகலப்பை விலக்கச் சென்றபோது இளைஞர் ஒருவரால் இவர் தாக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு எமது அறிக்கையைப் பயன்படுத்தலாம்

## மக்ஸ்வெல் பரணகம கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 11
எமது ஆணைக் குழுவின், இறுதி அறிக்கையை உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம். இவ்வாறு நான் நம்புகின்றேன் என்று மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற்போனோர் தொடர்பில் ஆராய கடந்த ஆட்சியில் முன்னாள் நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையில் காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
ஆணைக்குழுவின் கால எல்லை எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல்வேறு அமர்வுகளை நடத்தி காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்து சாட்சி விசாரணைகளையும் ஆணைக்குழு மேற்கொண்டது.
இறுதி அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார். எதிர்வரும் 15 ஆம் திகதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.



செப்ரெம்பர் மாதமளவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு அமைக்கப்படும் என்று அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் தெரிவித்தார்.
உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு எமது அறிக்கை பெரும் உதவியாக இருக்கும் – என்று மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார். (ற-5)

# சீனாவின் முக்கியத்துவத்தை இப்போது அரசு உணர்கின்றது

## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்

சீனாவின் முக்கியத்துவத்தை அரசு இப்போதுதான் உணர்ந்து கொண்டுள்ளது.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
என்னுடைய தந்தை மகிந்த ராஜபக்சவின், பல செயற்றிட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்' என்று நாமல் ராஜபக்ச தனது ருவிட்டர் தளத்தில் தெரிவித்தார்.
உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யீ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள நிலையில் நாமல் இந்தத் தகவலை வெளியிட்டார்.
கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்ந்த சீன வெளிவிவகார அமைச்சர், விரைவில் அம்பாந்தோட்டைத் துறைமுகப் பணிகளை முழுமைப்படுத்தவும் சீனா நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறியிருந்தார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், ஆரம்பிக்கப்பட்ட துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட சீனாவின் சகல அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், அந்தப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. (ற-5)

# பன்னாட்டு பிரமுகர்களின் வருகையால் நெருக்கடியில் வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஜூலை 11
உலகின் பலம் வாய்ந்த நாடுகளின் உயர் மட்டப் பிரமுகர்கள் அடுத்தடுத்து இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். வெளிவிவகார அமைச்சு அதனால் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.
மூன்று நாள் பயணமாக இலங்கை வந்திருந்த சீன வெளிவிகார அமைச்சர் வாங் யி பீஜிங்க்கு நேற்றுத் திரும்பினார்.
அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வால் மூன்று நாள் பயணமாக நாளை கொழும்பு வரவுள்ளார்.
அவர் நாடு திரும்பியவுடன் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ் இலங்கைக்கு வருகின்றார். வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்களுடன் இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார். புல்லர்ஸ் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ரஷ்ய தூதரக கட்டடத்தையும் அவர் திறப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அவரைத் தொடர்ந்து ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் நகரானி இலங்கைக்குப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.
கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோன் இலங்கைக்கான பயணமும் இதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.
ஒரு ஆண்டில் மூன்று அல்லது நான்கு உயர்மட்டப் பிரமுகர்களின் பயணங்களே இடம்பெறுவது வழமை. ஆனால் அடுத்தடுத்து, ஐந்து முக்கிய நாடுகளின் உயர் மட்டப் பிரமுகர்கள் இலங்கை வரவுள்ளனர்.
வெளிவிவகார அமைச்சு கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இராட்சியத்துக்கு உள்ளே வெறும் பூச்சியம் தானா...?

இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து பொறுப்புக் கூறும் பொறிமுறையில், சர்வதேச பங்களிப்பு மிகவும் அவசியம். அதன் ஊடாகவே அங்கு வாழும் சமூகங்களுக்கு, இப்போதைய பொறிமுறை நம்பிக்கைக்கு உரிய ஒன்றாக அமையும்.

மேற்கண்டவாறு பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாயத்துறை அமைச்சர் ஹுஹோ சுவைர் அழுத்திக் கூறியுள்ளார்.

எங்கள் நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும், சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புத் தேவை இல்லை என்று பிடிவாதத்துடன் கருத்து வெளியிட்டு வருவதன் பாதகநிலை, எந்த வகையிலும் உகந்தது அல்ல என்றும்--

அதனை அவர்களிடம் அழுத்திக் கூறியதாகவும் சுவைர் தகவல் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தலைவர் சயிட் அல் ஹுசைன் ஊடாக வும் அவர்களுக்கு பிரிட்டனின் நிலை அழுத்திக் கூறப்பட்டிருப்பதாகவும், ஹுஹோ சுவைர் மனம் மிக நொந்து அழாக் குறையாகத் தெரிவித்திருக்கிறார்.

மேலும்--

போர்க்குற்றங்களை ஒப்புக்கொள்ளும் விடயத்தில், விவகாரத்தில், ஆணைக் குழுவுடன் இணைந்து, அதன் 30/1 இலக்கத் தீர்மானத்துக்கு இலங்கை அரசுக்கு நாம் உற்சாகம் ஈட்டும் பணிகளை மேற்கொண்டிருந்தோம்-என்றும் பிரிட்டனின் அமைச்சர் சுவைர் தகவல் வெளியிட்டதும் இங்கு தொட்டுக்காட்டத் தக்கதாகும்.

இத்தகைய ஒரு நிலையிலும்--

வெளிநாட்டு நீதிபதிகள் விசாரணைகளில் ஈடுபடுவதற்கு இடம் அளிக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசின் அதிபதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன ஓர்மத்துடன் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையின் உள்நாட்டு நிர்வாகத்திலோ, அன்றி நீதித்துறையின் செயற்பாடுகளிலோ வெளிநாட்டு, பன்னாட்டு, நீதிபதிகளோ, வெளிநாட்டு நீதித்துறை சார்ந்தவர்களோ, தலையிடுவதற்கு, நான் பதவியில் இருக்கும்வரை, ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்-என்றவாறு ஜனாதிபதி மீண்டும், மீண்டும் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாப் பயணத்தின் பின்னரான ஊடகவியலாளர் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த தகவல்கள், கருத்துக்களை அடித்து நொறுக்கும் ஓர்மத்துடன் ஜனாதிபதியின் கருத்துக்கள் மேலெழும்பி உள்ளன.

அதே பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தமது கருத்துக்களை, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக வெளிப்படுத்தி உள்ளார் எனக் கருதலாம்.

இதன் பின்னர், பாதிப்புற்ற தமிழ் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்; அவர்களுக்கு என்னதான் கைக்கு வரப்போகிறது, என்பதற்கான விடை, இராச்சியத்துக்குள்ளே ஒரு பூச்சியம் என்ற நிலையே பரந்து விரிகிறது. இனி என் செய்வோம்...?

# அடுத்தவன் காணிக்கு ஆசைப்பட்டவர்களுக்கு

## ஆப்பு வைக்க வந்திருக்கும் காலவிதிப்பு (திருத்த)ச் சட்டம்

ந.சதாசிவ ஐயர்
ஓய்வுபெற்ற
மேலதிக பதிவாளர்



ஆதனமொன்றை நீண்ட காலமாக ஆட்சி செய்து வருபவர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு அதாவது பத்து வருடத்துக்கு அறுபத்தெட்டாம் அதிகாரமான ஆட்சியுரிமைச் சட்டத்துக்கு அமைவாக ஆண்டனுபவித்த தன் காரணமாக வெளிப்படுத்தல் உறுதி முடிப்பதன்மூலம் அது தமது ஆதனமென வெளிப்படுத்துவர். இவ்வுறுதியானது நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் முக்கியமாக வங்கிக்கடன் பிரதேச சபையில் ஆதனவரிப்பதிவு மற்றும் நிதி நிறுவனங்களால் எடுத்த எடுப்பில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பொதுவாக வங்கிகள் 35 வருடத் தடையற்ற வர லாற்றைக் கொண்ட ஆதனங்கள் மீதே கடன் வழங்கும். அதே போல் உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது ஏட்டில் உள்ள பெயர் விவரங்களுக்கே பதிவுமாற்றம் தொடர்பில் முன்னுரிமை அளிக்கும். இருப்பினும் ஆட்சியுரிமைச் சட்டத்தின்படி ஆதனமொன்று தொடர்பில் அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு; ஒருவர் சரியான நடவடிக்கையுடன் தூய்மையான சிந்தையுடன் ஆட்சியுறுதி முடிக்க முடியும். அதன் தூய்மை எனப்படுவது ஆட்சியுரிமை சட்டத்தின்படி ஆட்சிக்காலமானது சரியாக ஓடியுள்ளது என்பது உறுதியில் தெளிவாக எடுத்துக் கூறலிலும் உறுதிப்படுத்தப்படலிலும் தங்கியுள்ளது.

எனினும் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக மக்கள் இனக் கலவரம், போர், இடப்பெயர்வு காரணமாக தமக்குச் சொந்தமான காணிகளைவிட்டு வெளியேறியதுடன் வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டனர். அதுமட்டுமன்றி இங்கிருக்கும் உறவினர் நண்பர்களிடம் எந்தவித எழுத்து ஆதாரமும்இன்றி காணியைப் பார்த்துக்கொள்ள, ஆண்டனுபவிக்க விட்டவர்களே பெரும்பாலானோர். தப்பினோம்-பிழைத்தோம் என எதுவும் செய்யாமல் காணிகளை விட்டுப்போனோரும் உண்டு. தற்போதுதான் தமது காணிகள் பற்றி நினைத்துப் பார்க்கும் சந்தர்ப்பமும் அவற்றை வந்து பார்க்கும் சந்தர்ப்பமும் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

மனிதாபிமானத்துடன் மற்றவர்களின் ஆதனங்களைப் பாதுகாத்து அவர்கள் வந்தபின் அன்புடன் கையளித்த அன்புள்ளங்களே அதிகம் எனினும் எல்லைகளைப் பின்னகர்த்தி தமது காணியைப் பெருப்பித்தவர்களும் பாதையை இல்லாமல் செய்தும், வழிவாய்க்கால் பாவிப்பை இல்லாமல் செய்தும், பக்கத்துக்காணியையும் சேர்த்து உறுதிமுடித்தவர்களும் உண்டு. ஆட்சியுரித்து சட்டத்தின்படி அதனை உறுதியாக்கிக் கொண்டவைகளும் இல்லாமல் இல்லை. இந்தச் சிக்கல்களை அவதானித்த அரசு ஆட்சி உரிமைச் சட்டத்துக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. ஆட்சியுரிமைச்சட்டப்படியான காலஎல்லை பத்துவருடங்களாகும். அந்தப் பத்துவருட காலத்துள் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில் காணி உரித்தாளர்கள் இருக்கவில்லை என்பதை கவனத்தில்கொண்டே இத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கமைய காலவிதிப்பு (திருத்தச்சட்டம்) இல 5/2016 நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 2016 ஏப்ரல் இருபத்தாறாம் திகதியில் இருந்து இரண்டு வருடங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும். இனக் கலவரத்தை கவனத்தில்கொண்டுபோலும் இதன் காலம் 1983 மேமாதம் முதலாம் திகதி முதல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த 2009 மே பதினெட்டாம் திகதிக்கு இடைப்பட்ட காலம் என காலவரையறை செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்தக் காலப்பகுதியில் ஆட்சியுரிமைக்காலம் ஓடியிருந்தாலோ தொடங்கியிருந்தாலோ அதற்கெதிராக இந்தக் காலப்பகுதியில் திருத்தச் சட்டத்தில் கூறப்பட்ட தகுதியுள்ளவர் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

இத்திருத்தச் சட்டத்தின்படி ஆட்சியுரித்து உறுதிகள் எல்லாம் செல்லாதவை என்றோ ஆட்சியுரித்துக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதென்றோ மயக்கம் கொள்ளத் தேவையில்லை. பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணமளிக்கவே இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆட்சியுரித்து உறுதியானது. வெளிப்படுத்தல் உறுதியாகவே அமைவதால் ஏனைய வெளிப்படுத்தல் உறுதிகளையும் இதனோடு சேர்த்து பார்ப்பது பொருத்தமற்றதாகும்.

தாங்கள் வெளிநாட்டில் அல்லது இலங்கையில் இருந்தால்கூட மேலே குறிப்பிட்ட காலத்துள் தமது மற்றும் தமது முன்னோரின் காணிகளை முறைப்படி உரிமை கொண்டு பராமரிக்க முடியாமற் போனவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் இத்திருத்தச் சட்டப்படி நிவாரணம் தேடிக் கொள்ள முடியும்.

இத்திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு அச்சக இணையத்தளத்தில் பார்க்க முடியும். பதிவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# நல்லாட்சி அரசுக்குள் வலுக்கின்றது முரண்பாடு

நல்லாட்சி அரசின் அதியுயர் மட்டத் தலைவர்களிடையே முரண்பாடுகள் வலுத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் ஜனாதிபதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர். அந்தக் கட்சியின் தலைவரும் அவர்தான். இதேவேளை பிரதமர் பதவியை வகிக்கும் ரணில் விக்கிரமசிங்க ஐக்கியதேசியக் கட்சியின் தலைவராக உள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவை வீழ்த்திவிட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்த இரண்டு கட்சிகளும் ஓர் உடன்பாட்டுகக்கு வந்தன. இதனடிப்படையிலேயே மைத்திரி ஜனாதிபதியானார். ரணில் பிரதமர் பதவிக்குரிய கதிரையில் அமர்ந்து கொண்டார். ஆனால், கட்சி அடிப்படையிலான வேறுபாடுகள் மறைந்துவிடவில்லை. ஜனாதிபதி சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துவதிலும் பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியை வளர்த்தெடுப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டனர்.



மத்திய வங்கியின் ஆளுநர் பதவி விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பட்டு நின்றதைக் காணமுடிந்தது. பிரதமர் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வந்தார். அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் முற்றாகவே நிராகரித்தார். இறுதிவரை மகேந்திரனுக்கான தமது ஆதரவை அவர் விலக்கிக் கொள்ளவில்லை. ஆனால் எதிரணியினரின் எதிப்புக்களுக்கு ஜனாதிபதியால் தாக்குப்பிடிக்க முடிய வில்லை. எதிர்ப்பாளர்கள் சுதந்திரக் கட்சியையும் சேர்ந்தவர்கள் என்பது அவருக்குப் பெரும் தலையிடியாக அமைந்தது. இறுதியில் அவர் பணிந்து போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இதனால் அர்ஜுன் மகேந் திரன் பதவியிலிருந்து அகற் றப்பட்டு இந்திரஜித் குமாரசுவாமி அவரது இடத்தில் அமர்த்தப்பட்டார். இந்த விடயத்தில் பிரதமர் தமது எதிர்ப்புக்களை ஜனாதிபதியிடம் நேரடியாகவே காண்பித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியினரும் இந்த விடயத்தில் கொதிப்படைந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இல்லாமல் மைத்திரியால் ஜனாதிபதியாக ஆகியிருக்க முடியாது என்பது அவர்களது வாதமாக உள்ளது. இந்த நிலையில் இறுதிப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற் றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து இடம்பெறவிருக்கும் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்குவது தொடர்பிலும் ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறான நிலைப்பாட்டைக் கெண்டுள்ளனர். சர்வதேச நீதிபதிகளின் உள்ளடக்கம் தொடர் பாக ஜெனிவாத் தீர்மானத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஜனாதிபதி சர்வதேச நீதிபதிகளான உள்ளடக்கம் தொடர்பாகத் தமது எதிர்ப்பை வெளி யிட்டு வருகின்றார். இது தொடர்பாகத் தாம் கலந்து கொள்கின்ற கூட்டங்களில் கருத்துத் தெரிவித்தும் வருகின்றார். இதுவும் அரசுக்குள் நெருக்கடியை உருவாக்கி யுள்ளது. இதைச் சீர் செய்யும் முயற்சிகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

> இறுதிப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து இடம்பெற விருக்கும் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்குவது தொடர்பிலும் ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறான நிலைப் பாட்டைக் கெண்டுள்ளனர்.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடரின்போது இலங்கையில் தற்போது காணப்படுகின்ற நல்ல முன்னேற்றம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளன. மகிந்த வின் ஆட்சிக்காலத்தில் இலங்கை ஒரு மோசமான யுகத்தினுள் தள்ளப்பட்டி ருந்தது. தற்போது அவ்வாறானதொரு நிலை இங்கு காணப்படவில்லை. ஆனால், இலங்கையில் நடந்த இறுதிப்போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரணை செய் யும்போது சர்வதேச நீதிபதிகள் உள்ளடங் கலான கலப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமென ஜெனிவாத் தீர்மா னத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள போதிலும், பிரதமரும் ஜனாதிபதியும் இதில் முரண்பட்டு நிற்கின்றனர். ஜெனிவாத் தீர்மானத்துக்கு ஒத்துப்போகின்ற நிலைப்பாட்டை பிரதமர் எடுத்துள்ளார். ஆனால், ஜனாதிபதியோ இதை முற்று முழுதாகப் புறமொதுக்கி வைத்துள்ளார். முக்கியமான இரண்டு விடயங்களில் ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பட்டு நிற் கின்றமை நல்லாட்சியின் எதிர்காலத்தையே கேள்விக் குரியதாக்கியுள்ளது.

## மிகவும் அவசியமானது கே.எம்.பி.எச் 25 என்ற வரையறை

யாழ் .குடாநாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பதுபோல அவற்றின் ஓட்ட வேகமும் நாளுக்கு நாள் மணிக்கு 100 கிலோ மீற்றரையும் விட அதிகரித்துச் செல்வதை எல்லோராலும் அவதானிக்க முடிகின்றது. இதனால் பல மனித உயிர்கள் அநியாயமாகக் சாவடைகின்றன. இதனை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிடின் மக்கள் தெருவில் போய்வர முடியாத சூழ்நிலை ஏற்படும்.

போக்குவரத்துப் பொலிஸார் தலைக்கவசமின்றிச் செல்பவர்களை மட்டும் கண்டுபிடித்துத் தண்டம் விதிப்பதே தமது தலையாய கடமை என்று செயற்படுகின்றனர். தெருவிலே இளைஞர்களும், யுவதிகளும் போட்டாபோட்டி போட்டு மோட்டார் சைக்கிள்களை பயங்கர வேகத்தில் முறுக்கிக் கலைபட்டுச் செல்கின்றனர். இவர்களுக்கு நான் குறைந்தவனா என்ற மனப்பாங்கில் ஏனைய இ.போ.ச தனியார் பஸ் சாரதிகளும் டிப்பர், படி, லொறி, கார்ச்சாரதிகளும் தலைதெறிக்க ஒடுகின்றனர். இவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தி ஏன் தண்டம் அறவிடுவதில்லை. சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றால் போதும் என்ற நினைப்பே தவிர போக்குவரத்து விதி முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற நினைப்பு எவரிடத்திலும் இல்லை. தமது வருமானத்துக்காக மக்கள் நின்று கைகாட்டும் இடத்தில் எல்லாம் சடுதியாக பஸ்ஸை நிறுத்துவர். பின்னால் வரும் வாகனம் பற்றிச் சிந்திப்பதில்லை. அதேபோல சாரதி தனது பக்க கதவை பின்முன் பாராது திறந்து இறங்குவார். அப்போது சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் வருபவர்கள் கதவுடன் அடிபட்டு விழுந்து, பின்னால் வரும் வாகனத்தில் அடிபட்டு சாவடைய நேரிடுகிறது.

ஏ9 வீதியில் இடத்துக்கிடம் மறைந்திருந்து மீற்றர் வைத்திருந்து வேகத்தை பொலிஸார் பரிசோதிப்பதைப் போன்று சனத்தொகை அதிகரித்த குடாநாட்டிலும் அதே செயலைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு வாகனத்திலும் கே.எம்.பி.ஏச் 25 என்ற ஸ்ரிக்கர் ஒட்டி எல்லோரையும் வேகக் கட்டுப்பாட்டுடன் ஓடச் செய்யவேண்டும். மாதம் ஒரு தடவையாவது ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் போக்குவரத்து விதிமுறைகளை செய்து காண்பிக்க வேண்டும். 1970 ஆகிய 1980 காலப்பகுதியில் இந்தச் செயற்பாடு பொலிஸாரால் அடிக்கடி செய்து காண்பிக்கப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. எனவே இலங்கைப்பொலிஸ்மா அதிபர், யாழ்.குடாநாட்டுக்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிகாரி ஆகியோரின் அனுசரணையுடன் எதிர்வரும் காலங்களில் (காலம் தாழ்த்தாது) இந்த நடைமுறைகளைப் பின்பற்ற மக்களுக்கு அறிவுறுத்தினால் விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புக்களை தடுத்துநிறுத்த முடியும்.

எஸ்.எஸ்.சர்மா இந்து மதகுரு யாழ்ப்பாணம்.

## கள்ள மௌனத்தைக் கலையுங்கள்

பாலியல் துஷ்பிரயோகக் குற்றவாளிகளை விட இத்தகைய குற்றங்களைக் கண்டும் அவற்றை வெளிப்படுத்தாது கள்ள மௌனம் காப்பவர்களே சமூகத்துக்கு மிகவும் ஆபத்தானவர்கள்.

மறைமுகமாக இத்தகைய சீரழிவுகளை ஊக்குவிப்பவர்கள் இவர்களே. அவர்கள் ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ள வேண்டும். நாளை தங்களது பிள்ளைகள் பாதிக்கப்படும் போதும் அவர்களால் மௌனம் காக்க முடியுமா? எங்களது பிள்ளைகள் பாதிக்கப்படாதவரை, இந்தக் குற்றங்கள் எமக்கு வெறும் செய்திகளாகவும், சம்பவங்களுமாகவே இருக்கும்.

எங்கள் பிள்ளைகள் பாதிக்கப்படும் போது தான் அவை சோகங்களாகவும் வேதனைகளாகவும் இருக்கும். துணிந்து இந்தச் சீரழிவுக்கு எதிராக குரல் கொடுக்கப் பலரும் முன்வர வேண்டும்.

நாளை உங்கள் பிள்ளைகளும் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவாவது இந்தக் குற்றங்கள் குறித்துத் தகவல் தெரியவருவோர் தங்கள் கள்ள மௌனங்களைக் கலைத்து உண்மைகளை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

விஸ்வாஸ்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளர்ச்சியாளர்கள் தாக்குதலில் அலப்போவில் 38 பேர் உயிரிழப்பு

டமஸ்கஸ், ஜூலை 11

சிரியாவின் அலப்போ நகரில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது கிளர்ச்சியாளர்கள் எறிகணைத் தாக்குதல் நடத்தினர். அதில் 38 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் 14 சிறுவர்களும் 13 பெண்களும் அடங்குகின்றனர் என்று அங்குள்ள மனித உரிமைகள் அமைப்பு ஒன்று தெரிவித்தது.

கடந்த 3 வாரங்கள் அங்கு போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது. அதன்பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சிரியாவின் மிகப்பெரும் நகரங்களில் அலப்போவும் ஒன்று. அதன் ஒரு பகுதி தற்போது அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஒரு பகுதி கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது. கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதிகளில் சுமார் 3 லட்சம் மக்கள் அகப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

அலப்போ நகரை மீட்கும் நடவடிக்கையில் சிரிய அரச படைகளும், கூட்டுப் படைகளும் முழு வீச்சில் இறங்கியுள்ளன. கிளர்ச்சியாளர்கள் உள்ள பகுதிகளில் கடும் தாக்குதலை நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதல்களில் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்று அங்குள்ள தன்னார்வ அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன. (ற-ரி4)

## காளையை அடக்க முயன்ற வீரர் காளை மோதிச் சாவு



மட்ரிட், ஜூலை 11

ஸ்பெய்னில் நடக்கும் உலகப் புகழ்பெற்ற காளை அடக்கும் போட்டியில் ஸ்பெய்னின் முதன்மை வீரரில் ஒருவரான விக்ரர் பறியோ (வயது-29) காளை மார்பில் முட்டியதில் இறந்தார்.

பெரியா-டெல் ஏஞ்சல் என அழைக்கப்படும் காளை அடக்கும் போட்டி நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் காண்பிக்கப்பட்டது. விக்டர் காளையை அடக்கும் போது காளை அவரின் மீது முட்டும் காட்சிகளையும், உயிரிழந்ததையும் மக்கள் நேரடியாக தொலைக்காட்சியில் பார்த்தனர்.

விக்ரர் சிறு வயதில் இருந்தே காளை அடக்கும் வீரனாக வரவேண்டும் என்பதை தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார். 2012 ஆம் ஆண்டு இதற்கான முழுத் தகைமையைப்பெற்று, களத்தில் இணைந்தார். விக்ரரின் இறப்புக்கு பலரும் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தனர். (ற-ரி4)

# தென்சூ…

# கடும்

## 270க்கும் அ…



ஜூமா, ஜூலை 11

தென் சூடானில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் வரை இடம்பெற்ற மோதல்களின்போது இராணுவத்தினரும், 33 பொது மக்களும் உட்பட 272 பேர் உயிரிழந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

தென் சூடான் ஜனாதிபதிக்கு ஆதரவான தரப்பினருக்கும், முன்னாள் கிளர்ச்சிக் குழுத் தலைவரும் தற்போதைய முதல் துணை ஜனாதிபதியுமான ரிக் மக்காரின் ஆதரவாளர்களுக்கும் இடையே கடந்த சில தினங்களாக மோதல்கள் இடம்பெற்றுள்ளன. சுமார் 200க்கும் மேற்பட்ட மக்கள் தென்சூடான் தலைநகர் ஜூமாவில் அமைந்துள்ள ஐ.நா.பணியக வளாகத்தில் தஞ்சம் கோரினர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகலில் அங்கு தங்கியிருந்த அகதிகளுக்கும், ஐ.நா. பணியாளர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் நிலை தோன்றியது. அங்கு விரைந்த சீன அமைதி காக்கும் படையினர், நேபாள மற்றும் எதியோப்பிய தரைப் படை, ஐ.நா. அமைதி காக்கும் பொலிஸார் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மோதல் நிலை காரணமாக ஜனாதிபதி மாளிகைக்கு அண்மையிலும் பரஸ்பர

> மோதல் நிலை காரண…
> மாளிகைக்கு அண்…
> பர துப்பாக்கிச் சூடு நட…
> ஐ.நா. அகதிகள் முகாமின் வ…
> யிலும் அதன் அண்மைய பகு…
> 12க்கும் மேற்பட்ட ஷெல்கள் வீ…
> வெடித்தன என்று கூறப்படுகி…



அமெரிக்காவில் இனத்துவேச உணர்வுடன் செ…
நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. அமெ…
னர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரைப் பொலிஸார் …
அமெரிக்காவில் சில தினங்களுக்கு முன்னர் இரு …
சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## சிறைக்காவலரின் உயிரைக் காப்பாற்றிய கைதிகள்

வொஷிங்டன், ஜூலை 11



அமெரிக்காவின் ரெக்சாஸ் பகுதியில் உள்ள சிறைச்சாலைக் கைதிகள், சிறைச்சாலைக் காவலர் ஒருவரைக் காப்பாற்றினர். இந்தச் சம்பவம் அங்குள்ள பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

சிறைக் கைதிகளை பாதுகாக்கும் சிறை அதிகாரி துப்பாக்கியுடன் கதிரையில் அமர்ந்திருந்தார். அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

முதலில் அவர் அவர்களுடன் நகைச்சுவையாக பேசியதால் விளையாட்டு என அவர்கள் நினைத்தனர். ஆனால் அவருக்கு உண்மையாகவே மாரடைப்பு ஏற்பட்டதை கைதிகள் அவதானித்தனர்.

அவர்களால் சிறை அடைப்புக்களைத்தாண்டி உதவி செய்ய முடியவில்லை. காவலைக் கடக்க முயற்சித்தால் ஏனைய காவலர்களின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காவார்கள் என்பதால், கதவுகளைத் தட்டி ஓசை எழுப்பினர்.

சம்பவ இடத்தக்கு வந்த பொலிஸார் சிறைக்காவலருக்கு முதலுதவி அளித்தனர். இந்தச் சம்பவத்தின்போது மாரடைப்பு ஏற்பட்ட சிறைக்காவலரின் துப்பாக்கியும், சாவியும் இருந்துள்ளது. சிறைக்கைதிகளின் நடத்தைகளைப் பலரும் பாராட்டினர். (ற-ரி4)

ஈரவிழிகளுடன் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி
"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"

அமரர்
வஸ்தியாம்பிள்ளை சிறில்
(ஓய்வுதியர், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை)
இன்முகத்துடன் எல்லோருடனும்
பழகி யாவரையும் கவர்ந்து
அனைவரினதும் இதயத்திலும் நிறைந்த
அன்புத் தந்தையின்
ஆன்ம ஈடேற்றத்திற்காக
இறைவனை இடைவிடாமல்
இறைஞ்சுகின்றோம்.
இங்ஙனம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்,
முனாயமலை ஒழுங்கை,
மானிப்பாய்.
[illegible]

## ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதலில் ரஷ்ய ஹெலி வீழ்ந்தது

டமஸ்கஸ், ஜூலை 11

சிரியாவில் ரஷ்ய ஹெலி ஒன்று ஐ.எஸ். அமைப்பால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் பயணித்த இரு விமானிகள் உயிரிழந்தனர். புராதன நகரான பல்மைரா நகரம் ரஷ்ய இராணுவத்தினரின் உதவியுடன் கைப்பற்றப்பட்டது. நகரின் கிழக்குப் பகுதி தற்போதும் ஐ.எஸ். அமைப்பின் கைகளில் உள்ளது.



அந்தப் பகுதியில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அங்கு விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஹெலி ஒன்று சுடப்பட்டது. ஐ.எஸ். அமைப்பின் தாக்குதலில் ஹெலி வீழ்ந்தது என்று சிரிய இராணுவம் உறுதிப்படுத்தியது. ஐ.எஸ். அமைப்பு அவ் ஹெலி மீதான தாக்குதலுக்கு ஊரிமை கோரியுள்ளது. (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொலிஸார் மீது சூடு
## அமெரிக்காவில் சம்பவம்
### 5 பேர் சாவு; 7 பேர் படுகாயம்

வொஷிங்டன், ஜூலை 11

அமெரிக்காவில் பொலிஸாருக்கு எதிராக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. அங்குள்ள லூசியானோ, மினிசோட்டாவில் இரு கறுப்பினத்தவர்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாகிச் சூடு நடத்தப்பட்டது. அதில் 5 பொலிஸார் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயமடைந்தனர்.

சூட்டுச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் 25 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் 6 ஆண்டுகள் அமெரிக்க இருப்பு இராணுவத்தில் பணியாற்றினார்.

இந்தத் தாக்குதல் மிகத் திட்டமிட்டு நடத்தப்பட்டது – என்று அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி கூறினார்.

அதேவேளை –

கறுப்பினத்தவர்கள் மீது பொலிஸார் சூடு நடத்தியமை இனசமத்துவம் தொடர்பான அத்துமீறலை வெளிக்காட்டுகின்றது என்று பல தரப்பினர் கருத்துத் தெரிவித்தனர். பொலிஸாரின் நடவடிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் சமத்துவத் தன்மையுடன் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும். அரசியல் ரீதியில் இதைச் சொல்லவில்லை. அமெரிக்கனாக இந்தக் கருத்தை முன்வைக்கின்றேன்– என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்தார்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு, பொலிஸார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு என்பவற்றால் அந்தப் பகுதியில் தொடர் பதற்றம் நிலவுகின்றது. பொதுமக்கள் மத்தியில் ஒரு அசாதாரண அச்சநிலை ஏற்பட்டுள்ளது என்று அங்கிருந்து தகவல்கள் தெரிவித்தன. (ற–ரி4)


# சூடானில்
# மோதல்
## அதிகமானோர் சாவு



காரணமாக ஜனாதிபதி
அண்மையிலும் பரஸ்
சூடு நடத்தப்பட்டது.
மின் வடமேற்குப் பகுதி
மைய பகுதிகளிலும்
கள் வீழ்ந்து
ப்படுகின்றது. ”

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஐ.நா. அகதிகள் முகாமின் வடமேற்குப் பகுதியிலும் அதன் அண்மைய பகுதிகளிலும் 12க்கும் மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்று கூறப்படுகின்றது.

தொடரும் மோதல்களை நிறுத்துமாறு நாட்டின் ஜனாதிபதியும், முதல் துணை ஜனாதிபதியும் தமது ஆதரவாளர்களிடம் கோரினர். எனினும் மோதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. மோதல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது. (ற–ரி4)



ன் செயற்பட்ட பொலிஸாரைக் கண்டித்து. அங்குள்ள பல
. அமெரிக்க கொடிகளை எரித்தும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி
ஸார் கைது செய்தனர். அதனால் பதற்ற நிலைமை ஏற்பட்டது.
ர் இரு கறுப்பினத்தவர்கள் சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால்
(ற–ரி4)

## ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பின் தளபதி சாவால் பெரும் கலவரம்

காஷ்மீர், ஜூலை 11

ஜம்மு காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பின் தளபதியான பர்கான் வானி இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் கலவரங்கள் உருவாகியுள்ளன. அரச கட்டடங்கள், பொலிஸ் நிலையம் என்பன தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

கலவரத்தை அடக்க இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூடு, வன்முறைகளில் இதுவரை 17 பேர் உயிரிழந்தனர். அங்கு தற்போது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களில் பாதுகாப்புத் தரப்பினர் உட்பட 200க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்த 3 பேர் அவர்களின் ஆயுதங்களுடன் காணாமல் போயுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன. (ற–ரி4)


இலங்கை மத்திய வங்கியிடமிருந்து ஓர் செய்தி



நீங்கள் பின்வரும் பிரச்சனைகளை எதிர்நோக்குகிறீர்களா...
நாணயக் குத்திகள் பற்றாக்குறையா?
காசினைப் பயன்படுத்துவது தொந்தரவானதா?
காசினைக் கொண்டு செல்வது வசதியற்றதா?
மீதிப் பணத்தினை பெறமுடியவில்லையா?
காசு களவாடப்பட்டு விடும் என்ற பயமா?

உங்களின் கொடுக்கல்வாங்கல்களுக்காக
கொடுப்பனவு அட்டையினைப் பயன்படுத்துங்கள்

பற்று அட்டைகள் மற்றும் கடன் அட்டைகள்
- பயன்படுத்துவதற்கு சுலபம்...
- பாதுகாப்பான கொடுப்பனவுகள்...
- சுலபமான கொடுப்பனவுகள்...
- கொண்டு செல்வதற்குச் சுலபமானது...
- பணத்தினை மாற்றுவதற்கான தேவையில்லை...



தற்பொழுது 16 மில்லியன் கொடுப்பனவு அட்டைகள் பயன்பாட்டிலுள்ளன
ஆண்டுதோறும் 60 மில்லியன் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெறுகின்றன

கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்துங்க

மேலும் விபரங்களுக்கு உங்கள் வங்கியை தொடர்பு கொள்ளுங்கள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

ශ්‍රී ලංකා මහ බැංකු
இலங்கை மத்திய வங்
CENTRAL BANK OF SRI LANK

இலங்கை மத்திய வங்கியிலிருந்து உரிமத்தினைப் பெற்றிருக்கின்ற நிறுவனமொன்றினால் மட்டுமே கொடுப்பனவு அட்டைகளை வழங்க

தொலைபேசி : 011 2398596 / தொலைநகல் : 011 2387009 / மின்னஞ்சல் : psd@cbsl.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஜூலை மாத ராசி பலன்கள்



## சிங்கம்

### மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம்

கம்பீரமான தோற்றத்தை உடைய சிங்க ராசியினரே நீங்கள் சுறுசுறுப்பாகவும் அடுத்தவரை அடக்கி ஆளும் திறமையும் பெற்று இருப்பீர்கள். இந்த மாதம் ராசியில் குரு - ராகு, சுகஸ்தானத்தில் வக்ர நிவர்த்தி பெற்ற செவ்வாய் - சனி, சப்தம ஸ்தானத்தில் கேது, இலாப ஸ்தானத்தில் சூரியன் - புதன் - சுக்கிரன் என கிரகங்களின் அமைப்பு இருக்கிறது. ராசியாதிபதி சூரியன் ராசிக்கு 11இல் புதனுடன் சேர்ந்து நிபுணத்துவ யோகத்தைத் தருவதால் மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். கடிதப் போக்குவரத்து அனுகூலமான பலனைதரும். பயணம் லாபகரமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான தீர்வுகள் காணப்படும்.

தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் லாபஸ்தானத்தில் இருக்கிறார். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழில் முன்னேற்றம் காணப்படும். கடிதப் போக்குவரத்து மூலம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசி அவர்களைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். பணவரத்தும் இருக்கும்.

குடும்பாதிபதி புதன் லாபஸ்தானத்தில் ஆட்சியாக இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாகப் பேசிப் பழகுவது நல்லது. தந்தையாருடன் வீண் தகராறு ஏற்படலாம். கவனம் தேவை. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பேசிச் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். குழந்தைகளுடன் நிதானமாகப் பேசி அவர்களுக்கு எதையும் புரிய வைப்பது நல்லது. அவர்களது முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவீர்கள்.

பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கித் தெளிவு உண்டாகும். பயணங்களில் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய பயம் நீங்கும். குழப்பம் இல்லாத தெளிவான மனதுடன் பாடங்களைப் படித்து வெற்றி பெறுவீர்கள்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமையில் சிவனுக்கு வில்வ அர்ச்சனை செய்து வணங்க, மனதில் தைரியம் பிறக்கும். காரிய வெற்றி உண்டாகும்.

**மகம்:** குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பிள்ளைகளுக்காக அலைய வேண்டி இருக்கும். குடும்பத்துக்காகக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு எதிலும் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. பணத் தேவை உண்டாகும்.

**பூரம்:** பொருள்வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர்களால் கைவிடப்பட்ட காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும்.

**உத்தரம் 1ம் பாதம்:**
தொழில் வியாபாரத்துக்குத் தேவையான பண உதவி கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புதிய வருமானம் கிடைப்பதில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்பமில்லாத இடமாற்றம் உண்டாகலாம்.

(தொடரும்)

# சிறப்புக்கள் நிறைந்த ஆடிமாதம்

அராலியூர் கலாபூசணம்
வி.செல்வரத்தினம் ஜே.பி

ஆடி ஓர் அருமையான மாதம் தட்சிணாயண புண்ணிய காலம் ஆடி மாதத்தில் தொடங்கி மார்கழி மாதம் வரையாகும். இந்தப் புண்ணிய காலத்தின்போது சூட்சும சக்திகள் வானத்திலிருந்து வெளிப்படும். இந்தச் சமயத்தில் பூஜைகள், வேத பாராயணங்கள், ஜெபங்கள், நீத்தார் வழிபாடுகள் செய்தால் பயன் அதிகமாகக் கிடைக்கும். அத்துடன் பிராணவாயு அதிகமாகக் கிடைக்கும் மாதமும் ஆகும். இதுதான் விவசாயம் செய்வதற்கும் ஏற்ற மாதமாகும். அதனால் தான், 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழி வந்தது.

எம் முன்னோர்கள் ஒருவருடத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, தை மாதம் முதல் ஆனி மாதம் வரை உத்தராயண புண்ணிய காலம் என்றும், ஆடி முதல் மார்கழிவரை தட்சிணாயணம் என்றும் கூறுவர். அதாவது தட்சிணாயணம் என்றால் மழைக் காலத்தின் தொடக்கத்தையும் உத்தராயணம் கோடை காலத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது. உத்தாராயண காலத்தில் சூரியன் வடக்கிலிருந்து தெற்காகவும், தட்சிணாயண காலத்தில் தெற்கிலிருந்து வடக்காகவும் செல்வதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் ஆடி மாதம் அம்மனுக்குரிய மாதமாகப் போற்றப்படுகிறது.

ஆடி அமாவாசையும், ஆடிக்கிருத்திகையும் ஆடி வெள்ளிகளும் மிக மேன்மையானவையாகும்.

அமாவாசைகளுள் தை அமாவாசையும், ஆடி அமாவாசையும், புரட்டாதி அமாவாசையும் மிகவும் மேன்மையானவை. இந்த மூன்றும் பிதிர்களுக்கானவை. இந்த மூன்று தினங்களும் பிதிர்களை வழிபடத் தக்க நாள்களாகும்.

ஆடி மாதம் பல தெய்வ வழிபாடுகளுக்குரிய உகந்த மாதம். அம்மன் வழிபாட்டுக்கு ஆடிப்பூரமும் சிறந்த நாள் ஆகும். இந்த நாள் பார்வதி அவதரித்த நன்னாள். அம்மன் தவம் செய்கின்ற நாள் என்றும் அம்மனுக்கு வளைகாப்பு நாள் என்றும் ஆடிப்பூரநாளில் அம்மனை வழிபடுகிறார்கள்.

ஆடிக் கிருத்திகையன்று பக்தர்கள் காவடிகள் எடுத்து முருகனை வழிபடுகின்றனர். முருகன் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

ஆடி மாதத்தில் மாரியம்மன் வழிபாடு முதன்மையானது. ஆடி மாதம் முழுவதும் மாரியம்மன் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

குறிப்பாக ஆடி ஞாயிற்றுக்கிழமைகளில் கோயில்களிலும் வீடுகளிலும் அனைவரும் மாரியம்மனை வழிபட்டு வருவார்கள். ஆடிமாத செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக் கிழமைகளிலும் பெண்கள் ஒழுங்காகப் போய்த் தங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேட்டு அம்மனை வணங்கினால் கட்டாயம் வெற்றி கிட்டும். சுமங்கலிகள் குடும்பத்தில் நீடூழி சுகமாக வாழ்வர். கன்னிப்



பெண்களுக்கு விரைவில் திருமணம் கைக்கூடும். குழந்தைச் செல்வம் இல்லாதவர்களுக்கு குழந்தைச் செல்வம் கிட்டும்.

மேலும் ஆடிப் பூர நன்னாளில்தான் ஸ்ரீ ஆண்டாள் சிறி வில்லிப்புத்தூரில் துளசி வனத்தில் அவதரித்தார். பூமாதேவி அவதரித்ததும் ஆடிச் செவ்வாய் ஆகும். ஆடிமாத வெள்ளிக்கிழமைகளில் அம்மன் சந்நிதிமுன் நெய் விளக்கு எலுமிச்சை விளக்கேற்றி வழிபட்டால் சகலவிதமான தோசங்களும் நீங்கும்.

ஆடிமாத வளர்பிறைச் சதுர்த்தியில் மகளிர் விரதமிருந்து நாகத்தை வழிபடுவது நாக சதுர்த்தி விரதம் ஆகும். இதனால் நாக தோசங்கள் அகலும், மக்கட் பேறு கிடைக்கும்.

நாக சதுர்த்திக்கு அடுத்த நாள் வருவது கருட பஞ்சமி விரதம். மகளிர் விரதமிருந்து கருடனை வழிபட்டால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும், நன்மக்கள் கிடைக்கும், செல்வம் பெருகும், உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

மேலும் ஆடிப்பெருக்கு கிழமை, திதி, நட்சத்திரம் முதலிய பொருத்தங்கள் [illegible] கருதாமல், ஆடி மாதம் பதினெட்டாம் நாள் கொண்டாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப் பெருக்கு என்பது ஐம்பெரும் பூதங்களின் ஒன்றான நீர் வழிபாடு, இயற்கை வழிபாடு. இந்த நாளில் இந்த விழாவைக் கொண்டாடும்போது காவிரியாற்றைத் தெய்வக் காவிரியாக மதிக்கிறார்கள். இது தாய்த் தெய்வ வழிபாடாகும், சக்தி வழிபாடாகும். ஆடிப்பெருக்கின்போது பராசக்தியை வழிபடுவதைப் போலவே, காவிரித் தாயை வழிபடுகிறார்கள்.

ஆடிப்பெருக்கின்போது காவிரியின் கரையில் மகளிர் திரண்டு படையல்களைப் படைத்தும் வழிபடுகின்றனர். இப்படி வழிபடுவதால் பெண்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் நீங்கும் என்பது சான்றோரின் வாக்கு.

கயிலைக் காட்சியைக்கண்டு மகிழ விரும்பிய திருநாவுக்கரச சுவாமிகளுக்கு ஆடி அமாவாசையன்று உமாதேவியார் சகிதம் திருக்கையிலைக் காட்சியைத் தந்தருள அதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த தினம் இந்த ஆடி அமாவாசையாகும்.

கற்புக்கரசியாம் கண்ணகிக்கு விழா எடுத்து நாடு வளம் கண்டது ஆடிமாதம் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. அமாவாசை நாள்களில் கடலிலே தீர்த்தம் ஆடுவது மிகவும் நல்லது. கடல் நீர் பாவத்தைக் கழுவும் பரிசுத்த நீராகவும் இறைவனின் அருள் நீராகவும் நினைத்து உயிர் நீத்த பிதிர்களை எண்ணி அவர்களின் பாவத்தைப் போக்கி அவர்களுக்கு முக்தியளிக்கும் வண்ணம் இறைவனை வேண்டி நீராடல் வேண்டும். புனித தலங்களில் இவ்வாறு நீராடி விரதம் இருக்கும் மரபு பல ஆலயங்களில் இருக்கிறது.

மேலும் ஆடிப்பூரம் உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினமாகும். இந்தத் தினத்தில் அம்பாள் ஆலயங்கள் தோறும் அம்பாளுக்கு ருது சோபன வைபவம் சிறப்பாக நடைபெறும். இந்தத் தினம் அம்பாள் விரதத்துக்கும் தரிசனத்துக்கும் உகந்த நாளாகும். அம்பாளின் எட்டு வகை சித்திகளையும் பெற இந்த நாள் வழிபாடு உன்னதமானது.



# நவாலிப் படுகொலையின் 21 ஆவது ஆண்டு நினைவு



செ.ரமேஷ்

தமிழர் வரலாற்றில் மக்களால் ஜீரணித்துப் பார்க்க முடியாத படுகொலை என்றால் அது நவாலி படுகொலையாகும்.

இந்தப் படுகொலையின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (09.07.2016) ஆகும்.

ஆலய வீதிகளில் தஞ்சமடைந்த வேளையில் 13 குண்டுகளுக்கு 147 பேர் சாவடைந்த கோரமான தாக்குதல் சம்பவத்தை தமிழர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். முன்னாள் ஆட்சியாளர்களின் பணிப்புரையின்பேரில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 147 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை நாம் ஒரு கணம் மீண்டும் மீட்டிப்பார்க்கின்றோம். இந்தக் கொடுமையான நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலய உயிரிழப்பு சர்வதேச சமூகத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியதுடன், தமிழ் மக்களைச் சொல்லொணாத் துயரத்துக்கும் இட்டுச் சென்றது. கடந்த 1995 ஆம் ஆண்டு ஈழத் தமிழர்களின் வரலாற்றில் நவாலியில் இரத்த ஆறு ஓடிய ஒரு கோரமான கொடிய நாள் ஜூலை 9ஆம் திகதியாகும்.

அன்றுதான் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் ஸ்ரீ கதிர்காம முருகன் (சின்னக்கதிர்காமம்) ஆலயம் என்பவற்றின் மீதான விமானத் தாக்குதலில் அப்பாவிகளான 147 மக்கள் காவு கொள்ளப்பட்டனர். வலிகாமம் முழுவதும் இடம்பெற்ற வான் தாக்குதலால் அந்தப்பகுதி முழுவதும் அதிர்ந்து கொண்டிருந்த வேளையில், மாலைநேரத்தில் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருந்த தருணத்தில் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை அது. வடமாகாணத்தின் நவாலியூர் வரலாற்றில் இந்த இரத்தக்கறை படிந்த நாளில் நிகழ்ந்த உயிரிழப்புக்களை தமிழினம் ஒருபோதும் மறக்காது, மறக்க முடியாது என்று அன்றைய நிகழ்வையொட்டி லண்டன் பி.பி.சி.தமிழோசை செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது. முன்னோக்கிப் பாய்தல் எனப் பெயரிட்ட (லீப் போர்வேட்) இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியிலிருந்தும் அளவெட்டியிலிருந்தும் மிகக்கொடூரமான முறையில் எறிகணைத் தாக்குதல்களையும் குண்டுத்தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

திடீரென வலிகாமம் தென்மேற்கு, மேற்கு, தெற்கு, வடக்கு பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள், ஆலயங்கள், பொது நிலையங்கள்,

**"நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயமும், சின்னக்கதிர்காமம் ஆலயமும் அதிர்ந்தன. முற்றாக அழிந்து சிதைந்தன.**

**சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். இந்த நிகழ்வில் கையிழந்து, காலிழந்து, தலையிழந்து, வீதியில் சிதறி, குற்றுயிராகக் கிடந்த மக்களை இலகுவில் மறந்துவிட முடியாது. சுமார் 360 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பயனளிக்காத நிலையில் நீண்ட நேரம் இரத்தம் சிந்தி உயிரிழந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.**

அரச மற்றும் பொது நிறுவனங்களை நோக்கி அதிகாலை 5.20 மணியில் இருந்து விமானத் தாக்குதல்களும் எறிகணைத் தாக்குதல்களும் சரமாரியாக நடத்தப்பட்டன. அந்த வேளையில், சகல வீதிகளிலும் உலங்கு வானூர்திகளின் தாக்குதல்கள் மற்றும் அகோரமான எறிகணைத் தாக்குதல்களினால் வீதிக்குவீதி இறந்தவர்கள், காயமடைந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வாகனங்கள்கூட இல்லை. வாகனங்களை இயக்குவதற்கு எரிபொருள்களும் அற்ற பொருளாதாரத் தடையால் இந்த அவல நிலை காணப்பட்டது. அவர்களைக் காப்பாற்ற மருந்தகங்களோ, வைத்தியசாலைகளோ இயங்க முடியாத அவல நிலை,

வைத்தியசாலைகளிலும் மருந்துகளோ, மருத்துவர்களோ காணப்படாத சூழல் நிலவியது. இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் நாம் மறுக்க முடியாது. அன்றைய தினம் குடா நாட்டின் பல்வேறு வீதிகளின் ஊடாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயத்திலும் தாகம் தீர்ப்பதற்காக அமர்ந்து களைப்பாறி அசதியால் படுத்து உறங்கினர்.

அந்தவேளையில் யாழ்.நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து தொடர்ச்சியாக 13 குண்டுகள், தான்தோன்றித்தனமாக மக்கள் ஒன்று கூடியிருந்த மேற்படி இரு ஆலயங்கள் மீதும் வீசப்பட்டன. அவ்வளவுதான் நவாலி கிராமம் ஒரு கணம் அதிர்ந்தது. வீதிகளில் காணப்பட்ட மரங்கள் முறிந்து வீழ்ந்தன.வீடுகள் தரைமட்டமாகின. மதில்கள் வீழ்ந்து நொறுங்கின. அந்தப் பகுதி முழுவதும் பெரிய புகைமூட்டம் உருவானது. நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயமும் சின்னக்கதிர்காமம் ஆலயமும் முற்றாக அழிந்து சிதைந்தன.

சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். இந்த நிகழ்வில் கையிழந்து, காலிழந்து, தலையிழந்து, வீதியில் சிதறி, குற்றுயிராகக் கிடந்த மக்களை இலகுவில் மறந்துவிட முடியாது.

சுமார் 360இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பயனளிக்காத நிலையில் நீண்ட நேரம் குருதி சிந்தி உயிரிழந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அன்றைய தாக்குதலில் பொதுமக்கள் சேவையில் பங்குகொண்ட வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராசா, சில்லாலை பிரிவு மூத்த கிராம அலுவலரான பிலிப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை ஆகியோர் சேவையின்போது அந்தச் சம்பவத்தில் சாவடைந்த அரச சேவையாளர்கள் ஆவர். அன்றைய தினம் மக்கள் தொண்டுப் பணி யில் ஈடுபட்டு, உணவு, குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த 48 தொண்டர்களும் அந்தந்த இடத்தில் துடிதுடித்து உயிரிழந்ததை மறக்க முடியுமா? என்பதை இந்தச் சம்பவம் சுட்டிநிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜவகர்லால் நேரு

நேருவின் மனதில் பதிந்திருந்த தேசபக்தி மேலும் எழுச்சி பெற்று வளர்ந்தோங்கியது. நேரு இந்திய சுதந்திரத்தை எண்ணியவாறே தாய்நாட்டையே நினைத்துக் கொண்டிருந்தார்.

அவர் பாரிஸ்டர் பட்டம் பெற்று இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதும் அலகாபாத்தில் உயர்நீதிமன்ற வழக்கறிஞராகத் தொழில்புரிந்தார்.

1916 ஆம் ஆண்டு நேருஜிக்குத் திருமணம் நடைபெற்றது. காஷ்மீரத்துப் பண்டிதர் குடும்பத்தைச் சேர்ந்த கமலாவை மணம் செய்து கொண்டார். தில்லியில் இத்திருமணம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. கமலா படித்த பெண். சிறந்த பண்பாட்டில் வளர்ந்த அவர் நேருவுடன் மனமொன்றிப் பழகியதைப் பலரும் பாராட்டினர். இருவரும் பல இடங்களுக்கும் சென்றி ருக்கிறார்கள்.

இந்திய சுதந்திரப் போரில் நேரு பலமுறை சிறை வாசத்தை அனுபவித்திருக்கிறார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் நாடெங்கும் நிகழ்ந்தது. 1921 ஆம் ஆண்டு முதல் முறையாக நேரு கைது செய்யப்பட்டார். 87 நாள்கள் சிறையில் இருந்தார்.

பிரிட்டன் அரசினால் நேரு கைது செய்யப்பட்டு பலமுறை சிறை சென்று கொடுமைகளுக்கு ஆளானார். லக்னோவிலும், கல்கத்தா, அல்மோரா, கோரக்பூர், அகமத் நகர் கோட்டை ஆகிய இடங்களிலும் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். நம் நாட்டில் 1921 முதல் 1945 வரை நிகழ்ந்த எல்லாப் போராட்டங்களிலும் கலந்துகொண்ட நேருவை சிறையில் 9 முறை அடைத்திருக்கின்றனர். அவர் வாழ்வில் சிறைவாசம் அனுபவித்த நாள்கள் 3, 262 ஆகும். சிறைச்சாலையில் அடைபட்ட நேருவுக்கு விடுதலை கொடுக்குமாறு சிறை வாசலில் இந்திய மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். நேரு ஒருமுறை அகமத் நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தார். இது அவரது ஒன்பதாவது சிறைவாசமாகும்.

(திங்கட்கிழமைகளில் தொடரும்)



# வரலாற்றில் இன்றைய தினம்

1740 - லிற்றில் ரஷ்யாவிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.

1798 - அமெரிக்கப் புரட்சிப் போரில் சிதைவடைந்த அமெரிக்க கடல் அணி மீள உருவாக்கப்பட்டது.

1801 - பிரான்ஸ் வானசாஸ்திரி ஜீன் லூயிஸ் பொன்-அடுத்து 27 வருடங்களில் தோன்றும் 36 வால் நட்சத்திரங்களைக் கண்டு பிடித்ததன் முன்னோடியானார்.

1833 - வெள்ளை நிற குடியேற்ற வாசிகளைக் கொன்றமைக்காகத் தேடப்பட்ட ஆஸ்திரேலியப் பழங்குடிப் போராளி யோகன் கொல்லப்பட்டார்.

1848 - லண்டனில் வோட்டர் லூ புகையிரத நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

1882 - ஆங்லோ - எகிப்தியப் போரின் ஒரு பகுதியாக பிரிட்டன் மெடிற்றேனியன் தொடரணி எகிப்தின் அலெக்சாண்டிரியா மீது குண்டு வீச்சைத் தொடங்கியது.

1893 - லிபரல் ஜெனரலும், அரசியல் வாதியுமான, ஜோஸ் சன்டோஸ் ஷெலாயா தலைமையிலான புரட்சியில், நிக்கரகுவாவின் அதிகாரம் பறிக்கப்பட்டது.

1895 - அகஸ்ரி மற்றும் லூயிஸ் லூமியர் சகோதரர்களால் சலனப்படத் தொழில்நுட்பம், விஞ்ஞானிகளுக்கு விளக்கிக் காட்டப்பட்டது.

1897 - பலூனில் வட துருவத்துக்கான பயண முயற்சியை சலமோன் ஓகஸ்ட் அன்ட்றீ, ஸ்பிட்பேர்கனிலிருந்து தொடங்கினார். இதன்போது விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

1919 - எட்டு மணித்தியால வேலையும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறையும் நெதர்லாந்தில் தொழிலாளர் சட்டமானது.

1921 - ஜரிஷ் சுதந்திரப் போரில் சண்டை நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

- வெள்ளை இராணுவத்தினரிடமிருந்து மொங்கோலியாவை செம்படை கைப்பற்றி மொங்கோலியா மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது.

1962 - முதலாவது செய்மதி ஊடான தொலைக்காட்சி ஒளிபரப்பப்பட்டது.

1971 - சிலியில் செம்புச் சுரங்கங்கள் தேசிய மயமாக்கப்பட்டன.



# உண்மைக்கு உடை இல்லை



ஓர் ஊரில் உண்மை, பொய் இரண்டும் அருகருகே வசித்து வந்தன. இரண்டும் பரம எதிரிகள் என்பது உங்களுக்குத் தெரியும்.

உண்மை எப்போதுமே புத்தாடையோடு காணப்படும். அமைதியானது. அன்புமயமானது. இன்னும் பல நற்குணங்கள் அதனிடம் இருந்தன. அதனால், நல்லோர் உண்மையை நேசித்தனர்.

ஆனாலும், உண்மை எப்போதும் மறைவாகவே இருந்தது. தன்னை அரிதாகவே வெளிப்படுத்தியது. அப்படி வெளிப்பட்டபோது, மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

பொய்யின் நிலையோ இதற்கு நேர் எதிர். எப்போதும் மனிதர்கள் மத்தியில் உலவிக்கொண்டே இருந்தது. அழுக்கு உடையில் வலம் வந்தது. நல்ல மனிதர்கள் அதனுடன் பழகுவதைத் தவிர்த்தனர். ஆனால், கெட்டவர்கள் பொய்யை மிகவும் விரும்பினர். உண்மையிடம் இருந்து விலகி இருப்பதுதானே அவர்கள் வழக்கம்?



ஒரு நாள் உண்மையும் பொய்யும் குளத்தில் நீராடிக்கொண்டிருந்தன. உண்மை, தனது அழகிய உடைகளை ஒரு கல் மீது வைத்திருந்தது.

இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொண்ட பொய், உண்மையின் உயர்தர உடைகளைத் திருடி அணிந்துகொண்டு ஓட்டம் பிடித்தது. குளத்தில் இருந்து வெளியே வந்த உண்மைக்கு அதிர்ச்சி. அது, பொய்யின் அழுக்கு உடைகளை அணிய விரும்பவில்லை. அதைவிட உடையின்றி இருப்பதே நல்லது என எண்ணியது. இன்று நாம், பொய்யை பகட்டான உடையிலும், உண்மையை உடை ஏதும் இல்லாமலும் காண்கிறோம்.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதச் சின்னங்களை அழிக்காதே...! ஒன்றுபடுத்து...! வேறுபாடு வேண்டாமே....!

மிக நீண்ட ஆயுத ஒடுக்குமுறைக்குள்ளும் இன அழிப்பினுள்ளும் அமிழ்ந்து போன தமிழ் சமூகம் இன்னமும் தங்களைச் சுதாகரித்துக் கொள்ளவில்லை. அந்த வலியின் தீட்டுக்களில் இருந்து விடுதலை பெறவில்லை. திட்டமிட்ட நில அபகரிப்பு, உயர் பாதுகாப்பு வலயம், காணாமற் போகச் செய்தல்கள், ஆட் கடத்தல்கள் என்ற அத்திபாரங்களின் நிலையற்ற தன்மையினுள் ஆதாரமின்றி தத்தளித்திருக்கின்றனர்.

இந்த நிலையிலே அரசு நல்லிணக்கச் செயற்பாடு என்ற போர்வையில் தமிழ் மக்களிடமிருந்து திட்டமிட்டு அபகரித்த பூர்வீக நிலங்களை அவ்வப்போது சிறிது சிறிதாக விடுவித்து வருகின்றது. ஆனாலும் அங்கே தமிழ் மக்கள் இயற்கையோடு ஒன்றித்து, அரவணைத்து நல்லிணக்கமாக வாழ்ந்தார்கள் என்பதற்கான எந்த அடையாளங்களும் தென்படவில்லை. அந்த சார்பு நிலைகள் அத்தனையும் அழிக்கப்பட்டுள்ளன. அரசும் அவர்கள் சார்ந்த அடக்குமுறை இராணுவமும் ஆக்கிரமிப்பாளர்களான தங்களின் அடையாளமிடல்களை, மதச் சார்பான போதனைகளை எங்கும் நிலை நிறுத்தியுள்ளனர்.

அண்மையில் வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வீமன்காமம் பிரதேசத்திலே அமைந்திருந்த விநாயகர் ஆலயம் முற்றாக இடித்தழிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்திலே பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு-கிழக்குப் பிராந்தியங்களிலே எந்தவித சலனமுமின்றி விகாரைகள் உருவங் கொள்கின்றன. இவை வரவேற்கக்கூடிய விடயங்களா..? இல்லை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை...!

ஆக, பிற சமயக் கொள்கைகளையும் மதச் சின்னங்களையும் வெறுக்காமல் மதித்தல் வேண்டும். அவற்றை எதிர்ப்பு இன்றி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஆக்கிரமிப்பின் மூலம் தங்கள் மதச் சார்புகளை திட்டமிட்டு நிலை நிறுத்தவும் அவற்றை நியாயப் படுத்தவும் தங்கள் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்யக்கூடாது. பிரிவினைவாதம் கொண்டு அளவுக்கு மீறிய மதப்பற்றின்பால் ஏற்பட்ட அடக்குமுறைகளை இறுகப் பற்றியிருப்பது பொருத்தமானதல்ல. இந்த செயல் நிலைகள் உலகின் எத்தனையோ நாடுகளை நிலைகுலையச் செய்துவிட்டதை அறிந்திருக்கிறோம். அந்த அனுபவங்களை தெரிந்துகொண்டு, அறிந்து கொண்டு நல்லாட்சி அரசாக தங்களை திருத்திக் கொள்ள வேண்டும். அந்தக் கொடிய அரக்கத்தனமான செயல்கள் இல்லாதொழித்து நற் பண்புள்ள மனித சமுதாயமாக, இனமாக மாற்றம் பெற வேண்டும். அப்போதுதான் இவர்கள் உயர்நிலை எய்த முடியும். இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

ஒருமதத்தின் வெற்றியாலும், திட்டமிட்ட திணிப்பாலும் மற்ற மதங்களின் அழிவாலும் நல்லிணக்கத்தை, இனஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியாது. அந்த நம்பிக்கை வீணானது. இதனையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

விதை தரையில் ஊன்றப்படுகின்றது. மண்ணும்-காற்றும்-நீரும் அதைச்சுற்றி உயிர் தருகின்றன. விதை மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ ஆகிவிடுகிறதா...? இல்லையே..! அது செடியாகி வளர்கிறது. தனது வளர்ச்சி விதிக்கு ஏற்பவே அது வளர்கிறது. காற்றையும்-மண்ணையும்-நீரையும் தனதாக்கிக் கொண்டு தனக்கு வேண்டிய ஊட்டமாக அவற்றை மாற்றி ஒருசெடியாக வளர்கிறது. மதத்தின் நிலையும் இதுவே. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கட்டுமே.

இந்துக்கள் இந்துவாக இருக்கட்டுமே. பௌத்தர்கள் பௌத்தர்களாக இருக்கட்டுமே. அதில் மாற்றம் வேண்டாமே. மதச் சார்புகளின் ஊடுருவலும் அவற்றின் திட்டமிட்ட திணிப்பும் வேண்டாமே...! ஒவ்வொருவரும் மற்ற மதங்களின் நல்ல அம்சங்களைத் தனதாக்கிக் கொள்ளலாம். அதைவிடுத்து திட்டமிட்ட அழிப்பை திணிக்கக்கூடாது. மதங்கள் தங்களின் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு, தங்களின் வளர்ச்சி விதியின்படி வளர இடமளிக்க வேண்டும்.

ஆக, மதச் சார்புகளின் சின்னங்களின் புனிதம், தூய்மை, கருணை என்பவற்றை போற்றிப் பாதுகாக்க இடமளிக்க வேண்டும். உதவி செய்...! சண்டை போடாதே..!, ஒன்றுபடுத்து..! அழிக்காதே..!, சமரசமும் சாந்தமும் வேண்டும்...! வேறுபாடு வேண்டாம்..! என்பதை மனதிலிருத்துங்கள்.

காலம் காலமாக அரசிடம் தமிழர்கள் தொடர்பிலும் அவர்களின் தனித்துவ அடையாளமிடல்கள் மீதும் இருந்து வரும் அடிமைப் படுத்தும் அழித்தொழிக்கும் எண்ணங்களை இனிமேல் களைந்தெறிய வேண்டும். கீழ் நிலைப்பட்ட தமது எண்ணமிடல்கள் மற்றும் எல்லையிடல்களைத் தகர்த்தெறிய வேண்டும்..! இதுவே அனைவரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது...!






# நல்ல தூக்கம் இல்லாமல் இருப்பது

## மனநலப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்

தரமான தூக்கம் இல்லாமல் இருப்பதும் மனநலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கக் கூடும். அதற்கான தீர்வு என்ன? உடல் சுகாதாரத்தைப் பேணுவது மட்டுமில்லாமல் நல்ல தூக்கம் வேண்டுமானால், அதற்குச் சில சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:

- தூங்கும் நேரத்துக்கு நிரந்தரமான ஒரு கால அட்டவணையைப் பின்பற்ற வேண்டும். ஒரு சில சந்தர்ப்பச் சூழ்நிலைகள் தவிர, மற்ற நேரங்களில் அதில் பெரிய மாற்றம் இருக்கக் கூடாது. உதாரணமாக இரவு 10 முதல் காலை 6 மணிவரை தூங்கும் பழக்கம் இருந்தால், அதில் பெரிய மாற்றம் செய்யக்கூடாது.
- மாலை வேளைக்கு மேல் உடற்பயிற்சி, ஜிம் பயிற்சி போன்றவற்றைச் செய்வது தூக்கத்தைப் பாதிக்கும். காலையில் செய்தால் புத்துணர்வு கிடைக்கும்.
- மாலை 6 மணிக்கு மேல்கோப்பி, தேநீர் குளிரூட்டிகளில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களைத் தவிர்ப்பது நல்லது. இவற்றில் உள்ள கேஃபின் (Caffeine) என்ற வேதிப்பொருள் தூக்கத்தைக் கெடுக்கும். ஆனால், பாலில் உள்ள செரடோனின் என்ற வேதிப்பொருள் தூக்கத்தைச் சீராக்க உதவுவதால் பால் குடிப்பது நல்லது.
- மதுபானங்கள் ஆரம்பத்தில் தூங்க உதவி செய்வதுபோலத் தோன்றினாலும், நாளடைவில் அதிகப் பாதிப்புகளை ஏற்படுத்தும். அவற்றைத் தவிர்ப்பது நல்லது.
- தூக்கத்தைத் தவிர மற்ற வேலைகளுக்குப் படுக்கை அறையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக, படுத்துக் கொண்டே ரீ.வி. பார்ப்பது, மொபைல் மற்றும் லப்டொப்பைப் பயன்படுத்துவது, புத்தகம் படிப்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- அதேபோல் படுக்கைஅறை தவிர, மற்ற இடங்களில் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும். ரீ.வி. பார்த்துக்கொண்டே சோபாவில் தூங்குவது, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் தூங்குவது போன்றவை கூடாது.
- தூங்கச் செல்லும் முன் ரீ.வி., உணவு போன்றவற்றைக் குறைந்தது ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக முடித்துக்கொள்ள வேண்டும். இரவு உணவு எளிதில் செரிக்கக்கூடியதாக இருப்பது நல்லது.
- தூங்கச் செல்லும் முன் மெல்லிய இசையைக் கேட்பது, புத்தகம் வாசிப்பது நல்லது.
- மதிய நேரத்தில் தூங்குவது இரவு தூக்கத்தின் நேரத்தைப் பகிர்ந்து கொள்வதைப் போன்றது. அதையும் தவிர்க்கலாம்.
- கடைசியாகப் படுக்கைக்குச் சென்று அரை மணி நேரம் ஆகியும் தூக்கம் வரவில்லை என்றால், மேலும் போராட வேண்டாம். படுக்கையிலிருந்து எழுந்து வேறு வேலைகள் இருந்தால் செய்து முடித்துவிட்டு, மீண்டும் தூக்க உணர்வு வந்தபின் படுக்கைக்குச் செல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




**மேடம்:** மனதில் உற்சாகம் பிறக்கும். திட்டமிட்ட பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.


**இடபம்:** முன்யோசனையுடன் பேசுவது நல்லது. தொழில் வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. தாயின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.


**மிதுனம்:** சிலரது பேச்சால் மனவருத்தம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் விழிப்புடன் செயற்படுவது நல்லது.


**கடகம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஆர்வமுடன் செயற்பட்டு பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழிலில் பணவரவு திருப்தியளிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.


**சிங்கம்:** பெருந்தன்மையுடன் நடந்து சுயகௌரவம் பாதுகாத்திடுவீர்கள். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.


**கன்னி:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு வெகுமதிச் சலுகை கிடைக்க அனுகூலம் உண்டு.


**துலாம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். தொழிலில் பொறுப்பு அதிகரிப்பதால், கூடுதல் நேரம் பணிபுரிய வேண்டியதிருக்கும். பணவரவு கிடைக்க தாமதம் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை.


**விருச்சிகம்:** நண்பரின் உதவியால் நன்மை பெறுவீர்கள். மனதில் இருந்த தயக்கம் விலகும். தொழிலில் விற்பனை அதிகரிப்பால் இலாபம் உயரும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.


**தனுசு:** சவால்களை திறமையுடன் எதிர்கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். உறவினரிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற யோகம் உண்டு.



**மகரம்:** எதிரிக்கும் உதவி செய்ய முன்வருவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படுகிற குளறுபடியை தாமதமின்றி சரிசெய்வது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.


**கும்பம்:** எவரிடமும் சொந்த விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் சீர் பெற, கூடுதல் அக்கறை தேவை. குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.


**மீனம்:** மன உறுதியுடன் செயற்பட்டு வருவீர்கள். தாமதமான பணியும் எளிதில் நிறைவேறும். தொழிலில் இலாபம் உயரும். உறவினரின் இல்ல சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்குவர்.



இன்னும் சிறிது நேரம் சகித்திருந்தால் அந்தக் கொலை நடந்திருக்காது "கொசு"



# தனுஷ் படத்துக்கு டாட்டா காட்டிய சமந்தா

வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் வட சென்னை படத்தில் நாயகியாக ஒப்பந்தமானார் சமந்தா. இதற்கிடையே அவர் நாக சைதன்யாவை கரம் பிடிக்க உள்ளதால் இந்த படத்திலிருந்து வெளியேற முடிவு செய்திருப்பதாக கடந்த சில வாரங்களாக தகவல் வெளியானது. அது உண்மையாகி விட்டது. படத்திலிருந்து வெளியேறி உள்ளார் சமந்தா. இது குறித்து விசாரித்தபோது, வட சென்னை படத்தில் சமந்தா நடிக்கவில்லை. இந்தப் படத்தில் நடிக்க அவர் ஒப்புக்கொண்டபோது தமிழில் மட்டும்தான் எடுப்பதாக இருந்தது. இப்போது 3 மொழியில் இந்தப் படம் உருவாகவுள்ளது. அதற்கு 2 வருட கால்ஷீட் தேவைப்படுகிறது. அவ்வளவு நீண்ட நாள்களுக்கு சமந்தாவால் கால்ஷீட் ஒதுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அவர் வெளியேற முடிவு செய்தார் என்றனர்.

நாக சைதன்யாவை மணக்க உள்ளதையொட்டி படத்திலிருந்து வெளியேறினாரா? என்றதற்கு, "அதற்கும் படத்திலிருந்து வெளியேறியதற்கும் சம்பந்தம் இல்லை. திருமணம்பற்றி உறுதியான தகவல் எதுவும் இல்லை. கால்ஷீட் திகதி பிரச்சினை காரணமாகவே அவர் நடிக்கவில்லை" என்கிறது படக்குழுவினர். தற்போது சமந்தாவுக்குப் பதிலாக அமலாபால் உள்ளிட்ட சில நடிகைகளிடம் நடிக்க பேச்சு நடந்து வருகிறது.



இன்க்கிரிமென்ட் கொடு என்டு கேட்டா, என்னடா வேலை செய்தனி என்டு கேட்கிறாங்க. சரி என்டு லீவு கேட்டா, நீ இல்லாம கம்பனி எப்படி நடக்கும் என்டு சொல்றாங்க.

"அட்டக்கத்தி" படம் பாத்திருந்தா...



ராம்குமார் கத்திய எடுத்துருப்பானா?

**ஒரு நடு இரவில் டெலிபோன் மணி ஒலிக்கிறது.**

**கணவன்:** போன் எனக்கா இருந்தா, நான் இல்லை என்று சொல்லிடு...

**மனைவி:** அவரு வீட்ல இருக்காரு.

**கணவன்:** அடியே... என்னடி லூசா நீ? இல்லை என்று சொல்ல சொன்னேன்ல

**மனைவி:** யோவ் பேசாம படுய்யா, அந்த போன் வந்தது எனக்கு.

படித்ததில் பிடித்தது

WhatsApp



# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 8 | 2 | 7 | 4 | 3 | 5 | 6 |
| 4 | 2 | 5 | 3 | 6 | 1 | 8 | 9 | 7 |
| 6 | 7 | 3 | 9 | 5 | 8 | 4 | 2 | 1 |
| 7 | 9 | 4 | 5 | 8 | 3 | 6 | 1 | 2 |
| 5 | 3 | 1 | 6 | 2 | 9 | 7 | 8 | 4 |
| 8 | 6 | 2 | 1 | 4 | 7 | 5 | 3 | 9 |
| 1 | 5 | 7 | 8 | 9 | 6 | 2 | 4 | 3 |
| 2 | 4 | 9 | 7 | 3 | 5 | 1 | 6 | 8 |
| 3 | 8 | 6 | 4 | 1 | 2 | 9 | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 5 |
| | | | | | | | 8 | |
| | | 1 | 8 | | | | | 7 |
| | 6 | 3 | | 1 | 4 | | | |
| 1 | 4 | | 6 | | | | | |
| 7 | | | | | | | | |
| | 8 | 6 | | | | 7 | 4 | 2 |
| | | 2 | | 5 | | | | |
| 4 | 3 | | | | | | 1 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

❋ வீட்டு உபயோகத்துக்காக பிளாஸ்டிக்கால் ஆன பலவித மான பொருள்களைப் பயன்படுத்துவது வழக்கம். அதனை வாங்கிவந்தவுடன் கழுவிவிட்டு உடனே பயன்படுத்தலாம் என்றால் முடியாது. காரணம் அதில் புதிய பிளாஸ்டிக்கின் வாசனை இருந்து கொண்டிருக்கும். பலருக்கு அந்த வாசனை ஒவ்வாமையை ஏற்படுத்துவதாக இருக்கும். அந்த வாசனையை அகற்றிவிட்டு பயன்படுத்துவதற்கு ஒரு வழிமுறை உள்ளது. சமையல் அறையில் பயன்படுத்து வதற்கு வாங்கப்பட்ட புதிய பிளாஸ்டிக் பாத்திரங்களில் சுடு தண்ணீரை பாதியளவு ஊற்றி விட்டு, அதில் கொஞ் சம் கல் உப்பை போட்டு வைக்கவும். 45 நிமிடங்கள் கழிந்த பின்னர் அவற்றை சுத்தமாக கழுவிய பின்பு துடைத்து விட்டால் பிளாஸ்டிக் வாசனை விலகி விடும்.

❋ வீட்டுச் சுவர்களில் ஆணிகள் அடிக்கப்பட்ட துளைகள் அழகை கெடுப்பதுபோல புள்ளியாக தெரியும். அவற்றை உடனே அடைக்காமல் விட்டு விட்டால் அவற்றில் பூச்சி கள் சென்று தங்கி விடும். அந்த துளைகளை அடைப்பதற்கு எளிமையான வழி உள்ளது. வெண்கட்டிகளில் ஒன்றை துகளாக அரைத்து துளைகளில் அடைத்து விட்டு மேலே சுண்ணாம்பு கொண்டு பூசி விட வேண்டும். இரண்டு நாள்கள் சென்ற பின்பு சுவரின் வண்ணத்துக்கு ஏற்றவாறு அவற்றின் மேல் பெயிண்ட் செய்து விடலாம்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 40 | 80 | 120 | 80 | 40 | – | 70 |
| கத்தரி | 120 | 100 | 160 | 140 | 140 | 100 | – | 60 |
| கரட் | 250 | 200 | 160–250 | 200 | 220 | 200 | – | 200 |
| மரவள்ளி | 120 | 80 | 100 | 80 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 240 | 200 | 200 | 180 | 180 | 80 | – | 80 |
| பாகல் | 250 | 200 | 280 | 240 | 240 | 220 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 150 | – | 160 | – | 140 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 130 | 100 | 120 | 140 | 140 | 120 | – | 100 |
| பூசணி | 100 | 120 | 180 | 160 | 160 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 200 | 240 | 260 | 220 | 250 | – | 170 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 120 | 140 | 80 | – | 50 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 600 | 700 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 150 | 100 | 80 | 60 | – | 60 |
| கோவா | 180 | 120 | 160 | 160 | 160 | 180 | – | 130 |
| வெண்டி | 120 | 80 | 220 | 120 | 100 | 80 | – | 50 |
| போஞ்சி | 200 | – | 280 | 240 | 200 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 200 | 120 | 120 | 200 | 180 | 200 | – | 140 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30 | 30 | 30 | – | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 90 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 150 | 200 | 160 | 150 | 160 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 400 | 240 | 260 | 200 | – | 300 |
| இராசவள்ளி | 160 | – | – | 90 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 350 | 280 | 300 | 600 | – | 300 |





# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 800 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 600 | 410 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | – | 600 |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 400 | – | 420 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | 450 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 100 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 400 | 160 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 350 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | 200 | 250 |



# உளுத்தங்களி



## தேவையான பொருள்கள்

பச்சரிசி – 1 கப்
கருப்பு உளுந்து – 1 கப்
கருப்பட்டி – 1 கப்
நல்லெண்ணெய் – 1 கரண்டி அளவு
தேங்காய்த்துருவல் – அரை கப்

## செய்முறை

- அரிசி, உளுந்து இரண்டையும் பதமாக அரைத்துக் கொள்ளவும்.
- கருப்பட்டியைத் தூளாக்கி அரைக் கப் தண்ணீர்விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி ஆற வைக்கவும்.
- அகலமான சட்டியில் மாவைக் கொட்டி அதனுடன் கருப்பட்டி, தண்ணீர் மற்றும் தேங்காய்த் துருவல் சேர்த்து அதனுடன் மேலும் 1கப் தண்ணீர் சேர்த்து நன்கு கலக்கி வைத்து விட்டு பின்பு அந்தக் கலவையை அடுப்பில் வைத்து கட்டி விழாமல் சிறிது சிறிதாக நல்லெண்ணெய் சேர்த்து ஐந்து நிமிடத்துக்குக் கிளறவேண்டும்.
- மா திரண்டு அல்வாப் பதத்துக்கு வரும்போது இறக்கவும். பெண்குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. மாதவிடாய் காலத்தில் முதுகுவலி வராது. எலும்புக்கு மிகவும் நல்லது.

## நாளை

ஆனி-28
செவ்வாய்க்கிழமை – 12.07.2016
திதி: அட்டமி
மு.இ.08.37 வரை
நட்சத்திரம்: சித்திரை
பி.இ.05.16 வரை
ராகுகாலம்: 02.59-04.29 வரை
சுபநேரம்: 10.29-11.59 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் சாதனையாளர்களுக்கு அருணலு மூலம் பல மில்லியன் ரூபா



ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்தவர்களுக்கு கொமர்ஷல் வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்குத் திட்டமான அருணலு கணக்கை வைத்திருந்தால் மேலும் பல மில்லியன் ரூபாவை வெகுமதியாக வெல்லும் வாய்ப்பு கொமர்ஷல் வங்கியின் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்குத் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் அல்லது மாவட்டமட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் முதலாம் இரண்டாம் அல்லது மூன்றாம் இடங்களைப் பெறுகின்றவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை வெகுமதிகளை வழங்கவுள்ளதாக நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கி அறிவித்துள்ளது.

அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்குத் திட்டத்தின் ஊடாக நடைமுறை செய்யப்படும் புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாகவே இந்த வெகுமதி வழங்கப்படவுள்ளது.

**வணிகம்**

இளம் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் கல்வியின் பெறுமதியை அவர்கள் உணரச்செய்யும் வகையிலும் கொமர்ஷல் வங்கியின் அருணலு சேமிப்புக் கணக்குத் திட்டத்தின் ஊடாக 2016ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு அவர்கள் அருணலு கணக்கொன்றை வைத்திருக்கும் பட்சத்தில் சுமார் 382,500 ரூபாவை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இது தொடர்பான வைபவம் இடம்பெறவுள்ளது.

இதனடிப்படையில் முதலாம் இடத்தைப் பெறும் மாணவன் அல்லது மாணவி மாதாந்தம் 2,000 ரூபா தவணைக் கொடுப்பன வின் அடிப்படையில் தனது 18ஆவது வயதில் சுமார் 170,000 ரூபாவைப் பெற்றுக் கொள்ளமுடியும். இரண்டாம் இடத்தைப் பெறுபவர் ரூபா 1,500 மாதாந்த அடிப் படையில் 127,500 ரூபாவையும், மூன்றாம் இடத்தைப் பெறுபவர் மாதாந்தம் 1000 ரூபா அடிப்படையில் 85,000 ரூபாவையும் பெற்றுக்கொள்ள முடியும் என வங்கி அறிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அருணலு கணக்கு வைத்திருப்பவர் தனது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தால் 50,000 ரூபா வரையில் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல் அருணலு கணக்கு வைத்திருப்பவர்கள் தமது பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடித்திருந்தால் முறையே 10,000, 7,500 மற்றும் 5,000 ரூபா என வெகுமதிகளைப் பெறலாம்.

அருணலு புலமைப்பரிசில் மூலம் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவதையும்தாண்டி இந்தப் பணக் கொடுப்பனவானது மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் அதிகரித்துவரும் கல்விச் செலவுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகவும் அமையும் என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதி பொதுமுகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க.

இந்தத் திட்டத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் வங்கி புலமைப்பரிசில் பரீட்சையில் பல்வேறு மட்டங்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற 675 மாணவர்கள் மத்தியில் 5.5 மில்லியன் ரூபாவை பகிர்ந்தளித் துள்ளது. இது நாடு தழுவிய ரீதியில் முதல் மூன்று இடங் களையும் பெற்ற எட்டு மாணவர்கள் மத்தியில் பகிர்ந் தளிக்கப்பட்ட தொகைக்குப் புறம்பானதாகும். சமூக மட்டத்திலான எமது வருடாந்த உயர் நோக்கத்துக்காகக் கல்வி பிரதானமாக கவனம் செலுத்தப்படும் பிரிவாக அமைந்துள்ளது. அருணலு பணப் பரிசுத் திட்டம் அதற்கு பங்களிப்புச் செய்கின்றது என்று அவர் மேலும் கூறினார். (த)

## மாணிக்கக் கல் ஒப்பந்தம் சீனாவுடன் கைச்சாத்து

இலங்கை மாணிக்கக்கல் சம்மேளனம்சீனாவின் குவான் டுங் ஜேம்ஸ் அமைப்புடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இதன்மூலம் இலங்கைக்கும் சீனாவுக்கும் நன்மை பயக்கும் வகையில் புதிய அபிவிருத்திகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன.

இந்த நிலையில் இலங்கையின் ஆபரணத் தொழில் துறைக்குச் சீன நிறுவனம் மேம்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## வாகனப் பதிவுகள் அதிகரிப்பு

கடந்த மே மாதத்தில் இலங்கையில் வாகனப் பதிவுகள் அதிகரித்துள்ளன. எனினும் கடந்த 12 மாதங்களைப் பொறுத்தவரை கணிசமான அளவு குறைவான பதிவுகளே மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரலைப் பொறுத்தவரை முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்துருளிகளின் பதிவுகளில் அதிகரிப்பு காணப்பட்டது.

இந்திய வாகனங்களின் பதிவுகளும் மே மாதத்தில் ஓரளவு குறைந்த பதிவுகளை கொண்டிருந்தன. எனினும் கடந்த 12 மாதங்களைப் பொறுத்தவரை கணிசமான குறைவுப் பதிவை அவை கொண்டிருந்தன. (த)

## நுட்பம்

### சர்ச்சையில் சம்சுங்



தண்ணீர் உட்புகாத (water resistant) தொடுபேசி என வெளியிடப்பட்டிருக்கும் சம்சுங் பேசி உண்மையில் தண்ணீர் உட்புகாத பேசி இல்லை என்று முறைப்பாடு எழுந்திருப்பது அந்த நிறுவனத்திற்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

சம்சுங் நிறுவனத்தின் கலக்ஸி எஸ் 7 அக்டிவ் தொடுபேசியில் தான் இத்தகைய பிரச்சினை வந்துள்ளதாக நுகர்வோரிடம் இருந்து முறைப்பாடுகள் கிளம்பியுள்ளன.

அதே சமயம் எஸ் 7 மற்றும் எஸ் 7 எட்ஜ் பேசிகள் அந்த நிறுவனம் கூறிய படி தண்ணீர் உட்புகாத படியே இருப்பதாகவும், அவை இது தொடர்பான சோதனையில் நல்ல நிலையில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விளக்கம் அளித்த சம்சுங் நிறுவனம் நாங்கள் தண்ணீர் உட்புகாத சம்சுங் தொடுபேசிகளை நன்றாகச் சோதனை செய்து பார்த்த பிறகே அறிமுகம் செய்கிறோம்.

5 அடி ஆழ தண்ணீரில் 30 நிமிடங்கள் அந்த பேசிகள் வைக்கப்பட்டு சோதனை செய்யப்படுகின்றன. இருப்பினும் குறைந்த அளவான முறைப்பாடுகள் வருகின்றன.

"அவை ஏதும் சேதமான போன்களாக இருக்கலாம். ஆயினும் இது தொடர்பான முறைப்பாடுகள் மேலும் அதன் உறுதித் தன்மையை மேம்படுத்த உதவியாக இருக்கும்" என்று கூறியுள்ளது.

ஆனால் சோதனையில் கலக்ஸி எஸ் 7 அக்டிவ் தொடுபேசி 30 நிமிடம் தண்ணீரில் இருக்கும் போது அதன் தொடுதிரை, கமெரா, மற்றும் உட்புற பகுதி என்பன பாதிக்கப்படுவதாக முறைப்பாடு எழுந்துள்ளது.

### 3 சூரியன்களுடன் ஒரு கிரகம்



மூன்று சூரியன்களுடன் கூடிய புதிய கிரகமொன்றை 340 ஒளி ஆண்டுகள் தூரத்தில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சிலியில் உள்ள ஐரோப்பியன் சதர்ன் அப்சர்வேட்டரி எனப்படும் விண்வெளி அறிவியல் அமைப்பில் ஸ்பியர் எனப்படும் அதி நவீன மிகப்பெரிய தொலைநோக்கி பொருத்தப்பட்டுள்ளது. அதன் உதவியுடனேயே விஞ்ஞானிகள் இந்தப் புதிய கிரகத்தை கண்டுபிடித்தனர்.

இந்தக் கிரகம் மூன்று சூரியன்களைக் கொண்டது. இங்கு தினமும் மூன்று சூரிய உதயங்களும், மூன்று சூரிய மறைவுகளும் நடைபெறுகின்றன.

இந்த கிரகம் 16 மில்லியன் வயது உடையது எனக் கணிக்கப்பட்டுள்ளது. இங்கு 580 டிகிரி செல்சியஸ் வெப்பம் நிலவுகிறது. இது வியாழன் கிரகத்தை விட அளவிலும், எடையிலும் நான்கு மடங்கு பெரியதாகும். சூரியனைவிட 80 சதவீதம் பெரியதாகும். ஸ்பியர் கருவியின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட முதல் தூர கிரகம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறை வைக்கப்பட்ட கூடத்தை நேற்று பார்வையிட்ட மைத்திரி

கொழும்பு, ஜூலை 11
45 வருடங்களுக்கு முன்னர் தான் சிறையிடப்பட்டிருந்த மட்டக்களப்புச் சிறைச்சாலைக் கூடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பார்வையிட்டார்.

பாடசாலை மாணவராக இருந்த போது செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுதல் மற்றும் இடதுசாரி அரசியல் கொள்கையுடைய ஒருவராக விளங்கியமை ஆகிய காரணங்களுக்காக 1971ஆம் ஆண்டுப் புரட்சியுடன் எந்தவித தொடர்பையும் கொண்டிராத போதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது.

மட்டக்களப்பு விளையாட்டுத் தொகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுப் பிற்பகல் கலந்து கொண்ட ஜனாதிபதி, தனது கடந்த கால அனுபவங்களை நினைவு கூரும் முகமாக மட்டக்களப்புச் சிறைச்சாலையில் மேற்பார்வைப் பயணத்தை மேற்கொண்டார் - ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (வ-5)

# ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பலரை அச்சுறுத்தினார் பசில்

### அமைச்சர் ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 11
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, கடந்த ஆட்சியில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தினார் என விளையாட்டு துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சுமத்தினார்.

என்னையும், நாடாளுமன்ற உறுப்பினர் அநுர திசாநாயக்கவையும் கோப் குழுவில் வைத்து பசில் ஒரு தடவை தாக்க முற்பட்டார். கடந்த ஆட்சியில் இவற்றுக்கு எந்தப் பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. ஆனால் இன்று நாங்கள் கோப் குழுவிற்கு பாதுகாப்பு வழங்கியுள்ளோம்.



அதுபோல் எத்தனையோ ஊடக நிறுவனங்களைத் தாக்கி, எரித்தும் உள்ளார்கள். இதற்கு என்ன தீர்வு எடுக்கப்பட்டது? அதற்கு இது வரையிலும் ஒரு தீர்வும் பெற்றுக் கொடுக்கவில்லை. இதன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீண்டும் வருவதற்கு மக்கள் பயப்படுகிறார்கள். சிறு குழந்தைகள் கூட ராஜபக்சாக்கள் பெய ரைக் கேட்டுப் பயப்படுகின்றனர் - என்றார் அமைச்சர் தயாசிறி ஜயசேகர. (வ-5)

## ஜி.எஸ்.பி. பிளஸ் நிபந்தனைகள் குறைப்பு

கொழும்பு, ஜூலை 11
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் இலங்கைக்கு வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் 56 இலிருந்து 16ஆகக் குறைக்கப்பட்ட தாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நல்ல எதிர்ப்பார்ப்பொன்றை இலங்கை வைத்துக் கொள்ள முடியும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இந்த வரிச் சலுகை இலங்கைக்குக் கிடைக்குமா? இல்லையா? என்ற தீர்மானம் இன்னும் இரு மாதங்களில் தெரியவரும் எனவும் அமைச்சர் கூறினார். (வ-5)

## நீதியரசர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிக்கிவிடும் அபாயம் உள்ளது - என்றார் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாட்டு நீதிபதிகள் விடயத்தில் விடாப்பிடியாக இருந்தால் உள்நாட்டு விசாரணை கூட இல்லாமல் போய்விடும் என்று டிலான் பெரேரா அண்மையில் தெரிவித்திருந்தார். (வ-5)

## மாணிக்கர்வளவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட வாய்ப்புள்ளது. ஓமந்தை வேப்பங்குளம் காணியை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கு எந்தத் தடைகளும் இல்லை. இவ்வாறு காணி ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

வவுனியா பொருளாதார வலயத்தை நிறுவுவதற்குப் பொறுப்பான நடுவண் அரசின் கிராமிய பொருளாதார அமைச்சு, நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தினுள்ளேயே காணி வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஓமந்தை மாணிக்கர்வளவுக் காணி 9 கிலோ மீற்றர் தொலைவில் இருப்பதால் அந்தக் காணியில் பொருளாதார வலயம் அமைக்க முடியாது என்று கிராமிய பொருளாதார அமைச்சு ஏற்கனவே நிராகரித்தது. வேப்பங்குளம் காணி நகரிலிருந்து 13 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. எனினும் இவற்றில் வலயத்தை அமைப்பது குறித்த சாத்தியங்களை வடக்கு மாகாண முதலமைச்சர் தொடர்ந்து தேடி வருகிறார். (வ-5)

## கொழும்புக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிகளை விசாரணைப் பொறிமுறையில் அனுமதிப்பது தொடர்பிலான சரத்து, அமெரிக்க - இலங்கை - கூட்டமைப்பு பேச்சுக்களின் அடிப்படையிலேயே உள்ளடக்கப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது இதனை மறுத்துரைத்து வருகின்றார். இவ்வாறானதொரு நிலையிலேயே, பிஸ்வாலுடனான கூட்டமைப்பின் சந்திப்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. (வ-5)

## வவுனியா

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குளம் காணி ஏ-9 தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் உள்ளே உள்ளது. மாணிக்கர்வளவு காணியை உடனடியாகப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. தாண்டிக்குளக் காணியை மாத்திரமே இப்போது பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை இருக்கின்றது.

பொருளாதார வலயம் அமைக்கப்படும்போது விவசாயிகள் இலகுவாக வந்து செல்லக்கூடிய நிலை இருக்கவேண்டும். வர்த்தகர்கள் போட்டி போட்டு வாங்கக்கூடிய சூழல் காணப்படவேண்டும். இவை இல்லாவிடின் பொருளாதார வலயம் வெற்றிகரமானதாக இருக்கமுடியாது. இது எனக்குள்ள அச்சம். இதனையும் முதலமைச்சரிடம் தெரியப்படுத்தினேன். முடிவெடுக்க முடியாமல் நாம் இருக்கின்றபோது, வடக்கில் தமிழ் அரசியல்வாதிகளை நம்பி எப்படி முதலீடுகளை மேற்கொள்வது என்று புலம்பெயர்ந்தவர்கள் கேள்வி எழுப்புகின்றதையும் முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டினேன். முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார் - என்றார். (வ-5-101)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலேஸ்வரி நடராசா



வீமன்காமம், மாவிட்ட புரத்தைப் பிறப்பிடமாகவும், யோகபுரம் மத்தி, மல்லாவியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி நடராசா 09.07.2016 சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து- நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான ஈஸ்வரி, கனகரத்தினம் மற்றும் இராசரத்தினம் (நீர்வேலி), இராஜேஸ்வரி (அராலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற உஷா நிதி (முன்னாள் முன்பள்ளி ஆசிரியர் பாரதி நகர்) மற்றும் தவநேசன் (நேசன் - மல்லாவி), காலஞ்சென்ற குகநேசன் மற்றும் லாவண்யா (வாணி - பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும் கிஸோர்(பிரான்ஸ்), யோகராஜி(ராஜி- திருமுறிகண்டி), ஆகியோரின் அன்பு மாமியும் அஜனின்(பிரான்ஸ்), அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய வதிவிடமாகவிருந்த திருமுறிகண்டியில் நடைபெற்று இன்று (11.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருமுறிகண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமுறிகண்டி

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வி ஜெனித்தா தெய்வேந்திரநாதன்



தோற்றம் 28.02.1995 மறைவு 07.07.2016

கந்தரோடை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ஜெனித்தா தெய்வேந்திர நாதன் 07.07.2016 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் தெய்வேந்திர நாதன் - விமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும் றொஜிந்தா, அஜிந்தா,அனித்தா, விஜித்தா ஆகியோர்களின் சகோதரியும் பாலகிருஷ்ணன் (லண்டன்), ஸ்ரீகாந் (வவுனியா), டெஸ்மன் (பிரான்ஸ்), றோய் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இருபாலை சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தியோலை,
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 145 3046 / 077 663 4434

## மரண அறிவித்தல்கள்

### மாதன் கதிரன்


மயிலிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தை இருப்பிடமாகவும் கொண்ட மாதன் கதிரன் (09.07.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் நாவற்குழி ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 84,
300 வீட்டுத்திட்டம், நாவற்குழி

தகவல்:
க. பரமலிங்கம்
(மகன்)

### சிற்பகலாநிதி. செல்லையா சிவப்பிரகாசம்



மண்ணின் மடியில் 21.06.1928 இறைவன் அடியில் 09.07.2016

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்குத்தெரு, இல: 111 ஐ வதிவிடமாகவும் கொண்ட சிற்ப, சித்திர கலாநிதி கலாபூஷணம் செல் லையா சிவப்பிரகாசம் (ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியர் - யாழ் மத்திய கல்லூரி) 09.07.2016 கொழும்பில் காலமானார்.

அன்னார் அன்னலக்சுமியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை - யாழ் மத்திய கல்லூரி அன்புக் கணவரும் துஷ்யந்தன் (ஜேர்மனி), அனுஷ்யந்தன் (வைத்திய அதிகாரி தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் - சுகாதார அமைச்சு, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரியா துஷ்யந்தன்(ஜேர்மனி), வைதேகி அனுஷ்யந்தன்(உதவிப்பணிப்பாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு) ஆகியோரின் அன்பு மாமனாரும் மீரா, ஷீலா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பாட் டனாரும் காலஞ்சென்ற கௌரியம்மா துரையப்பா (அளவெட்டி), நடராஜா(Rolex-அளவெட்டி), சபாரட்ணம் மற்றும் கோபாலசாமி(புட்டபர்த்தி - இந்தியா), சோமசுந்தரம்(சோமு - பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்துதம்பி ஐயா(வட்டக்கச்சி), சிவஞானசுந்தரம் (வட்டக்கச்சி) செல்லம்மா - கனகரட்ணம்(மல்லாகம்), சின்னத்தங்கச்சி குட்டித் தம்பி(கண்மணி - மயிலங்கூடல்) மற்றும் சரஸ்வதி (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர் - நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11.07.2016 திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் கல்கிசை பொதுமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அன்னலக்சுமி சிவப்பிரகாசம் (மனைவி) 011 315 9149
சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன் (மகன்) 071 275 9856

### திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்

பிறப்பு 17 . 12 . 1932



இறப்பு 08 . 07 . 2016

போயிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், பெரியாவுடை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் தற்போது நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் 08.07.2016 வெள்ளிக்கிழமை நோர்வே ஒஸ்லோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குருநாதர் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தேவமலர், அருந்தவராசா, வசந்தமலர், இரஞ்சிதமலர், தவராசா ஆகியோரின் அன்புத் தாயும், திலகவதி, புனிதவதி, காலஞ்சென்ற பகவதி மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம், நடராசா மற்றும் பாலசுப்பிரமணியம், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகராசா (பவளம்), மீனா, அமிர்தலிங்கம், கார்மேகம்நந்தா, கல்பனா ஆகியோரின் அன்பு மாமியும், ஜனார்த்தனி, மோகன் ஜனார்த்தனன், ஜெயகோகுலன், ஆதவன், அஜந்தன், அனந்தன், அரங்கன், அகிலேஷ், ஆதிஸ், தீன சரண்யன், ஸ்ரீமர்த்தினி, யாகினி, யாதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனன்யாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.07.2016 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நோர்வேயில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியாவுடை,
கொல்லங்கலட்டி,

தகவல்:
குடும்பத்தினர்.

| | |
|---|---|
| அருந்தவராசா | (நோர்வே - + 474 580 1539) |
| தவராசா | (நோர்வே - + 474 542 3198) |
| நாகராசா | (நோர்வே - + 479 804 3002) |
| அமிர்தலிங்கம் | (நோர்வே - + 479 057 7547) |
| கார்மேகம்நந்தா | (நோர்வே - + 474 067 2596) |
| அருந்தவராசா | (பிரித்தானியா - + 447 536 796236) |

(செ. 2831) (13.16.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாட்டுப் பங்களிப்பை எவருமே குழப்பக்கூடாது

## நியாயமான - நிரந்தரமான தீர்வை எட்ட இதுவே வழி என்கிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், ஜூலை 11

நியாயமான - நிரந்தரமான தீர்வை அடைவதற்கு பன்னாட்டுப் பங்க ளிப்பை எவரும் மறுக்க முடியாது. உண்மை கண்டறியப்பட வேண் டும். உண்மையின் அடிப்படையில் நீதி வழங்கப்படவேண்டும். மீண்டும் நிகழாமை உறுதிப்படுத்தப்படவேண்டும். இதனூடு அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். அதுவே உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். தற்போதுள்ள சந்தர்ப் பத்தை எவரும் குழப்பாது பொறுமையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன். ஐ.தி.சம்பந்தனின் இரு நூல்களின் வெளியீடு நேற்று, கொழும்பு தமிழ் சங்கத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து தலைமை விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் ஊடாக தமிழ் மக்களின் அரசியல் பலம் குன்றியது. தனிச் சிங்களச் சட்டம் 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இதனூடாகவும் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

இனப் பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடு இதன் பின்னர் முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவில் இது நடைபெற்றது.

1947ஆம் ஆண்டுக்கும் 1981ஆம் ஆண்டுக்கும் இடையிலான காலப் பகுதியில் சிங்கள மக்களின் இயற்கை ரீதியான அதிகரிப்பு 2.5 வீதமாகும். இதே காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக் களின் இயற்கை ரீதியான அதிகரிப்பு 9 வீதமாகும். வடக்கிலும் இவ்வாறான செயற்பாடுகள் இப்போது முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்று இதற்காகத்தான் நாங்கள் சொல்கின்றோம். தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மை பாதுகாக்கப்பட வேண்டும். முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு தமிழர்தான் முதலமைச்சராக இருக்க வேண்டுமென்ற காரணத்திற்கான நாம் அவ்வாறு செய்யவில்லை. பக்குவமான படித்த முஸ்லிம் நபரை எமது முதலமைச்சராக ஏற்றுக்கொள்வதற்கு தயாராகவிருக்கின்றோம். எமது பெரும்பான்மை பாதுகாக்கப்படுவது சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்துவதாக இருந்தால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

பெரும்பான்மை இன சமூக விரோதிகளால் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட பொழுது, தமிழ் மக்களை பாதுகாப்பதற்காக அரசு சட்டம் ஒழுங்கைப் பேணவில்லை. அது பாரதூரமான குற்றமாகும். தமிழ் மக்களில் அரைப்பங்கினர் இலங்கைக்கு வெளியே வாழ்கின்றார்கள். இந்தியாவில் மட்டும் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் மீண்டும் நாட்டுக்கு திரும்பக்கூடிய நிலமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசமைப்பு ஒரு நாட்டின் முதற்சட்டமாகும். தற்போது வரையில் தமிழ் மக்களின் பங்களிப்புடன் ஒரு அரசமைப்பும் நிறைவேற்றப்படவில்லை. பெரும்பான்மை மக்களை எதிர்க்கவில்லை. அவர்களை நாம் நேசிக்கின்றோம். அவர்கள் எமது சகோதரர்கள். நாமும் அவர்களும் சமத்துவமாக வாழவேண்டும். நாம் இரண்டாந்தர குடிமக்களாக வாழமுடியாது. இறைமையின் அடிப்படையில் எமது அபிலாசைகளை ஏற்றுக்கொண்ட அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதுவே எமது நிலைப் பாடு.

நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணயசபையாக மாற்றப்பட்டது. வழிநடத்தும் குழு நியமிக்கப்பட்டு ஒழுங்காக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. புதிய அரசமைப்பு நாட்டுக்கு அவசியமாகவுள்ளது. அரசமைப்பானது தமிழ் மக்களுக்கு மட்டுமானதல்ல. அனைத்து மக்களுக்கும் முக்கியமானது. புதிய அரசமைப்பின் ஊடாகவே தற்போதுள்ள நிலையிலிருந்து நாட்டை மீட்க முடியும். தற்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். இலங்கையின் ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் நாம் எதிர்பார்த்தளவில் கருமங்கள் வேகமாக நடைபெறாது விட்டாலும் கூட முன்னேற்றங்களைக் காணக் கூடியதாகவுள்ளது.

நியாயமான - நிரந்தரமான, நடைமுறைச்சாத்தியமான அரசியல் தீர்வு, அரசமைப்பு ரீதியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு எமது முழு ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக உள்ளோம். தமிழ் மக்கள் நீண்ட காலமாக காத்திருக்கின்றார்கள். அவர்கள் மீண்டும் ஏமாற்றப்பட முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினை பன்னாட்டு மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. பன்னாட்டுக் கண்காணிப்பு தொடர வேண்டுமென எதிர்பார்க்கின்றோம் - என்றார். (வ-5)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 10.07.2016 | வெற்றி வாரம் 2002 | ஊதா
மகரம் 04 20 24 43
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 69,85,160 /-
1919

Galaxy Star
வெற்றி வாரம் 073 | திகதி 10.07.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 15 32 35 52
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 72,63,380/-
1919

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 01 . 05 . 1953



மறைவு 11 . 06 . 2016

**அமரர் மாணிக்கம் பிறைசூடி**

கடந்த 11.06.2016 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் மாணிக்கம் பிறைசூடி அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று 11.07.2016 நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

மீசாலை தெற்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.
077 9627027

# அரச துறையில் அளவுக்கு அதிகமாக நியமனங்களை வழங்கினார் மகிந்த

### தற்போது சம்பளம் வழங்குவதில் திண்டாட்டம் என்கிறார் அமரவீர

**வேலை வாய்ப்பு**

யாழ்,நெல்லியடி,கிளிநொச்சி,சாவகச்சேரி நகரில் இயங்கும் கணினி நிறுவனத்துக்கு Ms.office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தொடர்புகளுக்கு - 0773614572

**மரண அறிவித்தல்**

**மேரி திரேசா அன்ரனிமுத்து**



சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரி திரேசா அன்ரனிமுத்து நேற்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம்-லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் சந்தியா அன்ரனிமுத்துவின் அன்பு மனைவியும் ஞானப்பிரகாசம் காலஞ்சென்ற இருதயநாதர், டேவிட், றொபேட், ஜோசப் லெனாட்,றெஜினோல்ட், காலஞ்சென்ற மேரி பற்றிமாஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (11.07.2016) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித யாகப்பர் ஆலயச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சென்.ஜேம்ஸ் வீதி,
இளவாலை. ச.அன்ரனிமுத்து (கணவர்)

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அரச நிறுவனங்களுக்கு அளவுக்கு அதிகமாக ஆள்சேர்ப்பு இடம்பெற்றது. இன்று அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர.

இது தொடர்பில் கொழும்பு ஊடகத்துக்கு அவர் தெரிவித்ததாவது:

கடற்றொழில் கூட்டுத் தாபனத்திற்கு 745 ஊழியர்களின் சேவையே தேவைப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் ஆயிரத்து 200 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். 455 பேர் மேலதிகமாக சேர்க்கப்பட்டனர். ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும் நெருக்கடியான நிலை ஏற்பட்டது.

6 மாதங்களாக திறைசேரியில் 650 மில்லியன் ரூபாவைப் பெற்றே சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தொடர்ந்தும் சம்பளம் வழங்க முடியாது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கடந்த வாரம் பேச்சு நடத்தினேன். கடற்றொழில் கூட்டுத்தாபனம் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த உண்மை நிலைமையை அவர்களுக்கு தெரியப்படுத்தினேன். மேலதிகமாக 455 ஊழியர்கள் சேவையாற்றுவதையும் குறிப்பிட்டேன்.

ஊழியர்கள் தமது சுயவிருப்பின்பேரில் விலகலாம். அதற்கான இழப்பீடு வழங்கப்படும். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டனர். அமைச்சரவை அங்கீகாரத்தை இந்த விடயத்தில் பெற்றுக் கொள்ளவுள்ளேன்.

இலங்கைப் போக்குவரத்து சபையில் பஸ்ஸுக்கு 6 சாரதிகள் வீதம் கடந்த ஆட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க சபைக்கு சொந்தமான தலங்கம காணியை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறான நிலைமை தொடர இடமளிக்க முடியாது - என்றார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 11

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தொழிற்சங்கம் எதிர்வரும் வாரத்தில் நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்தது.

சுகாதார செவிலியர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஏனைய சேவையாளர்களுக்கு வழங்கும் பணிப் படியை தங்களுக்கு வழங்குமாறு கோரியே போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாளைமறுதினம் புதன்கிழமை மறுநாள் வியாழக்கிழமைகளில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொள்ளும். அதற்கான தீர்வுகள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் 20ஆம் திகதியிலிருந்து மீண்டும் போராட்டத்தை தொடரவுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுதாபன தொழிற்சங்கத்தின் ஊடக பேச்சாளரான எம்.எம்.எஸ்.பண்டார தெரிவித்தார். (வ-5)

## மீள்குடியேற்ற அமைச்சு வழங்கும் வீடுகள் ஓகஸ்டில் பயனாளிகளிடம்

தென்மராட்சி, ஜூலை 11

தென்மராட்சி பிரதேசத்தில் மீள் குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடுகள் அடுத்த மாதம் பயனாளிகளிடம் கையளிக்கப்படும்.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலக வீடமைப்புத் திட்டத்திற்குப் பொறுப்பான அலுவலர் தெரிவித்தார்.

வீட்டுத் திட்டப் பயனாளிகளில் 26 பேருக்கு மூன்றாம் கட்டக் கொடுப்பனவுக்குப் பரிந்துரை வழங்கப்பட்டது. வீட்டுத் திட்டப் பயனாளிகளிடையே ஏற்பட்டுள்ள போட்டியின் பயனாக பல வீடுகளின் கட்டட வேலைகள் நிறைவடைகின்றன.

எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், தனங்களப்பு, கோயிற்குடியிருப்பு ஆகியபகுதிகளில்குடியமர்ந்தவர்கள் உட்பட மீள்குடியேற்ற அமைச்சின் எட்டு லட்சம் ரூபா வீடமைப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட 290 பயனாளிகளும் இந்தியாவிலிருந்து சொந்த இடத்தில் மீளக் குடியமர்ந்த 18 பயனாளிகளுமாக 308 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த மே மாத இறுதியில் வேலைகளை ஆரம்பிக்குமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டது. செப்ரம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் மூன்று மாத காலத்தினுள் வேலைகள் நிறைவு செய்யப் படவேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டது.

இதனையடுத்து கற்கள் மற்றும் மணல் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியபோதிலும் பயனாளிகள் வீடுகளை துரித கதியில் அமைப்பதில் காட்டிய ஆர்வத்தினால், பெரும்பாலான வீடுகள் கட்டட வேலைகள் நிறைவுசெய்து மூன்றாம் கட்டக் கொடுப்பனவுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு முதற்கட்டமாக ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் மூன்றாம் கட்டங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாவும் நான்காம் கட்டத்திற்கு ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபாவும் ஐந்தாம் கட்டத்திற்கு 50 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 7 லட்சத்து 84 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. (வ-9)

## மைத்திரி மீது கோபம் கொண்ட விகாராதிபதி

### நினைவுப் பதாகையை உடைத்தார்



கொழும்பு, ஜூலை 11

மட்டக்களப்பு மங்களா ராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி செல்லவில்லை. இதனால் கோபமடைந்த விகாராதிபதி, ஜனாதிபதியின் பெயர் பொறிக்கப்பட்ட நினைவுப் பதாகையை உடைத்து தரைமட்டமாக்கிய சம்பவம் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் செய்திருந்தார். நிகழ்வில் பங்கேற்ற மட்டக்களப்பு மங்களா ராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர், தமது விகாரைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இதன்போது தம்மால் கலந்து கொள்ள நேரகாலம் போதாது என்று ஜனாதிபதி தன்னிடம் கூறியதாக விகாராதிபதி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மங்களா ராம விகாரையின் ஒரு பகுதி சீரமைக்கப்பட்டு கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட இருந்தது. அப்போது காணப்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக குறித்த நிகழ்வில் ஜனாதிபதியால் கலந்து கொள்ள முடியவில்லை. அதன் பின்னர் பல தடவைகள் ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வருகை தந்தபோதும், தமது விகாரைக்கு வரவில்லை என்று விகாராதிபதி குற்றம் சுமத்தினார்.

மட்டக்களப்பு நகரில் காணப்படும் ஒரே ஒரு பௌத்த விகாரைக்கும் ஜனாதிபதியால் வரமுடியாவிட்டால், அவருடைய பெயர் பொறிக்கப்பட்ட நினைவுப்பதாகையை தொடர்ந்தும் வைத்திருப்பத்தில் எந்தவிதப் பயனும் இல்லை. இதனால்தான் நினைவுப் பதாகையை உடைத்து தரைமட்டம் ஆக்கியதாக மங்களா ராம விகா ராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் குறிப்பிட்டார். (வ-5)


## மலையகத்தில் சீரற்ற காலநிலை

கொழும்பு, ஜூலை 11

மலையகத்தில் தொடர்ச்சியாக காற்று மற்றும் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. கடந்த இரண்டு தினங்களாக இரவு நேரங்களில் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்துவருகின்றது. இதன் காரணமாக தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, ஹட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவ, நானுஓயா, அக்கரபத்தனை, டயகம, தலவாக்கலை, லிந்துலை போன்ற பகுதியில் பனிமூட்டம் காணப்படுகின்றது. போக்குவரத்து பொலிஸார் வாகனங்களில் முன் விளக்குகளை ஔிர விட்டு வாகனங்களை பாதையில் செலுத்துமாறு வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தனர்.

நானுஓயா பொலிஸ் பகுதிக்குட்பட்ட எடின்புரோ தோட்டத்தில் நேற்று அதிகாலை வீசிய பலத்த காற்றினால் மின் கம்பம் முறிந்து விழுந்தது. மின்சாரம் தடைப்பட்டது. அந்தப் பகுதி தோட்ட மக்கள் பாதிக்கபட்டுள்ளனர். (வ-5)



## நாட்டின் பிரதமர் ஒருவர் மட்டுமே

### – லகி எம்.பி

கொழும்பு, ஜூலை 11

நாட்டில் பிரதமர் இருவர் இல்லை. ஜனாதிபதிகள் இருவர் இல்லை. நிழல் அமைச்சரவையில் நியமிக்கப்பட்டவர்கள் தற்பொழுது பதவி விலகி வருகின்றனர்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லகி ஜயவர்தன தெரிவித்தார்.

தவுலகல, வட்டதெனிய பாதையின் 6 கிலோமீற்றருக்கான பாதை அபிவிருத்தி நடவடிக்கையை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டுமே. வேறு எவரும் ஜனாதிபதியோ, பிரதமரோ இல்லை. பசில் ராஜபக்ச எடுத்துச்செல்லும் வேலைத் திட்டத்தினால் கட்சி பேதம் ஏற்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-5)

## கண்காணிப்புக் குழுவே நிழல் அமைச்சரவை

### – மகிந்த

வரவு - செலவுத் திட்ட கண்காணிப்பு உறுப்பினராக நியமிக்கப்பட்ட குழுவானது கூட்டு எதிர்கட்சியின் நிழல் அமைச்சரவையாக பிரகடனப்படுத்தப்பட்டு இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின், நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நிழல் அமைச்சரவையின் பிரதமர் பதவியிலிருந்து, [illegible] என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

## மட்டு. விமான நிலையத்தை திறந்துவைத்தார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூலை 11

290 மில்லியன் ரூபாய் செலவில் மட்டக்களப்பில் சீரமைக்கப்பட்ட, விமான ஓடு பாதையையும் விமான நிலையத்தினையும் நேற்று நண்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து உள்ளூர் விமான சேவையையும் ஆரம்பித்து வைத்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட விமான ஓடுபாதையில் எம்.ஏ.60 விமானத்தின் மூலம் வந்து இறங்கிய ஜனாதிபதிக்கு, கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் மற்றும் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்பளித்தனர்.

விமான நிலையத்துக்கான நினைவுக் கல்லைத் திரை நீக்கம் செய்துவைத்த ஜனாதிபதி, விமான நிலையத்தினையும் திறந்து வைத்தார்.

1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை விமானப் படையின் மட்டக்களப்பு விமான நிலையம், 1983ஆம் ஆண்டு மார்ச் 27ஆம் திகதி விமான சேவைகள் அமைச்சினால் விமானப் படைக்காகவும் சிவில் பாதுகாப்புக்காகவும் வழங்கப்பட்டது. (வ-5)

## காங்கேசன் கடற்கரையில் இளைஞர்கள் மூவர் கைது

அளவெட்டி, ஜூலை 11

காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியில் மதுபோதையில் குழப்பம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை தல்செவன விடுதிப் பகுதியில், திருகோணமலையிலிருந்து சுற்றுலா வந்தவர்களுடன் இளைஞர்கள் முரண்பட்டனர். இதனை அவதானித்த சிவில் உடையில் நின்றிருந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மருத்துவப் பரிசோதனையின் பின்னர் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் மல்லாகம் நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் குறிப்பிடனர். (வ-5-36)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனின் தோல்வியை பெரிதாக எடுக்கவில்லை

*ஜோசிம் லோ தெரிவிப்பு*

யூரோக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் பிரான்ஸிடம் தோல்வியடைந்து அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டமையை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை எனத் தெரிவித்தார் ஜேர்மன் பயிற்சியாளர் ஜோசிம் லோ.

பிரான்ஸ் அணியை விட நாங்கள்தான் சிறப்பாகச் செயற்பட்டோம். வலுவான அணியாகவும் இருந்தோம். கோல் அடிக்க நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. துரதிர்ஷ்டவசமாக அதை கோலாக்க முடியாமல்போனது. உண்மையிலேயே இந்த ஆட்டத்தில் எங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை. வீரர்கள் தங்களால் முடிந்த எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். அவர்கள் மீது குற்றம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் தோல்வியை ஏற்றுக் கொள்ளத் தான்வேண்டும். பெரிய தொடர்களில் இதுபோன்ற அதிர்ச்சித் தோல்விகள் சாதாரணமானவையே என ஜோசிம் லோ மேலும் தெரிவித்தார். (ம)



*விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்*

## கிண்ணம் வென்றார் செரீனா சாதனையும் நிலைநாட்டினார்



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியனானார் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் செரீனாவை எதிர்த்து ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் மோதினார். ஆட்டத்தின் முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் செரீனா. இரண்டாவது செற்றிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய அவர் அந்த செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலியத் தொடரை கெர்பரிடம் இழந்தமைக்கு தகுந்த பதிலடிகொடுத்தார். மட்டுமல்லாமல் அதிக கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களைக் கைப்பற்றிய வரிசையில் 22 கிண்ணங்களுடன் முதலிடத்தில் உள்ள ஸ்டெபிகிராப்பின் சாதனையையும் அவர் சமன் செய்தார். (ம)



## டஸ்ரின் விலகல்

சிகா வைரஸ் அச்சம் காரணமாக ஒலிம்பிக் தொடரிலிருந்து விலகினார் முன்னணி கோல்ப் வீரர் டஸ்ரின் ஜோன்சன்.

தென்னமரிக்க நாடுகளில் சிகா என்ற கொடூர வைரஸ் நோய் பரவியது. இந்த நோய் குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களை தாக்கும். அவ்வாறு தாக்கிவிட்டால், அது வயிற்றுக்குள் இருக்கும் குழந்தையை பாதிக்கும். இதனால் பிரேஸில் நாட்டில் நடக்கும் ஒலிம்பிக் தொடரை வீராங் கனைகள் மட்டுமல்லாமல் சில வீரர்களும் புறக்கணித்தனர். உலகத் தரவரிசையில் இரண்டாம் இடத்திலுள்ள கோல்ப் வீரரான டஸ்ரின் ஜோன்சனும் ரியோ ஒலிம்பிக்கில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

கோல்ப்தரப்படுத்தலில் முதல் நிலை வீரரான ஜேசன்டே, நான்காம் நிலை வீர ரான ரோரி மெக், எட் டாம் நிலை வீரரான அடம் ஸ்கொட் ஆகியோர் ஏற்க னவே விலகுவதாக அறி வித் துள்ள நிலையில் இந்த வரிசையில் டஸ்ரின் ஜோன் சனும் இணைந்தார். (ம)

## வேல்ஸுக்கு நேற்று மகத்தான வரவேற்பு

யூரோ கிண்ணத் தொடரில் அரையிறுதிவரை முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்த வேல்ஸ் அணிக்கு அந்த நாட்டில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டில் யூரோ கிண்ண கால்பந்துத் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மொத்தம் 24 அணிகள் பங்கேற்றன. அவை 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த அணிகளும் புள்ளிகளின் அடிப்படையில் அடுத்த நான்கு இடங்களிலும் இருந்த அணிகளும் சுப்பர் 16 சுற்றுக்கு முன்னேறின. வழக்கமாக யூரோ கிண்ணத் தொடரில் வேல்ஸ் சுப்பர் 16 சுற்றுடன் வெளியேறிவிடும். அந்த அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றதே கிடையாது. இந்த நிலையில் நடப்பு வருடத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றதால் அந்த அணிக்கு சொந்த மண்ணில் நேற்று மகத்தான வரவேற்பு வழங்கப் பட்டது.




வேல்ஸின் கார்டிப் நகரில் சுமார் 10 ஆயிரம் ரசிகர்கள் கூடினார்கள். இவர்கள் மத்தியில் மேற்கூரையில்லாத பேருந்தில் வீரர்கள் வலம் வந்தனர். இந்த ஊர்வலம் கார்டிப் சிட்டி மைதானத்தில் நிறைவு பெற்றது. பின்னர் சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. (ம)

## ரியோவில் வருவேன் போல்ட் தெரிவிப்பு


ரியோ ஒலிம்பிக் தொடரில் நிச்சயம் பங்குபற்றுவேன் எனத் தெரிவித்தார் உசைன் போல்ட்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது, மின்னல் மனிதர் என அழைக்கப்படும் போல்ட் அவ்வப் பொழுது காயங்களுக்கு ஆளாகிவிடுவதால். குறித்த தொடரில் அவரின் பங்கு பற்றல் சந்தேகமாகவே உள்ளது. இந்த நிலையிலேயே போல்ட் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வருடம் காயங்களு



டன் எனது காலம் கடந்து போகிறது. ஒலிம்பிக் தொடர் நெருங்கிவிட்ட நிலையில் நான் இன்னும் எனது உடற் தகுதியை நிரூபிக்கவில்லை. லண்டனில் இந்த மாதம் இறுதியில் நடைபெறவுள்ள டயமண்ட் தொடரில் கலந்து கொண்டு ஒலிம்பிக் தொடரில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெறுவேன். நிச்சயம் ரியோவில் வருவேன் என போல்ட் மேலும் தெரிவித்தார். (ம)



நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ள இந்திய அணி நேற்று வலைப்பயிற்சியை ஆரம்பித்தது. (ம)

## இலங்கை வந்தது ஆஸி.

இலங்கைக்கு எதிரான நீண்ட தொடருக்காக இலங்கை வந்தடைந்தது ஆஸ்திரேலியா.

CRICKET AUSTRALIA VS Sri Lanka Cricket

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள், ஐந்து ஒருநாள் ஆட்டங்கள், இரண்டு ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடர் இந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ள ஆஸ்திரேலிய அணி நேற்று இலங்கை வந்தடைந்தது. காயம் காரணமாக நீண்ட காலமாக அணியிலிருந்து விலகியிருந்த வேகப்பந்து வீச்சாளரான ஸ்ராக் இலங்கைக்கு எதிராகக் களமிறங்குகிறார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.ஆதிக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
மாகாணமட்ட கரம் தொடரில் யாழ். மாவட்ட அணிகள் அத்தனை பிரிவுகளிலும் சம்பியன் கிண்ணங்களைச் சுவீகரித்துப் பெரும் ஆதிக்கம் செலுத்தின.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்த பிரகாஸை எதிர்த்து வவுனியா மாவட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்த நேயன் மோதினார். இதில் பிரகாஸ் 23:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற யாழ். மாவட்ட அணி சம்பியனானது.

பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்த ஈ.டிசாந்தியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்த சபிகாபாணு மோதினார். டிசாந்தி 25:7 என்ற புள்ளிகளின் அடிப்ப டை யில் வெற்றிபெற யாழ். மாவட்ட அணி சம்பியனானது.

ஆண்கள் பிரிவு இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்த குமரேசன், நியூட்டன் இணையை எதிர்த்து வவுனியா மாவட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்த றொசான், தர்சன் இணை மோதியது. இதில் யாழ். மாவட்ட இணை 25:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

பெண்கள் பிரிவு இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்த பவதாரணி, வோஜனா இணையை எதிர்த்து வவுனியா மாவட்ட அணியை பிரதிநிதித்துவம் செய்த சவ்ரினாபாணு, ஜசானாபாணு இணை மோதியது. இதில் யாழ். மாவட்ட அணி 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

## யாழ். சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 10
மாகாணமட்ட ஹொக்கித் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்டம் சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. கோலெதுவும் பதிவுசெய்யப்பட்ட பாடில்லை. எந்த அணியும் ஆதிக்கம் செலுத்தாமலேயே இரண்டாம் பாதியும் நகர்ந்தது. இருப்பினும் ஆட்டம் நிறைவடைவதற்கு ஒரு நிமிடம் இருக்கும் போது யாழ். மாவட்ட அணியின் அரவிந்தன் தனது அணிக்கான முதல் கோலையும் ஆட்டத்தின் இறுதிக் கோலையும் பதிவுசெய்ய 1:0 என்ற கோல் கணக்கில் யாழ். சம்பியனானது. (ம-422)



## பற்றிக்ஸை வீழ்த்தி லூசியா சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 11
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார் சென். லூசியா அணி சம்பியனானது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் பள்ளிமுனை சென். லூசியா அணி மோதியது. கோல்கள் இன்றி முடிவடைந்தது முதற் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைமை தான்.

சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் சம்பியனானது சென். லூசியா அணி. செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாமிடத்தைத் தனதாக்கியது இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி. (ம-23)

## அரையிறுதியில் ஹாட்லி

யாழ்ப்பாணம், ஜூலை 11
பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்ட எல்லேயில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதியில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சித்திவிநாயகர் வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக டிலக்சன் 6 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் சித்திவிநாயகர் வித்தியாலய அணி 7 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 13 ஓட்டங்களால் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## சென். பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 11
பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதல் இருபது நிமிடங்களில் எந்த அணியாலும் கோலைப் பதிவு செய்ய முடியவில்லை. ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கபிலன் முதற் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதற் பாதி.

இரண்டாம் பாதி ஆரம்பித்த மறுநிமிடமே ஸ்ரீபனின் உதவியுடன் பதிலடி கொடுத்தது பற்றிக்ஸ். பந்துடன் இணைந்து நிமிடங்களும் உருண்டோடின. எந்த அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட 4:2 என்ற கோல் கணக்கில் சம்பியனானது பற்றிக்ஸ் கல்லூரி அணி. மன்னார் சென். சேவியர் கல்லூரி அணியை வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது யாழ். மத்திய கல்லூரி அணி. (ம-23)



## புதுக்குளம் ம.வி. அரையிறுதியில்



யாழ்ப்பாணம், ஜூலை 11
பாடசாலைகளுக்கு இடையிலான 19வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு எல்லேயில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குளம் மகா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிதர்சன் 3 ஓட்டங்களையும் கலையரசன், நிரோசன் இருவரும் தலா இரு ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குத் துடுபெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் 8 ஓட்டங்களை மட்டுமே பெற்றதையடுத்து நான்கு ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி. அதிகபட்சமாக டிலக்சன், கஜீபன், டியூர்சன் மூவரும் தலா இரு ஓட்டங் களைப் பெற்றனர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுநீரகம் தேவை**

35 வயது மதிக்கத்தக்க சிறுநீரக நோயாளி ஒருவருக்கு (O+) இரத்த வகை உடைய சிறு நீரகம் தேவை. நல் உள்ளம் கொண்டோரிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
076 8871068 / 076 542 1781

# மெஸ்ஸியை குற்றவாளியாக ஒருபோதும் கருதவில்லையாம்

வரி ஏய்ப்பு விவகாரத்தில் மெஸ்ஸிக்கும் பார்சிலோனா கழகத்துக்கும் கருத்து முரண்பாடுகள் உள்ளதாக எண்ணப்படும் நிலையில், மெஸ்ஸியைக் குற்றவாளியாக ஒருபோதும் கருதவில்லை எனத் தெரிவித்தது பார்சிலோனா நிர்வாகம்.

ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த முன்னணி கால்பந்தாட்ட வீரரான மெஸ்ஸி, பார்சிலோனா கழகத்துக்காகவும் பல ஆண்டுகளாக விளையாடி வருகிறார். இவர் அண்மையில் வரி ஏய்ப்பு வழக்கில் சிக்கினார். மெஸ்ஸியும் அவரது தந்தையும் வரி ஏய்ப்பில் ஈடுபட்டது உறுதிப்படுத்தப்பட்டு இருவருக்கும் 21 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஸ்பெய்ன் நீதிமன்றமே இந்தத் தண்டனையை அவர்களுக்குக் கொடுத்தது. ஸ்பெய்ன் நாட்டின் சட்டத்தின்படி 24 மாதங்களுக்கும் குறைவாக சிறைத்தண்டனை விதிக்கப்படுவோர் சிறைக்குச் செல்லாமல் நன்நடத்தை அடிப்படையில் வெளியில் இருந்தவாறே அதைக் கழிக்கலாம். எனவே மெஸ்ஸி மற்றும் அவரது தந்தை இருவரும் சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மெஸ்ஸியின் பார்சிலோனா கழகம் அவருக்கு ஆதரவாகச் செயற்படவில்லை என மெஸ்ஸியின் தரப்பிலிருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதனால் மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு வெளியேறுகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே பார்சிலோனா நிர்வாகம், மெஸ்ஸியை தாம் ஒரு போதும் குற்றவாளியாகக் கருதவில்லை என்று தெரிவித்துள்ளது. (ம)



**SPOKEN ENGLISH**

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 17.07.2016
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00
வாரநாள் வகுப்புகள் (செவ்வாய், வியாழன்)
காலை 10-12
SAMSON
021 320 3313
077 1570 486

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்..
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
இலவசம்: PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர் : யாழ். வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.
ஆரம்பம்: DELF A1: 23/07/2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

**கருத்தரங்கு A/L2016**
அரசியல் விஞ்ஞானம்
ஆசிரியர்
திரு N.பாபு
செவ்வாய் 12.07.2016
(நாளை) காலை 8 மணி
முதல் 4 மணிவரை
* கையேடுகள் வழங்கப்படும்
* வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்
இடம்: யூனிவேர்சல் யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

**English Classes**
Gr 1-6
077 331 4808

புதுவிதி PUTHU VITHI
இந்த வாரம்
➤ எத்தனை சிப்பாய்களை பிரபாகரன் கொன்றார்?
- ஆடியும் ஜூலையும் கட்டுரையில்....
➤ சரிகிறது கசிப்புக் கோட்டை
- நேரடி ரிப்போர்ட்
➤ நான் பவர்ஸ்ரார் இல்லை
- மருத்துவரின் விளக்கம்
விலை - 20/=
ரூபா 5000 மேற்பட்ட பணப்பரிசிலை வெல்லும் போட்டிகள்
சினிமா, சிறுகதை, கட்டுரைகள், இன்னும் சூடான- சுவாரசியமான விடயங்கள்.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.